

# எஸ்தர்

திருமறை அறிஞர்
பாஸ்டர் A.கிறிஸ்டோபர்

# எஸ்தர்

(எஸ்தர் சரித்திர விளக்கம்)

ஆசிரியர்
திருமறை அறிஞர்
**Rev. Dr. அ. கிறிஸ்டோபர்**

வெளியிடுபவர்
**விண்ணக அப்பம்**
நேருவீதி, சூரம்பட்டி,
ஈரோடு - 9. தென் இந்தியா.

| | | |
|---|---|---|
| RE-EDITION | - | SEPTEMBER 2016 |
| TOTAL COPIES | - | 1000 |
| COPY RIGHT | - | TO AUTHOR |
| PRICE | - | Rs. 40.00 (IN INDIA) |
| BOOK NUMBER | - | T 17 |

FOR DETAILS CONTACT
**WINNAGA APPAM**
No.4/2, NEHRU STREET, SURAMPATTI,
ERODE - 638 009. S.INIDA.
PHONE : (0424) 2271323
Fax : (0424) 2277286
e-mail : winnagaappam@rediffmail.com
Bank A/C : **C. ALEX DHINAKARAN**
Bank of India (Erode Branch)
A/C No. 820210100005638

## என்னுரை

என் இனிய வாசகர்களே!

வாழ்த்துக்கள். எஸ்தர் என்ற தலைப்பில் இரட்சகரின் நாமத்தில் நான் வெளியிட்ட என் புத்தகத்தின் மறு பதிப்பை வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். வாசகர்கள் சிரமமின்றி வாசிக்க வேண்டும் என்பதற்காக பக்கங்களை கூட்டி எழுத்துக்களை பெரியதாக்கி இருக்கிறோம்.

திருச்சபை – தேவனுடைய மணவாட்டி, திருச்சபை – தேவனுடைய சுதந்திரம். இந்த அடிப்படையில் கிறிஸ்துவுக்குள் நமக்கிருக்கும் சிலாக்கியங்களையும் கிறிஸ்துவின் வருகைக்காக நாம் பெற வேண்டிய ஆயத்தத்தையும் இந்நூலில் விளக்கியிருக்கிறேன்.

இந்நூலில் நான் எழுதியுள்ள கருத்துக்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு நான் ஆற்றிய செய்தியை நேரடியாகவும், ஒலிநாடா வாயிலாகவும் கேட்ட பல்லாயிரக்கணக்கானோர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். எமக்கு வந்துள்ள வாசகர்களின் நூற்றுக்கணக்கான கடிதங்கள் அஃதிணை உறுதி செய்கின்றன. பலர் இப்புத்தகத்தைக் கேட்டு தொடர்ந்து கடிதம் எழுதுவதினால் இந்த மறு பதிப்பை அவசரமாக வெளியிடுகிறோம். வாங்கி வாசியுங்கள் ! வருகைக்கு ஆயத்தப்படுங்கள் !!

அன்போடும், ஜெபத்தோடும்
அன்பரின் சேவையில்
அ. கிறிஸ்டோபர்



## உள்ளடக்கம்

அதிகாரம்

1. எஸ்தர் ஆகமம் – ஓர் அறிமுகம்
2. இராஜாவாகிய அகாஸ்வேரு
3. வாய்ப்பை இழந்த வஸ்தி
4. அழிவு பெற்ற ஆமான்
5. மேன்மை பெற்ற மொர்தெகாய்
6. குணவதியான எஸ்தர்
7. மணவாட்டியாகிய எஸ்தர்
8. நட்சத்திரமாகிய எஸ்தர்

# எஸ்தர் ஆகமம் – ஓர் அறிமுகம்

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள வாசகர்களே! அன்பு வாழ்த்துக்கள். இந்தப் புதிய புத்தகத்தின் மூலம் உங்கள் அகம் மகிழும் என்று நம்புகிறேன். பரிசுத்த ஆவியானவர் பரிசுத்த மனிதர்களை ஏவி எழுதி வைத்திருக்கும் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்போது ஏற்படும் பக்தி, பரபரப்பு இவைகளை சொல்லி முடிக்க வார்த்தைகள் போதாது.

ஒரு காலத்தில், வேதாகமம் என்பது வேதனைக்குரிய சுமையாக எனக்கு இருந்தது. அப்பப்பா! ஒரே தொகுப்பில் 66 புத்தகங்களா? ஒரு புத்தகத்திற்குள் இத்தனை அதிகாரங்களா, ஒவ்வொரு அதிகாரத்திற்குள்ளும் இவ்வளவு வசனங்களா, மாபெரும் மலைப்பு ஒரு பக்கம். இது படிக்கவா அல்லது பார்க்கவா என்கிற சலிப்பு ஒரு பக்கம்.

ஆனால் என் இரட்சகர் இயேசு என்னை இரட்சித்த அந்த நாள் முதற்கொண்டு வேதம் பெருஞ்சுமையல்ல அருஞ்சுவை என்பதை அனுபவபூர்வமாக உணர ஆரம்பித்தேன். அந்த நாட்களை நினைக்கும்போது இன்றும் என் உள்ளத்தில் இன்பம் பெருக்கெடுத்து ஓடுகிறது. வேதத்தை எடுத்து வாசிக்கத் துவங்கிய உடனேயே எனக்கு இந்த உலகமே மறந்துவிடும். வாசிப்பேன், வாசிப்பேன், வாசித்துக் கொண்டே இருப்பேன். சில வேளைகளில் கண்ணீர் நிறைந்து கண்கள் இருட்டி விடும். சில வேளைகளில் கதிரவன் மறைந்து பொழுது இருட்டி விடும். அதுவரை வாசிப்பேன்.

நான் ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட போது எந்த வேதாகமக் கல்லூரிக்கும் படிப்பதற்காக உடனே சென்றுவிடவில்லை. ஒரு பெரிய போதகரின் கீழ் பயிற்சி பெறுகிறவனாய் இருந்தேன். அதே வேளையில் பரிசுத்த



ஆவியானவரின் பாதத்தில் மாணவனாக அமர்ந்து வேதத்தைக் கற்றுக் கொண்டேன்.

பரிசுத்த ஆவியானவரின் பாதத்தில் அமர்ந்து படிக்கின்ற ஐக்கியம் இருக்கின்றதே. அது மிக அலாதியான ஒன்று. கலப்பில்லாமல் குழப்பமில்லாமல் கருத்தாக, ஆழமாக கற்றுத் தருவதில் ஆவியானவர் மிக அக்கறையுள்ளவர்.

இந்த எஸ்தர் புத்தகத்தை எழுதத் துவங்கும் போது என் இளமைக்கால நினைவுகள் திரும்ப என் மனத்திரையில் ஓடுவதால் சில வரிகள் இங்கு எழுதி விட்டேன். சற்று பொறுத்துக் கொள்ளுங்கள்.

எனது ஆரம்ப கால வேத பாடசாலையில் நான் மிகவும் விரும்பிய இருவர் எஸ்தர், யோபு என்பவர்களே. இவர்கள் யார்? இந்த இரண்டு பேரை எப்படி சிநேகம் பிடித்தாய் என்று கேட்டு விடாதீர்கள். நான் இங்கே குறிப்பிட்டது பழைய ஏற்பாட்டிலுள்ள தாசனாகிய யோபுவும், ராஜாத்தியாகிய எஸ்தருமே.

இந்த இரண்டு ஆகமங்களை இது வரை எத்தனை முறை வாசித்திருக்கிறேன் என்று எனக்கே தெரியாது. எத்தனை முறை புதியதாக வேதாகமத்தை வாங்கினாலும் அதில் எஸ்தர், யோபு ஆகமங்கள் வெகுசீக்கிரத்தில் எண்ணெய்ப் பிசகு ஏறி பழுப்பு நிறமாகத் தாள்கள் மாறிவிடும். காரணம் எப்பொழுதும் இவைகளையே வாசித்துக் கொண்டிருப்பேன்.

இந்த இரண்டு புத்தகங்களிலும் 52 அதிகாரங்கள் (42+10) அடங்கியுள்ளது. ஒரு வாரத்திற்கு ஒரு அதிகாரம் என்று வாசித்து தியானம் பண்ணினாலும் நேரம் போவதே தெரியாது. அந்த அளவிற்குக் கருத்தாழம் மிக்க வேத பகுதிகள் அவை.

யோபு ஆகமத்தின் 42 அதிகாரங்களை மையமாக வைத்து நான் பிரசங்கித்த செய்திகளை என் தாசனாகிய யோபு என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டேன். அதை வாசித்து பல ஆயிரக்கணக்கானவர்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள். அதற்காகக் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இப்போதும், எஸ்தர் ஆகமத்தை மையமாக வைத்து நான் கொடுத்த செய்திகளையும், எடுத்த வேத பாடங்களையும் நூல் வடிவத்தில் உங்களுக்குத் தொகுத்து அளித்திருக்கிறேன்.

எனது முந்தைய நூல்களை விட இந்நூலில் எழுத்து, விளக்கம் ஆகியவற்றில் சில குறிப்பிடத்தக்க வித்தியாசங்கள் காணக்கூடும். அது தேவையான ஒன்று என்றே கருதுகிறேன். சில இடங்களில் இறையியல் நோக்கிலும், ஒரு போதகன் என்ற முறையில் வியாக்கியான முறையிலும் எழுதியிருக்கிறேன்.

எப்படியும் உங்கள் ஆத்துமா ஆண்டவருக்குள் பலப்பட வேண்டும். அவர் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும் என்கிற வாஞ்சையில் எழுதுகிறேன். எல்லையை மீறி ஆராய்ச்சியில் இறங்கி விடாதீர்கள். அது தொல்லையைக் கொண்டு வந்து விடும். ஆவியில் வாசியுங்கள். அப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

## எஸ்தர் புத்தகம்

வேதாகமத்தில் உள்ள 66 ஆகமங்களில் பல்வேறு சிறப்பு அம்சங்கள் கொண்ட புத்தகம் இந்த எஸ்தர் சரித்திரம். வேதாகமத் தொகுப்பில் இடம் பெறத் தகுதியற்றது என்று சர்ச்சைக்குள்ளான இந்த சரித்திரத்தை ஆவியானவர் அழகாக வடிவமைத்து வேத புஸ்தகத்தில் இடம்பெற வைத்தது மிகப் பெரிய ஆச்சரியம்.



★ வேத புஸ்தகத்திலேயே நேரிடையாகவோ அல்லது நிழலாகவோ தேவனைக் குறிக்கும் பதங்களாகிய கர்த்தர், தேவன், யெகோவா போன்ற குறிப்பிட்ட எந்த வார்த்தையும் இடம் பெறாத ஒரே ஆகமம் இந்த எஸ்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

பழைய ஏற்பாட்டைத் தொகுத்த மறையியல் குழுவினர் இப்படி தேவனை மையப்படுத்தி எழுதப்படாத நூலாகிய இதில் தேவ ஆவியின் வெளிப்பாடு இருக்கமுடியாது என்று யோசித்த வேளையில் அவர்கள் யோசனைகளை மடங்கடித்து வேதத்தில் இப்புத்தகம் இடம்பெற்று இருப்பதற்குக் காரணம் இல்லாமல் இருக்கவே முடியாது. அதனை பின்னர் விளக்குகிறேன்.

★ வேதத்தில் உள்ள 66 ஆகமங்களில் பெண்களின் பெயர் தாங்கி வரும் ஆகமங்கள் இரண்டு மாத்திரமே ஒன்று ரூத், மற்றொன்று எஸ்தர். இந்த இரண்டு புத்தகமும் ஒன்றுக்கொன்று எதிரான திசையில் செல்வது சிந்திக்க வேண்டிய ஒன்று.

ரூத் என்கிற புறஜாதிப் பெண் போவாஸ் என்னும் இஸ்ரவேல் கோத்திரத்தானை மணமுடித்தது ரூத் சரித்திரம். எஸ்தர் என்ற யூதப் பெண் புறஜாதியான அகாஸ்வேருக்கு மணவாட்டியானதைச் சொல்வது எஸ்தர் சரித்திரம்.

ரூத் இயேசு கிறிஸ்துவின் முற்பிதாக்களைப் பெற்றாள். எனவே சரித்திரக்கோர்வை காண்பிக்க ரூத் சரித்திரம் நமக்கு மிகவும் அவசியம். ஆனால் எஸ்தர் புத்தகத்தின் எந்த சம்பவமும் வேத புஸ்தகத்தின் மற்ற ஆகமங்களில் இடம் பெறாதது முக்கியமான ஒன்று. இப்படி இருந்தும் தேவன் இதை வேதத்தில் இணைத்ததற்கு முக்கிய காரணம் இதில் திருச்சபைக்குத் தேவையான செய்தியிருப்பதால் அன்றோ!

★ பழைய ஏற்பாட்டில் ஆகமங்கள், சரித்திரங்கள், ஞான நூல்கள், தீர்க்கதரிசனம் என்ற நான்கு பிரிவுகள் உண்டு என்பதை எனது முந்தைய புஸ்தகங்களில் எழுதியுள்ளது உங்களுக்கு நிச்சயம் நினைவு இருக்கும் என்று நம்புகிறேன்.

★ இதில் சரித்திர புஸ்தகங்களின் தொகுப்பில் கடைசியாக உள்ள புத்தகம். இந்த எஸ்தரின் சரித்திரம். இது முழு வேதாகமத்திலும் 17-ஆவது புத்தகமாக இடம் பெற்று உள்ளது. இதை 10 அதிகாரமாகவும், 167 வசனங்களாகவும் பிரித்துள்ளனர்.

★ இந்த புத்தகத்தில் நான் அடிக்கடி புகழ்ந்து மகிழ்கிற காரியம் ஒன்று உண்டு. முதல் அதிகாரம் முதல் வசனம் இந்து தேசம் (INDIA) முதல் எத்தியோப்பியா வரை உள்ள 127 நாடுகள் என்று ஆரம்பிக்கிறது.

ஆஹா! எத்துணை பாக்கியம் என் தாய்நாட்டின் பெயர் வேத புஸ்தகத்தில் எழுதப்பட்டுள்ளது. எனது வேத புஸ்தகம் எனக்கு அந்நியமான புஸ்தகம் அல்ல. எனது தாயகத்துப் பெயரையும் உள்ளடக்கியுள்ள உன்னத புஸ்தகம்.

★ முழு வேதாகமத்திலும் உள்ள எல்லா வசனங்களிலும் மிக நீண்ட வசனம் இந்தப் புத்தகத்தில்தான் உள்ளது (எஸ்தர் 8:9) (ஆங்கிலம்).

★ மற்ற ஆகமங்கள் ஒவ்வொன்றும் பல ஆயிரம் அல்லது நூற்றாண்டு செய்திகளை உள்ளடக்கியவைகள். ஆனால் எஸ்தர் புத்தகம் வெறும் 10 ஆண்டு சரித்திரத்தை மாத்திரம் நமக்கு சாட்சியாக அறிவிக்கிற புத்தகம்.



★ இந்த ஆகமம் முழுவதும் வாசித்துப் பார்த்தால் தேவனின் பெயரை வெளிப்படையாகப் பார்க்க முடியாது என்பது உண்மைதான். ஆனால் கர்த்தரின் கரத்தின் கிரியைகளை மிகத் தெளிவாக உங்களால் காண முடியும்.

மனித வாழ்வில் நடப்பது எல்லாம் தெய்வச் செயல்தான் என்றும் அவர் தமது ஜனத்தை தக்கசமயத்தில் அற்புதமாய் விடுவிக்கிறார் என்றும் இந்தப் புத்தகம் மிக அழகாக சித்தரிக்கிறது.

அகாஸ்வேரு அழைத்த போது வஸ்தி வராதது தற்செயல் அல்ல. அதன் பின்னே தெய்வச் செயல் இருந்தது.

அகாஸ்வேரு தூக்கம் வராமல் நடபடிகள் புத்தகத்தைப் படித்தது தற்செயல் அல்ல. அதன்பின்னே தெய்வச் செயல் இருந்தது. அந்த அதிகாலையில் ஆமான் அரண்மனைக்கு வந்து நின்றது தற்செயல் அல்ல. அதன்பின்னே தெய்வச் செயல் இருந்தது.

அகாஸ்வேரு கோபத்தால் சென்று திரும்பி வந்த போது ஆமான் கட்டிலில் வீழ்ந்து கிடந்தது தற்செயல் அல்ல அதன் பின்னே தெய்வச் செயல் இருந்தது.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். தேவனே சகலத்தையும் சகலரையும் அடக்கி ஆள்கிறார் என்பதை இப்புத்தகம் மிகத் துல்லியமாகக் காட்டுகிறது.

★ யூத மக்கள் கொண்டாடி வருகிற பூரீம் பண்டிகையின் ஆதாரப் பூர்வமான சரித்திரச் சான்றை இப்புத்தகம் மிக விளக்கமாக எடுத்துச் சொல்வது இதில் அடங்கியுள்ள மற்றொரு சிறப்பம்சம்.

## காலம் :

மேதிய பெர்சிய சாம்ராஜ்ஜிய ஆட்சிக்காலத்தில் பெர்சியாவின் மீது இராஜாவாக இருந்த அகாஸ்வேருவின் காலத்தில் இச்சம்பவம் நடைபெற்றது என்று மிகத் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

அதாவது கி.மு.483 முதல் கி.மு.473 வரை உள்ள 10 ஆண்டுகளைக் குறித்த இந்த சரித்திரப் புத்தகம் அகாஸ்வேருவின் ஆட்சி முடிவுற்ற உடனே எழுதப்பட்டு இருக்க வேண்டும். எனவேதான் எஸ்தர் 10:2 இல் அவனது ஆட்சி முற்றுப் பெற்றதாக எழுதப்பட்டுள்ளது.

வேத சரித்திர ஒழுங்கின்படி எஸ்றா புத்தகத்தில் 6-ஆவது அதிகாரத்திற்கும் 7-ஆம் அதிகாரத்திற்கும் இடைப்பட்ட காலக் கட்டத்தில் இச்சம்பவம் நடைபெற்று இருக்க வேண்டும் என்று எல்லா வேத பண்டிதர்களும் ஒத்துக் கொள்கின்றனர்.

அதாவது சிறைப்பட்டுப் போன யூதர்கள் முதலாவது செருபாபேல் தலைமையில் தாயகம் திரும்பினார்கள். அடுத்து எஸ்றா தலைமையில் தாயகம் திரும்பினார்கள். இந்த இரண்டு திரும்புதலுக்கு இடைப்பட்ட காலத்தில் தான் இந்த சம்பவம் நடைபெற்றது. எஸ்தரில் சொல்லப்பட்ட அனைத்தும் உண்மையான சரித்திர நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

## இப்புத்தகத்தின் ஆசிரியர் யார்?

வேத புஸ்தகத்தில் உள்ள 66 ஆகமங்களும் ஆவியானவராலேதான் ஏவி எழுதப்பட்டுள்ளது என்பது பொதுவான உண்மை. இதற்குக் கருவியாக பயன்பட்டது யார் என்பதை அறிந்து கொள்ளுதல் அவசியம்.



இப்புத்தகத்தை இன்னார்தான் எழுதினார்கள் என்று துல்லியமான குறிப்பு திருமறையில் இல்லை. எனவே இதன் ஆக்கியோனைக் குறித்து பல கருத்து வேற்றுமைகள் வேதப் பண்டிதர்களிடத்தில் உண்டு. எனினும் சாதகமான குறிப்புகளை வைத்து இதை எழுதியது யார் என்ற முடிவுக்கு வரப் போகிறோம்.

## இதன் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் :

(1) இந்த சம்பவம் முழுவதும் சூசானை மையமாக வைத்து எழுதப்பட்டு இருப்பதாலும், சூசான் அரண்மனையின் உள் அமைப்புகள் மிகத் தெளிவாக புள்ளி விவரங்களுடன் எழுதப்பட்டு இருப்பதால் இதன் ஆசிரியர் நிச்சயம் சூசான் அரண்மனையில் இருந்திருக்க வேண்டும்.

(2) பெர்சிய ராஜ்யபாரத்தின் அரசியல் முறைகள், பழக்க வழக்கங்கள், தின வர்த்தமானங்கள் ஆகியவற்றைக் குறித்த சரியான ஒழுங்கு இருப்பதால் நிச்சயம் இதன் ஆசிரியர் மேதிய பெர்சிய அரசின் முக்கியப் பொறுப்பு வகித்து இருக்க வேண்டும்.

(3) எஸ்தரின் பூர்வீகம், யூதர்களைக் குறித்த கரிசனை ஆகியவற்றோடு எழுதியிருப்பதால் இதன் ஆசிரியர் ஒரு யூதனாகவும், அதே வேளையில் எஸ்தரை நன்கு அறிந்தவராகவும் இருந்திருக்க வேண்டும்.

(4) யூதர்கள் தங்களின் பூரீம் பண்டிகையின் போது இந்த எஸ்தர் புத்தகத்தை வாசிப்பார்கள். எனவே, யூதமார்க்கத்தில் கனம் பொருந்திய மனிதர் இதை எழுதியிருக்க வேண்டும்.

இந்த நான்கு தகுதிகளில் 3 தகுதிகள் மொர்தெகாய்க்கு பொருந்துகிறது. கடைசித் தகுதி எஸ்றாவுக்குப் பொருந்துகிறது.

எனவே, வேத பண்டிதர்களின் கருத்துப்படியும், நமது காரிய ஆய்வின்படியும் இந்தப் புத்தகத்தின் மூலத்தை மொர்தெகாய் எழுத அதற்கு முழுமையை எஸ்றா கொடுத்தார் என்பதே மிகச் சரியானது.

## இப்புத்தகத்தின் உட்பிரிவுகள் :

எஸ்தர் சரித்திரம் மொத்தம் 10 அதிகாரங்களை உடையது. யூதர்களை முக்கியப்படுத்தி இப்புத்தகத்தைப் பார்த்தால் 1 முதல் 4 அதிகாரங்கள் யூதர்கள் பயத்தோடு கடந்து வந்த வாழ்க்கையையும், 5 முதல் 10 அதிகாரங்கள் யூதர்கள் ஜெயத்திற்குள் கடந்து வந்த வாழ்க்கையையும் குறித்த நுட்பமான வரலாற்றைக் காண முடியும்.

எஸ்தர் புத்தகம் விருந்தில் ஆரம்பித்து விருந்தில் முடிவது சிறப்பான காரியம். 1. அகாஸ்வேரு விருந்து 2. எஸ்தரின் விருந்து. 3. பூரீம் விருந்து. இவைகளை மையமாக வைத்தே ஒரு பெரிய வரலாறு உண்டாகியிருக்கின்றது.

பொதுவான அடிப்படை அளவுகோலின்படி வேதத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகத்திலும் கிறிஸ்துவின் நிழல் அவர் உண்டாக்கும் மீட்புக்கு முன் அடையாளம் எல்லா ஆகமங்களிலும் இருக்கும்.

உதாரணமாக ஆதியாகமத்தில் ஆதாம் ஏவாளுக்குத் தோல் உடையை தேவன் கொடுத்தார். அதாவது நிச்சயம் ஒரு மிருக ஜீவன் அடிக்கப்பட்டு இரத்தம் சிந்தியிருக்க வேண்டும். அதாவது உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவை இந்த சம்பவம் நமக்கு நினைப்பூட்டுகிறது.



நோவாவின் பேழை, யாக்கோபின் ஏணி, இயேசு கிறிஸ்துவுக்கு நிழலாயிருக்கிறது. ஆபேல், ஈசாக்கு, யோசேப்பு போன்றோரின் வாழ்வு இயேசுவின் வாழ்வுக்கு சரியான நிழலாட்டமாய் இருக்கிறது.

யாத்திராகமத்தில், பஸ்கா ஆட்டுக்குட்டி, பிரதான ஆசாரியனாகிய ஆரோன், மன்னா, அடிக்கப்பட்ட கன்மலை இவைகள் இயேசுவிற்கு மிகச் சிறப்பான முன்னடையாளம்.

லேவியராகமத்தில், தகனபலி, சமாதான பலி, போக்காடு. இவைகள் இயேசுவுக்கு முன்னடையாளம்.

எண்ணாகமத்தில் வெண்கல சர்ப்பம், அடைக்கலப் பட்டணங்கள் இயேசுவுக்கு நிழலாட்டம்.

உபாகமத்தில், மோசே இயேசுவுக்கு முன்னடையாள மாகத் திகழ்கிறார். இப்படி வேதத்தில் எந்தப் பகுதியை எடுத்தாலும், அதன் மையக்கருத்தும் நுண்ணிய அஸ்திபாரமும் கிறிஸ்துவைப் பற்றியதாகத்தான் இருக்கும்.

இங்கே குறிப்பிடப்பட வேண்டிய காரியம் என்ன வென்றால், இந்த அளவுகோலின்படி எஸ்தர் சரித்திராகமத்தை நோக்கிப் பார்த்த வேத பண்டிதர்கள் இதில் கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான காரியம் ஏதும் இல்லை என்று பல நூற்றாண்டுகள் சோர்ந்து போயிருந்தனர் என்பதே.

ஆனால் காலகாலமாய் மறைக்கப்பட்டிருந்த ஆழ்ந்த புதையல்களை ஆவியானவர் தமது சபைக்கு வெளிப்படுத்த சித்தம் கொண்டபடியால் இந்தக் கடைசி நாட்களில் மறைபொருளை விளக்கி எஸ்தர் சரித்திரத்தை சபைக்கு ஆசீர்வாதமாக மாற்றியிருக்கிறார்.

வெறும், பூரீம் பண்டிகையின் போது மட்டுமே வாசித்துப் பழகிய இந்த சரித்திரத்தை இன்று சபை பூரிப்போடு வாசித்துப் பயன்பெற, பக்குவம் பெற, பரிசுத்தம் பெற வெளியரங்கமாக்கி யிருப்பது எத்துணை ஆசீர்வாதம் தெரியுமா?

எஸ்தர் 3:15 வசனத்தின் கடைசி பகுதியையும் 8:15 வசனத்தின் கடைசி பகுதியையும் சற்று வாசித்து சிந்தித்துப் பாருங்கள்.

சூசான் நகரம் கலங்கிற்று எஸ்தர் 3:15

சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது எஸ்தர் 8:15 சூசான் நகரத்தின் இரண்டு அனுபவங்களைப் பாரீர். முந்தினது கலக்கம். பிந்தினது ஆர்ப்பரிப்பு. கலக்கத்திற்கு காரணம் ஒட்டு மொத்தமான மரணத்தீர்ப்பு. ஆர்ப்பரிப்புக்குக் காரணம் ஒட்டு மொத்தமான மரண தண்டனையின் விடுதலை மாத்திரமல்ல. எதிரிகளின் ஏக போக வீழ்ச்சி.

நடந்தது என்ன என்பதைப் பாருங்கள். 127 நாடுகளில் உள்ள யூதர்கள் ஒரே நாளில் சாக வேண்டும் என்ற தீர்ப்பு ஆமான் என்பவனால் தீட்டப்படுகிறது.

ஆனால் எஸ்தர் (எஸ்தர் என்றால் நட்சத்திரம் என்று பொருள்) தான் ராஜாத்தியாக இருந்தாலும் தன் ஜனத்தின் நன்மைக்காக உபவாசித்து **மூன்றாம் நாளில்** (எஸ்தர் 5:1) ராஜ சமூகத்தில் பிரவேசித்து ராஜாவிடம் பரிந்து பேசி மரணத் தீர்ப்பை மாற்றினாள். ஆர்ப்பரிப்பு பிறந்தது.

பிரியமானவர்களே! இங்கே விடிவெள்ளி **நட்சத்திரமாகிய இயேசு** மரித்து **மூன்றாம் நாள்** உயிர்த்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டாக்கினார் என்பதை நினைவுகூர முடிகிறதா?



ஆம்! எஸ்தர் சரித்திரத்தில் இயேசுவின் சாயலை நான் பார்க்கிறேன். பரிசுத்த ஆவியின் துணையோடு உங்களாலும் இன்னும் அநேக காரியங்களைக் கிறிஸ்துவைக் குறித்துக் காண முடியும் என்று நம்புகிறேன்.

இந்தப் புத்தகத்தை எத்துணை முறை வாசித்து இருக்கிறேன் என்று சரியாக நினைவில்லை. காரணம் கணக்கிலடங்கா முறைகள் இதை வாசித்து இருக்கிறேன்.

சோதனை, வேதனை வரும் போதெல்லாம் சிலர் சங்கீத புஸ்தகத்தை திறந்து ஆறுதலான சங்கீதங்களை வாசித்து தேற்றிக் கொள்வார்கள். நான் அப்படி அல்ல. நொந்து வெந்து தவிக்கிற வேளையில் எஸ்தர் சரித்திர ஆகமத்தை ஒரே மூச்சில் படித்து முடித்து நிறுத்துவேன்.

ஒவ்வொரு முறையும் வாசித்து முடித்தவுடன் கர்த்தர் வேறு வாக்குத்தத்தங்களைக் காட்டி இதனோடு ஒப்பிட்டு என்னைத் தேற்றியிருக்கிறார்.

ஆம்! வேதத்தில் உள்ள சில வசனங்களுக்கு வாக்குத்தத்தங்களுக்கு சரியான திருஷ்டாந்தம் மற்றும் ஆதாரம் இந்த எஸ்தரின் சரித்திரம்.

உனக்கு விரோதமாக எழும்பும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம் ஏசாயா 54:17. இதற்கு ஆமானின் வீழ்ச்சி நல்ல மேற்கோள்.

அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசம் அடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை. சங்கீதம் 34:5 என்பதற்கு எஸ்தர், மொர்தெகாய் வாழ்க்கை நல்ல மேற்கோள்.

'பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்' லூக்கா 1:52 என்ற வசனத்திற்கு ஆமான் - மொர்தெகாய் வாழ்வு சரியான மேற்கோள்.

மொர்தெகாய் என்றால் சிறியவன் என்று பொருள். அடிமையாகக் கொண்டு போகப்பட்ட சிறியவனாகிய மொர்தெகாய் அந்நிய தேசத்தில் அதிபதியானதை சற்று யோசித்துப் பாருங்கள். அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார். (1 சாமு 2:8) என்ற வசனம் உங்கள் சிந்தையில் மின்னலென பளிச்சிடுகிறதா?

இப்படி ஏராளமான வேதாகம வாக்கியங்களுக்கு சாட்சியாக விளங்குவது இந்த எஸ்தரின் சரித்திரப் புத்தகம் இதை வாசிக்க, வாசிக்கப் புத்துணர்ச்சி பெறுவீர்கள். யோசிக்க, யோசிக்க புத்தெழுச்சி பெறுவீர்கள் என்பது உண்மை.

எனது இந்தப் புத்தகத்தில் எஸ்தர் சரித்திரத்தில் வரும் மிக முக்கியமான 5 பாத்திரங்களை மையமாக வைத்தே தியானம் செய்யப் போகிறோம். முக்கியப் பாத்திரங்கள்.

1. அகாஸ்வேரு
2. வஸ்தி
3. எஸ்தர்
4. ஆமான்
5. மொர்தெகாய்

இந்த ஐந்து நபர்களைக் கொண்டு கர்த்தர் நமக்குத்தரும் ஆவிக்குரிய ஆலோசனையைத் தொடர்ந்து கவனிப்போம்.

# 2. இராஜாவாகிய அகாஸ்வேரு

எஸ்தர் சரித்திரப் புஸ்தகத்தில் குறிப்பிட வேண்டிய பாத்திரம், இந்த அகாஸ்வேரு ராஜா. முதல் அதிகாரத்திலிருந்து கடைசி அதிகாரம் வரை எல்லா அதிகாரங்களிலும் அகாஸ்வேருவின் பெயர் திரும்பத் திரும்ப வருவது குறிப்பிடப்பட வேண்டிய முக்கிய அம்சம்.

அத்சாள் என்ற எபிரெயப் பெயர் எஸ்தர் என்ற பெர்சியப் பெயராக மாற்றப்பட்டு புத்தகம் முழுவதும் குறிக்கப்பட்டிருக்க சஷ்டா என்கிற பெர்சியப் பெயர் அகாஸ்வேரு என்று எபிரெயப் பெயரால் குறிக்கப்பட்டிருப்பது மிகவும் ஆச்சரியமான காரியம். ஆம். இராஜா பெர்சியனாக இருந்தாலும் அகாஸ்வேரு என்கிற பெயர்ப்பதம் எபிரெய வார்த்தை என்று அறிந்து கொள்ளுங்கள்.

இந்தப் புத்தகத்தில் அகாஸ்வேருவைக் குறித்து நாம் கவனிக்க வேண்டிய வெளிப்படையான பெரிய காரியம் ஏதுமில்லை என்றாலும் ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் அகாஸ்வேரு இராஜாவின் காரியங்களை ஆராய்ந்து பார்த்தால் அநேக ஆவிக்குரிய காரியங்களை உற்சாகமூட்டும் செய்திகளை அறிந்து கொள்ள முடியும்.

## நீதியுள்ள நியாயாதிபதி :-

தேசத்தில் நடைபெறும் சகல காரியங்களும் இராஜாவின் கால வர்த்தமான புத்தகத்தில் எழுதி வைக்கப்படும். இப்படி எழுதி வைக்கப்பட்ட ஏராளமான நிகழ்ச்சிகளில் ஒரு நிகழ்ச்சி மொர்தெகாயின் செயல்களைக் குறித்தவை.

இராஜாவுக்கு விரோதமாய்க் கொலைத்திட்டம் தீட்டிய சிலரின் சதியை இராஜசமூகத்திற்குத் தெரியப்படுத்த, அதன்பேரில் நடைபெற்ற விசாரணையில் சதி நிரூபிக்கப்பட்டு

சாவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டார்கள். அதே வேளையில் இராஜாவின் உயிருக்குக் காபந்து செய்த மொர்தெகாய்க்கு ஒரு வாழ்த்துக் கூட தெரிவிக்கப்படவில்லை என்பதை கவனித்துப் பாருங்கள்.

தெய்வப் பிள்ளையே! உனக்கும் இன்று இப்படி நடந்திருக்கலாம் அல்லது நடக்கலாம். பலருக்கு நீங்கள் நன்மை செய்திருக்க சபையில் மிக முக்கியமான அரிய பெரிய காரியங்களை சாதித்து முடித்திருக்க ஒருவர் கூட உங்கள் கிரியைகளுக்கு அங்கீகாரம் வழங்காமல் போனது மாத்திரமல்ல. நல்லதென்று கைகுலுக்கி வாழ்த்துச் சொல்லக்கூட ஒருவரும் முன்வராமல் போய் நீங்கள் அநேகரால் மறக்கப்பட்டிருக்கலாம்.

இங்கு ஒன்றைச் சொல்லுகிறேன். மன தைரியம் அடையுங்கள். மனத்தெளிவு பெற்றுக் கொள்ளுங்கள். மொர்தெகாய் எந்த மனிதனுக்கும் இதைச் செய்யவில்லை. தனது இராஜாவுக்கே இதைச் செய்தான். எனவே மனிதர்கள் மறக்கலாம். இராஜா அப்படியல்ல.

அவன் தனக்கு ஊழியம் செய்தவர்களை உதவி செய்தவர்களை கனம் பண்ணுகிற சிந்தையுள்ளவன். எஸ்தர் 6:2,3 -ஐ வாசித்துப் பருங்கள். இராஜா தூக்கமின்றி இரவெல்லாம் விழித்திருந்த போது கால வர்த்தமான புத்தகம் கெண்டு வரப்பட்டு வாசிக்கப்பட்டது. அதில் மொர்தெகாய் தன்னைக் காப்பாற்றின செய்தியை அவன் கேட்டவுடன், இதற்காகக் கனமும் மேன்மையும் மொர்தெகாய்க்குச் செய்யப்பட்டதா? என்று கேட்டதுமின்றி அவனைக் கனப்படுத்தக் கட்டளையிட்டான். (எஸ்தர் 6:10)

மொர்தெகாய் செயல்களுக்கு உடனே பிரதிபலன்



வராமல் போனது உண்மைதான்.ஆனால் எவ்வளவு தாமதித்ததோ அவ்வளவாய்ப் பலன் பெருகி வந்தது மாத்திரமல்ல. ஏற்றவேளையில் சத்துரு வெட்கப்பட வேண்டிய நிலையில் அவனுக்கு வந்ததைப் பாருங்கள்.

அருமையானவர்களே, நீங்கள் கர்த்தருக்காய்ச் செய்த-இழந்த காரியங்களை மனிதர்கள் கணக்கில்-கருத்தில் வைக்காமல் போகலாம். ஆனால் உங்கள் கிரியைகள் ஒருநாளும் கர்த்தரால் மறக்கப்படுவதில்லை.

அகாஸ்வேருவின் இந்தக் கிரியைகளை வாசிக்கும் போதெல்லாம் எனது ஆண்டவரின் செயல்களை எண்ணி, எண்ணி அவரைத் துதிக்கிறேன்.

ஆம். அகாஸ்வேருவின் தேசத்தில் நடந்தவைகள் எப்படி கால வர்த்தமானப் புத்தகத்தில் எழுதி வைக்கப்பட்டதோ அப்படியே நமது கிரியைகளும் தேவனுடைய ராஜ்யத்தில் எழுதி வைக்கப்படுகிறதென்று விசுவாசித்துக் கர்த்தரைத் துதிக்கிறேன்.

மல்கியா 3:16-ஐ வாசித்துப் பாருங்கள். கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காவும் அவர் நாமத்தைத் தியானிப்பவர்களுக் காகவும், அவர் சமூகத்தில் **ஞாபகப் புஸ்தகம்** ஒன்று அவருக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிறது.

அழிந்து போகிற அகாஸ்வேருவே மொர்தெகாய்க்கு மறவாமல், மாறாமல், கனத்தையும், மேன்மையையும் செலுத்தியது உண்மையானால் நமது தேவன் நம்மை சும்மா விட்டு விடுவாரா, மாட்டார். விடவே மாட்டார்.

ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் (மனிதர் அல்ல) பிதாவானவர் அவனை கனம் பண்ணுவார் என்று இயேசு சொன்னதை நினைவு கூறுங்கள்.

உங்களை காண்கிற தேவன் ஏற்ற வேளையில் உங்களைக் கனம் பண்ணுவார். நீங்கள் அவரால் மறக்கப்படுவதில்லை.

ஒருநாள் எனது அறையில் வேதம் வாசித்துக் கொண்டிருக்கும்போது ஒரு நபர் என்னைத் தேடிக் கொண்டு வந்தார். அவரது தோற்றத்தைப் பார்த்தவுடன் அவர் ஒரு ஊழியர் என்று அறிந்து கொண்டு அவரை வரவேற்றேன்.

ஆனால் அவரோ என் கையைப் பற்றிக் கொண்டு கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்து விட்டார். அவரை ஆறுதல்படுத்திக் காரியங்களைக் கேட்டறிந்தேன்.

தான் கர்த்தரின் அழைப்பைப் பெற்று ஊழியம் செய்ததாகவும், ஏதோ காரணத்திற்காக ஊழியத்திலிருந்து பின்வாங்கி விட்டதாகவும் கூறிய அவர் கடுமையான தரித்திரத்தில் வாழும் தனக்கு மனம் கசந்து அழுதும் மன சமாதானம் இல்லை, அழுதும், புரண்டும் ஆசீர் இல்லை. மரணம் தான் முற்றுப் புள்ளியா? என்ற கேள்வியுடன் அழ ஆரம்பித்து விட்டார்.

எனக்கு என்ன சொல்வது, எதைச் சொல்வது என்று புரியவில்லை. அன்றும் நான் எஸ்தர் ஆகமத்தைத் தான் திறந்து வைத்துக் கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட வசனத்தை வாசித்த போது என் உள்ளம் ஒரு வித தைரியம் பெற்று அவரை உற்சாகப்படுத்த ஆயத்தமானது.

இங்கே அகாஸ்வேருவின் பொறுப்பு மிக்க, பெருந்தன்மையான செயல்களைப் பாருங்கள், எஸ்தர் 2:14 இல் உள்ள வசனப் பகுதியை வாசித்துப் பார்த்தால் புரிந்து கொள்வீர்கள்.



சாயங்காலத்திலே அவள் உள்ளே பிரவேசித்து, காலமே அபிமான ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற ராஜாவின் பிரதானியாகிய சாஸ்காசுடைய விசாரிப்புக்குள்ளிருக்கிற ஸ்திரீகளின் இரண்டாம் மாடத்துக்குத் திரும்பி வருவாள்; ராஜா தான் விரும்பிப் பேர் சொல்லி அழைப்பித்தாலொழிய அவள் ஒருபோதும் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கக் கூடாது.

இங்கே நான் கொடுக்கும் விளக்கம் ஒரு சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அல்லது ஏற்புடையதாய் இருக்கலாம். இப்போது அதைக் குறித்து நான் கவலைப்படவில்லை. ஆனால் எனது இல்லத்திற்கு மிகவும் நொறுங்குண்டு மரணக்கசப்போடு என்னைத் தேடி வந்த மனிதருக்கு நான் தந்த உற்சாகமூட்டும் வார்த்தைகளை இங்கே எழுதுவதில் தவறில்லை என்று கருதுகிறேன். இதை வாசிக்கிற ஆயிரக்கணக்கான வாசகர்களில் ஒருவருக்கேனும் இது பயன்பட்டால் அதுவே போதும் என்று கருதுகிறேன்.

இராஜாத்தியாக மாற ஆயத்தப்படும் பெண் ராஜாவின் அறைக்குள் சாயங்காலம் நுழைந்து மறுநாள் காலையில் வெளியே வருவாள். அதாவது ஒரு இரவு இராஜாவோடு கழிப்பாள். மறுநாள் இராஜாத்தியாகத் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அவர்கள் நிலை என்னவென்பதை யோசித்துப் பாருங்கள். இந்தப் பெண்களோ ராஜாவுக்காக நாட்டை விட்டு, வீட்டை விட்டு வேறுபிரிந்து வந்தவர்கள். தற்போது இராஜாவுக்குத் திருப்தி ஏற்படாத பட்சத்தில் என்ன செய்வார்கள்? எங்கே செல்வார்கள்?

இராஜா நீதியுள்ள ராஜா, தனக்காகத் தங்களுக் குண்டானவைகளை விட்டுத் தன்னிடம் வந்த இவர்களைத் தனக்குத் திருப்தியில்லாத பட்சத்தில் மீண்டும் உங்கள் வீட்டிற்குப்

போங்கள் என்று திருப்பி அனுப்பாமல் அவர்களை ஆயுள்வரை இரண்டாம் மாடத்தில் வைத்துக் காப்பாற்றினான்.

கவனியுங்கள் ஒரே ஒரு இரவு தன்னோடு வாழ்ந்த காரணத்திற்காக ஆயுள் முழுவதும் அவர்களைப் போஷித்துக் காப்பாற்றிய இராஜாவை விட என் ஆண்டவர் ஒன்றிலும் குறைவுள்ளவர் அல்ல.

இந்தப் பகுதியைத்தான் அந்த ஊழியருக்கு எடுத்துக் காட்டினேன். ஒரே நாள் தன்னை மகிழ்வித்தவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் அரண்மனை சாப்பாடு அருளப்பட்டது உண்மையென்றால் நீங்கள் பல ஆண்டுகள் அவருக்கு ஊழியம் செய்ததை நினைவில் வைத்து வாழ்நாள் முழுவதும் தேவன் உங்களைப் போஷிப்பது நிச்சயம் என்றேன்.

எனவே நீங்கள் இந்த மகிமையான ஊழியத்தை விட்டு சோடா கடை, பீடா கடை வைக்கப் போய்விடாதீர்கள். போய் ஒரு இடத்தில் அமர்ந்து கர்த்தரை நினைத்துக் கொண்டு ஊழியம் செய்யுங்கள். இராஜா (இயேசு) திரும்ப அழைத்தால் பழையபடி மகிமையான அழைப்பின் ஊழியத்தை நிறைவேற்றுங்கள் என்று அன்பான வார்த்தைகளைச் சொல்லி ஜெபித்து அனுப்பி வைத்தேன்.

இன்று அவர் உலகத்திற்கோ, உலக வேலைக்கோ செல்லாமல் மிகுந்த மன அமைதியுடன் கர்த்தருக்கு ஊழியம் செய்து வருகிறார். அவரைக் கர்த்தர் கை விடவில்லை. நித்தமும் அவரைப் போஷித்து வருகிறார்.

பிரியமானவர்களே! நீங்கள் ஆண்டவரை மறந்தாலும் அவருக்கு நீங்கள் செய்த ஊழியத்தையும் கொடுத்த



காணிக்கைகளையும் அவர் மறப்பது இல்லை. அவைகளைக் குறித்து வைத்துக் குறித்த நேரத்தில் பலன் அளிக்கிறார்.

இந்த இடத்தில் மற்றொரு காரியத்தையும் நினைவுப்படுத்த விரும்புகிறேன். ராஜாவின் பிரதானிகளாகிய பிக்தான், தேரேஸ் (எஸ்தர் 2:21) என்பவர்களின் நிலையைப் பாருங்கள். சரியான நம்பிக்கை துரோகிகள் இவர்களை ராஜா நம்பி பிரதானிகளாகவும் வாசல் காக்கிற பொறுப்பினர்களாகவும் ஏற்படுத்தியிருந்தான்.

இவர்கள் செய்தது என்ன தெரியுமா? தன் எஜமான் மேல் கைபோட்டு கதையை முடிக்கக் கணக்குப் போட்டார்கள் ஆனால் முடிவு என்னவாயிற்று என்று பாருங்கள். (எஸ்தர் 2:23) இந்த இருவரும் மரத்திலே தூக்கிப் போடப்பட்டார்கள்.

தெய்வப் பிள்ளைகளே! நீங்கள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். மேலான அதிகாரங்களுக்கு, தேவ ஜனத்திற்கு குறிப்பாக ஊழியர்களுக்கு விரோதமாக எந்த சூழ்நிலையிலும் எழும்ப நினைக்காதீர்கள், திட்டமிடாதீர்கள், துணியாதீர்கள்.

இவர்கள் தங்களை அதிக கெட்டிக்காரர்கள் என்று நினைத்தார்கள். சங்கதி வெளியாகாது என்று நினைத்தார்கள் ஆனால் சங்கதி மொர்தெகாய்க்குத் தெரிய வர ராஜா விஷயமறிந்து விபத்திலிருந்து தப்பி விடுகிறான்.

ஜனத்தின் அதிபதியாக ஒரு மனிதனை கர்த்தர் எழுப்பும் போது அவன் ஜீவனைக் காப்பதில் எத்தனை அக்கறையுள்ளவராய் இருக்கிறார் என்பதை சிந்தித்துப் பார்க்கும்படி உங்களுக்குச் சொல்லுகிறேன். ராஜாவை... செட்டைகளுள்ளது அந்தச் செய்தியை அறிவிக்கும் (பிரசங்கி

10:20) என்று எழுதப்பட்டுள்ளது.

ஆதியில் ஆபேல் என்னும் தன் சொந்த சகோதரனுக்கு விரோதமாகக் காயீனை எழும்பச் செய்த கொலைகார ஆவி இன்றுவரை தனது சாகசத்தைத் தொடர்ந்து வருவது மிகப் பெரிய ஆபத்து.

இந்த ஆவியில் பீடிக்கப்படுகிறவர்கள் தங்கள் சகோதரர்கள் மேலேயே குறிவைத்துக் குழிபறிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஈசாக்குக்கு எதிராக இஸ்மவேல், யக்கோபுக்கு எதிராக ஏசா, யோசேப்புக்கு எதிராக மற்ற சகோதரர்கள், இயேசுவுக்கு எதிராக யூதர்கள் எழும்பியது எல்லாம் இந்த (சத்துருவின்) கொலைகார ஆவியின் பாதிப்பே.

இன்று கிறிஸ்தவ உலகில் இது மிகச்சாதாரணமாக நடந்து வருகிறது. அகாஸ்வேருவை கொலை செய்யத் துணிந்தது எதிரிகள் அல்லர். அவன் யாரை நம்பினானோ, யாருக்கு வேலை போட்டுக் கொடுத்தானோ, யாரை பக்கத்தில், வீட்டில் (அரண்மனையில்) அனுமதித்தானோ அவர்களே அவனுக்கு சவக்குழிக்கு சர்வே எடுத்துக் கொண்டு இருந்தது எத்துணை கொடுமை.

இன்றைக்கு உடைகின்ற ஊழியங்கள், சபைகளை சற்று நின்று நிதானித்துப் பாருங்கள். அந்த ஊழியக்காரன் யாரை நம்பினானோ, யாரை வீட்டிற்குள் அனுமதித்தானோ யாரை தனது பாதுகாப்பிற்கு உரியவன் என்று நம்பினானோ அந்த நபர்தான் அந்த ஊழியத்தை உடைத்து இருப்பார்.

எல்லா ஊழியத்திலும், எல்லா சபைகளிலும் இப்படிப்பட்ட



இரண்டகம் செய்யும் பிக்தானும், தேரேசும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் இதில் என்ன விசேஷம் என்றால் இவர்கள் சில சிறிய சலசலப்பை உண்டாக்க முடியுமே தவிர வெற்றி பெற்றதாக சரித்திரமே கிடையாது.

பிக்தான், தேரேஸ் எழும்புகிற அதே இடத்தில் ராஜாவின் மேல் அக்கறையுள்ள மொர்தெகாய் போன்றோரை தேவன் எழுப்புகிறார் என்பது எத்துணை உற்சாகமூட்டுகிற காரியம் பாருங்கள்.

இதை வாசிக்கிற அன்பு வாசகரே நீங்கள் விசுவாசியாக இருந்தால் உங்களுக்குப் பிரத்தியேகமாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். உங்கள் போதகர் அல்லது ஊழியக்காரர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர், அங்கீகரிக்கப்பட்டவர், அவருக்கு விரோதமாக எந்த நிலையிலும் எழும்பத் துணியாதீர்.

காலத்திற்கு முன்பு நீங்கள் சாவது நலமாக இருக்குமோ? யோசித்துப் பாருங்கள். வேதம் பலமுறை இதைக்குறித்து நமக்கு எச்சரிக்கை விளக்கை நமக்கு முன் ஒளிரவிட்டுக் கொண்டு இருப்பதைக் கவனியாமல் நெடுக சென்று விழி இருந்தும் வழி தவறி குழியில் விழலாமா? கவனியுங்கள். மோசேக்கு விரோதமாக எழும்பின கோராகின் கூட்டத்தார் (எண்.16:32) காலத்திற்கு முன்பே மாண்டு போனார்கள். எலியாவைப் பரிகாசம் செய்த நாற்பத்தி இரண்டு பிள்ளைகள் (11 இராஜா 2:24) காலத்திற்கு முன்னே மடிந்து போனார்கள். தாவீதுக்கு எதிரே எழும்பின அப்சலோம் காலத்திற்கு முன்னே மரத்திலேயே மரணத்தைத் தழுவினான். (11 சாமு 18:9)

நான் இதை எழுதுவதற்குக் காரணம் உண்டு. ஏதோ

ஊழியர்களை உயர்த்தி விசுவாசிகளை மட்டுப்படுத்தி மாயஜால வித்தைக்காரன் பயமுறுத்துவது போல் உள்ளது என்று எண்ணி விடாதீர்கள். உனக்கு எதிராக எழும்பும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம். இது ஊழியக்காரரின் சுதந்திரம் என்று ஏசாயா 54.17-ல் கர்த்தர் வாக்குச் செய்திருக்கிறார் என்பதை நினைப்பூட்டவே.

ஒரு சபையில் நடந்த உண்மை சம்பவத்தை எழுதுகிறேன். வாசித்து யோசியுங்கள். அந்தக் குறிப்பிட்ட சபையில் போதகருக்கு வலதுகரமாகத் திகழ்ந்த விசுவாசி ஒருவர் இருந்தார். திடீரென அவருக்கு என்ன ஆயிற்று என்று தெரியாது. போதகரை மிகவும் மோசமான நிலையில் விமர்சித்துக் கண்ணீர்விட வைத்து விட்டார்.

மிக வேதனையும் அவமானமும் அடைந்த தேவ ஊழியர் செய்வது அறியாது, அழுகையோடு ஆண்டவரை நோக்கிப் புலம்ப ஆரம்பித்தார். நடந்தது என்ன தெரியுமா? அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் அந்த விமர்சகர் மரித்துப் போனார். ஆம்! அவர் தனது தொழிற்சலையில் பணிபுரிந்து கொண்டு இருந்தபோது வெடித்துச் சிதறிய இரும்புத் துண்டு கழுத்தில் குரல்வளையில் பாய்ந்து அவரைச் சாகடித்துவிட்டது.

தேவன் தமது ஜனத்திற்கு எந்த வழியில் எப்படி யுத்தம் செய்வார் என்று தெரியாது. ஆனால் உடனடி பதிலை அவர் சரிசெய்கிறார் என்பது உண்மை.

வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று. நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம் பண்ணின



என்ற நியாயாதிபதிகள் 5:20. ஆம் வசனத்தின்படி கர்த்தர் இயற்கைளைக் கூட யுத்தத்திற்குப் பயன்படுத்துகிறார் என்பதை அறிந்து அடக்கமாயிருங்கள்.

இதை வாசிக்கும் அன்பு வாசகரே நீவிர் ஊழியராக இருந்தால் உங்களுக்கு ஒரு நல்ல செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். அகாஸ்வேருவை கவனித்துப் பாருங்கள். எதிரிகளின் சதியை முறியடித்து சாதனைப் படைத்தான்.

உங்கள் அழைப்பில் இருந்து ஒருவரும் உங்களைக் கெடுக்க முடியாது, ஒடுக்க முடியாது, அடக்க முடியாது. உங்கள் சத்துருக்கள் உங்கள் மேல் ஜெயம் கொள்ளாதபடி தமது பட்டயத்தை உங்களுக்காக எப்பொழுதும் பிடித்திருக்கிற **யெகோவா நிசி** உங்கள் பட்சத்தில் உள்ளார்.

சோதனை வரும்போது சுருண்டு படுத்துக் கொள்ளாதீர்கள். மிரண்டு வேறு இடம் ஓடி விடாதீர்கள். எத்தனை பிக்தான், தேரேஸ் உங்கள் முன் எழும்பினாலும் அவன் விலாசம் கூட மக்களால் மறக்கப்பட்டு விடும் என்பதை மறந்து போகாதீர்கள்.

ராஜாக்களின் நாட்களில் செயல்களைக் குறித்து வைக்க நாளாகம புத்தகம் இருந்தது. ஆனால் பரலோகத்தில் செயல்பாடுகளை மாத்திரம் அல்ல, பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் குறித்து வைக்கப் பெரிய ஞாபக புஸ்தகம் வைக்கப்பட்டுள்ளது.

கர்த்தருக்கு பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள். கர்த்தர் கவனித்துக் கேட்பார். கர்த்தருக்குப் பயந்தவர்களுக்காகவும் அவருடைய நாமத்தைத்

தியானிக்கிறவர்களுக்காவும் ஞாபகப்புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது (மல்கியா 3:16)எத்துணை திட்டமான வார்த்தை பார்த்தீர்களா?

பேசுவது எதுவானாலும் பதிவு பார்த்துச் செய்யப்படும். அது நன்மையான பேச்சாக இருக்கலாம். அல்லது வீணான வார்த்தைகளாக இருக்கலாம்-நன்மையான பேச்சுகள் நல்லதைக் கொண்டுவரும். வீணான பேச்சுகள் விபரீதமான விளைவுகளைக் கொண்டு வரும் மறந்து விடக் கூடாது.

உலக ராஜாவால் கிரியைகளையும், பேச்சுக்களையும் மாத்திரமே கவனித்துக் கேட்டு விசாரிக்க முடியும். ஆனால் நமது நீதியின் ராஜா இவைகளுக்கும் மேம்பட்டு மனிதனுடைய நினைவுகளையும் வகையறுத்து நியாயம்தீர்க்கிறார் என்பது உண்மையிலும் உண்மை.

நமது ஆண்டவர் கிரியை-பேச்சு-நினைவு இவைகளை முன்னிறுத்தி நியாயம் செய்கிறவர் என்பதை நினைவில் வைத்து பரிசுத்த சிந்தையில் வளருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இதைக் குறித்து தமது போதகத்தின் போது இயேசு சொன்ன மேற்கோளை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்.

லூக்கா 12:16 முதல் 20 வரையுள்ள வசனத்தில் ஐசுவரியவான் ஒருவனைக் குறித்து உவமை சொல்லப்பட்டுள்ளது. அவன் தன் ஆத்துமாவோடே நீ அநேக வருஷம் சந்தோஷமாய் வாழ களஞ்சியங்கள் கட்டி திரளான பொருளையும் தானியத்தையும் சேர்த்து வைக்கிறேன் என்று சொல்லுவேன் என **தனக்குள்ளே சிந்தித்துக் கொண்டிருந்தான்.**



இவன் வாய்திறந்து சொல்லவில்லை, ஆனால் சிந்தையில் இருந்ததை அப்படியே தேவன் அறிந்து அவனைப் பார்த்து ‘‘மதிகேடனே இந்த இராத்திரியிலே உன் ஜீவன் போனால் நீ சேர்த்தது யாருக்கு?’’ என்று கேட்டார்.

இந்த உவமையில் இயேசு எதை முக்கியப்படுத்திச் சொன்னார் என்பது இங்கு முக்கியம் அல்ல. நான் இங்கு முக்கியப்படுத்த விரும்புவது ‘‘ஒருவன் ஒன்றை சிந்திக்கும்போதே தேவன் அவைகளைத் துல்லியமாக அறிந்து பதில் கொடுக்கிறார் என்பதையே!’’ அன்பானவர்களே மிகக் கவனமாக இருங்கள்.

பிரசங்கி 3-17இல் **‘சகல எண்ணங்களையும்** சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால்’ என்று சாலோமோன் ஞானி சொல்லியிருப்பது நினைவில் நிறுத்தப்பட வேண்டிய ஒன்று.

## மனைவி சொற்படி செய்பவர் :

அகாஸ்வேரு ராஜா - கீழ்ப்படியாத வஸ்தியை தள்ளிவிட்டார் என்பது உண்மையெனினும் தனது விருப்பப்படி நடந்து கொள்ளும் எஸ்தரின் சொற்படியே சகலத்தையும் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ்தர் ஆகமத்தை நிதானமாய் வாசித்துப் பாருங்கள். **எஸ்தர் சொற்படி செய்ய** ராஜாவும், ஆமானும் தீவிரித்து வந்தார்கள். (எஸ்தர் 5:6) நீ கேட்கிற மன்றாட்டு என்ன? நீ ராஜ்யத்தில் **பாதி மட்டும் கேட்டாலும் கிடைக்கும்** (அகாஸ்வேரு) என்று சொன்னான். (எஸ்தர் 7:2) உன் மன்றாட்டு என்ன? அதின்படி செய்யப்படும் என்றான் (எஸதர் 9:12) **அப்படியே செய்யும்படிக்கு** ராஜா உத்தரவு கொடுத்தான். (எஸதர் 9:14).

இப்படிப் பல மேற்கோள்களைக் காட்ட முடியும். இதை நன்றாய் சிந்தித்துப் பாருங்கள். நமது தேவனும் இதைத்தான் செய்கிறார். சபை அவருடைய மணவாட்டி. தேவசித்தத்தை சபை சரியாய் நிறைவேற்றி அவரை பிரியப்படுத்தும் போது சபையாகிய மணவாட்டியின் விருப்பத்தை வேண்டுதல்களை உடனே நிறைவேற்றுகிறார்.

எஸ்தர் அகாஸ்வேரு ராஜாவிடத்தில் அடுத்தடுத்து தனது காரியங்களைச் சொன்னபோது சலித்துக் கொள்ளாமல், கோபப்படாமல், முழுமனதாய் பூரணமாய் செய்தது போலவே தேவனும் சபை எதை எத்தனை முறை சொன்னாலும் செய்கிறார் என்பது பெரிய உண்மை.

எலியாவின் சொற்படி மழையை நிறுத்தியவர், பேதுருவின் சொற்படி அனனியா சப்பீராளை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தவர், பவுலின் ஜெபத்தின்படி ஐத்திகுவை மரணத்திலிருந்து உயிரோடு எழுப்பினவர் நீங்கள் தேவனைப் பிரியப்படுத்தும் நபராய் இருந்து எதை விரும்பினாலும் அதை அப்படியே செய்வார்.

என் கரத்தின் கிரியைகளைக் குறித்து எனக்குக் கட்டளை கொடுங்கள் என்று தேவன் சொன்னது எவ்வளவு பெரிய கிருபை என்பதை யோசித்துப் பாருங்கள்.

எஸ்தர் ராஜசமுகத்திற்குச் செல்ல இடைத்தரகர் எவரையும் தேடவில்லை. மாறாக தானே நேரடியாகச் சென்றாள். இலட்சியத்தில் வென்றாள்.

அன்பானவர்களே நீங்கள் உங்கள் விண்ணப்பங்களை தேவனுக்குத் தெரியப்படுத்த இடைத்தரகர் அவசியம் இல்லை. ஆனால் நாம் தேவசித்தத்திற்குள் தான் இருக்கிறோம் என்கிற



நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும்.

சுத்த மனசாட்சியும், பரிசுத்த ஜீவியமும் உங்களுக்கு இருக்குமென்றால் நிச்சயம் நீங்கள் எதைக் கேட்டாலும் கர்த்தர் தருவார். அந்த ஊழியரிடம் போகலாம். இந்த ஊழியரிடம் போகலாம் என்று யோசித்து அலைய வேண்டாம். நீங்கள் திசைமாறிப் போய்விடுவீர்கள். ஜாக்கிரதை.

பரிசுத்த ஆவியால் தேவன் தமது மணவாட்டியாக உங்களை முத்தரித்து இருக்கும்போது உங்களுக்கு ஏன் வீண் கவலை? தேவையில்லை. நீங்கள் சொல்லுங்கள் தேவன் உடன் செய்வார்.

நீங்கள் மலையைப் பார்த்து பெயர்ந்து போ என்று சொன்னாலும் அது பெயர்ந்து போகும் என்பது இயேசு சொன்ன வாக்குத்தத்தம். அது ஆகுமா? ஆகாதா? என்று நீங்கள் சந்தேகப்பட வேண்டியதில்லை. நீ கர்ப்பவதி ஆகி ஒரு குமாரனைப் பெறுவாய் என்று தூதன் சொன்னபோது மரியாள் இது எப்படி ஆகும் என்று வியந்தாள். தூதனோ மனிதரால் கூடாதது தேவனால் ஆகும் என்றான்.

தேவ பிள்ளையே! உங்கள் பிள்ளைகளைக் குறித்து, உங்கள் வேலை ஸ்தலத்தில் உள்ளபிரச்சனைகளைக் குறித்து, உங்கள் இனத்தாரின் இரட்சிப்பைக் குறித்துக், கர்த்தருக்குக் கட்டளை இடுங்கள். அவர் அதை மகிழ்வோடு ஏற்றுக் கனிவோடு பதில் செய்வார்.

## ஸ்தானாதிபதிகளின் சொற்படி செய்பவர்:-

அகாஸ்வேருவின் செயல்களில் மிகவும் ஆச்சர்யமான

காரியம் ஒன்று உண்டு. அது அவன் எதைச் செய்தாலும் சுயமாய் செய்யாமல் தனது பிரதானிகள் எதைச் சொன்னார்களோ அதையே அவன் பிரதானமாய் எடுத்துக் கொண்டு செய்தான் என்பதே.

எஸ்தர் புத்தகம் முழுவதும் வாசித்துப் பாருங்கள். இது உங்களுக்கு வெளிப்படையாகத் தெரிய வரும். வஸ்தியின் காரியத்தில் அவளைத் தள்ளுவதிலும், அவளுக்கு மாறாக வேறொரு மனைவியைத் தேர்வு செய்வதிலும் அவன் தனது திட்டத்தைக் காட்டிலும் பிரதானிகள் என்ன சொன்னார்களோ அதையே தான் செய்தான் (எஸ்தர் 1:21, 2.4)

ஆமானின் காரியத்திலும் இராஜா இதைத் தான் செய்தான். யூதர்களை கொலை செய்ய ஆமான் சதி செய்து திட்டத்தை ராஜாவிடத்தில் இலைமறை காயாகத் தெரிவித்த போது, பிரதானி சொல்லும் வார்த்தையை சந்தேகிக்காமல் அப்படியே செயலாற்றக்கட்டளை கொடுக்கிறான். (எஸ்தர் 3:9)

மொர்தெகாய் பின்னர் உயர்த்தப்பட்டபோது தனது முத்திரை மோதிரத்தையே கழற்றிக் கொடுத்தது மட்டுமின்றி மொர்தெகாய் சொன்னவைகளைத் தட்டாமல் செய்தான்.

இவைகளை நான் மேற்கோள் காட்டுவதின் காரியம் என்னவென்று புரிந்து கொண்டீர்களா? இராஜா தனது பிரதானிகளின் வார்த்தைகளைக் கனப்படுத்தினான். பிரதானிகள் எத்தன்மை உடையவர்களாய் இருப்பினும் அவர்களின் வார்த்தைகளை நிறைவேற்ற ஆவல் உள்ளவனாக இருந்தான்.

இதை வாசிக்கும் போது நமது ஆண்டவரைக் குறித்து



என்ன காரியம் உங்களுக்கு ஞாபகம் வருகிறது. அவருக்கும் அகாஸ்வேருக்கும் ஏதாகிலும் சம்மந்தப்படுத்தி சிந்திக்க முடிகிறதா, இதோ இந்த வசனத்தை வாசித்துப் பாருங்கள்.

நான் என் ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தி, என் ஸ்தானாதிபதிகளின் ஆலோசனையை நிறைவேற்றி... (ஏசா 44:26).

ஆம். அகாஸ்வேருவைக் காட்டிலும் நமது ஆண்டவர் விசேஷமானவர். தமது ஊழியர்களின் வார்த்தையை நிலைப்படுத்துவதிலும், நிறைவேற்றுவதிலும் அக்கறை உள்ளவர்.

அருமையான தேவஊழியரே உங்கள் வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையும் மிக விசேஷமானது என்பதை மறந்து விடாதீர்கள்.

நீங்கள் வரம் பெற்றவராக இருக்கலாம். அல்லது வல்லமை நிறைந்தவராக இருக்கலாம். அதைப்பற்றி பிரச்சனை இல்லை. நீங்கள் அவருக்கு ஊழியம் செய்யும் காலமளவும் அவர் உங்கள் வார்த்தையை நிலைப்படுத்தி வாய்க்கச் செய்வார்.

ஆகாபுக்கு முன்னே கர்த்தரின் தீர்க்கதரிசியாகிய எலியா **என் வாக்கின்படியே** பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று **நான்** சொல்கிறேன் என்றான். (1 இராஜா 17:1) கர்த்தர் இந்த ஸ்தானாதிபதியின் வார்த்தையை உடனே நிலைப்படுத்தினார், நிறைவேற்றினார்.

எலியா-ஏலி, காபிரியேல் போன்றோர் தாங்களே சொன்னார்கள். கர்த்தர் அதை நிறைவேற்றினார். அருமை ஊழியர்களே! ஆனந்தியுங்கள் காபிரியேல் மட்டும் தூதன்

அல்ல. நீங்களும் அவருடைய தூதன்தான் மல்கியா 2:7 மற்றும் வெளிப்படுத்துதல் 1:20 ஆகிய வசனங்கள் இதை உறுதிப்படுத்துகிறது.

உங்கள் வார்த்தை வீணாய் திரும்பி வருவதில்லை. நீங்கள் மகிழ்ச்சியில் பொங்கி சொல்லியிருந்தாலும், துக்கத்தில் துவண்டு சொல்லியிருந்தாலும் அதைக் கர்த்தர் நிறைவேற்றியே தீருவார். நீங்கள் ஆசீர்வதிக்கும் ஆசீர்வாதமும், இடும் சாபமும் நிறைவேறியே தீரும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு அப்போஸ்தலர் 3:6-இல் எழுந்து நட என ஆசீர்வதித்தான். அப்படியே நடந்தது. அப்போஸ்தலர் 5:9 இல் வீழ்ந்து மடிவாய் என்றான். அப்படியே ஆயிற்று.

எனவே உங்களுக்கு இருக்கும் தேவ அங்கீகாரத்தை வெளிக் கொண்டு வாருங்கள். முறையாகப் பயன்படுத்துங்கள். ஆமானைப் போல மற்றவர்களின் அழிவுக்கு அல்ல.மொர்தெகாயைப் போல ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்கென பயன்படுத்துங்கள்.

## அற்புதமான அரண்மனை :-

பரலோகத்தைக் குறித்த வேத வசனங்களை வைத்து சற்று தியானித்துப் பாருங்கள். அது எவ்வளவு மகிமையாய் இருக்கும் தெரியுமா? அதன் மதில்கள் வச்சிரக் கற்களால் கட்டப்பட்டு இருந்தது. நகரம் தெளிவான பளிங்குக்கு ஒப்பான சுத்த பொன்னாயிருந்தது வெளி 21:18.

எத்துணை மகிமையான மாளிகை பார்த்தீர்களா? இந்த வசனங்களை நான் முதல்முதலில் வாசித்தபோது அசந்தே



போய்விட்டேன். ஏன் அதிர்ந்தே போய்விட்டேன். காரணம் இப்படி இத்தனை அற்புதமாகப் பொன்னினாலும் விலையேறப் பெற்ற பொன்னினாலும் மாளிகை எழுப்புவது சாத்தியமா? ஏதோ மிகைப்படுத்தி எழுதியதைப்போல் உள்ளதே என்று சிந்தித்தது உண்டு.

இந்த சிந்தனை எஸ்தர் புத்தகத்தின் முதல் அதிகாரம் 6-ஆம் வசனத்தைப் படித்த அன்றே சரியான தெளிவை எனக்கு கொடுத்தது. அழிந்து போகிற அற்ப ஆயுள் உள்ள மனிதனும் சொற்ப பலன் உள்ளமனிதனுமாகிய அகாஸ்வேருவின் அரண்மனை அழகினை சற்று வாசித்துப் பாருங்கள்.

**வெண்கலத்** தூண்களின் மேல் உள்ள **வெள்ளி** வளையங்களில் மெல்லிய நூல், சிவப்பு நூலுமான தொங்குதிரைகள் விதானித்திருந்தது. சிவப்பும் நீலமும், வெள்ளையும் கறுப்புமான **கற்கள்** பதித்திருந்த தளவரிசையின் மேல் **பொற்ச்சரிகையும் வெள்ளிச்சரிகையுமான** மெத்தைகள் விரிக்கப்பட்டிருந்தது (எஸ்தர்1:6)

அகாஸ்வேருவின் அரண்மனையே வெண்கலம், வெள்ளி, பொன், கற்கள் இவைகளால் கட்டப்பட்டு அழகுபடுத்தப்பட்டு இருக்குமானால் என் ராஜாதி ராஜா கட்டும் வாசஸ்தலம் எத்தனை மகிமையாய் இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். உவப்பால் மெய்சிலிர்க்க அன்பால் அவரைத் துதிக்கிறேன்.

என் தேவன் சிங்காரமாய்க் கட்டி முடிக்கும் பொன்மயமான வீதியும், விலையேறப் பெற்ற கற்களால் ஆன வாசஸ்தலமும் உள்ள பரிசுத்த நகர் யாருக்குத் தெரியுமா?

இதனை வாசித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கும், எனக்கும் தான்.

யோவான் சுவிசேஷத்தில் 14:3 இல் நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன் என்றும், வெளிப்படுத்துதல் 21:2 இல் யோவானாகிய நான் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன் என்று எழுதியிருப்பதைக் கவனியுங்கள்.

அருமையானவர்களே! நாம் இந்தப் பூமியில் இப்போது பரதேசிகள் என்பது உண்மை. ஆனால் மகிமையின் ராஜா கிறிஸ்துவின் வருகையில் அரண்மனை வாசிகள் என்பதை நினைவில் வையுங்கள்.

அந்த விசேஷமான அழைப்பைக் காத்துக் கொள்ள கவனமாய் இருங்கள். தகுதியைக் காத்துக் கொள்ளாத வஸ்தி அரண்மனையை விட்டு வெளியேற்றப்பட்டாள். தகுதிப்படுத்திக் கொண்ட எஸ்தர் அரண்மனைக்குள் வைக்கப்பட்டாள்.

அழைப்பில் ஆணவம் அடைந்த ஆமான் தூக்கிலிடப்பட்டான். அழைப்பில் அடக்கம் கொண்ட மொர்தெகாய் தூக்கி உயர்த்தப்பட்டான். எனவே மகிமையான பரலோக அரண்மனையில் வாசம் பண்ணும் பொருட்டு உங்களை நீங்களே காத்துக் கொள்ளுங்கள்.

# 3. வாய்ப்பை இழந்த வஸ்தி

எஸ்தர் ஆகமத்தில் மிக பரிதாபத்திற்குரிய நபர் வஸ்தியாகத்தான் இருக்க முடியும். வஸ்தி என்பவள் சாதாரணமான பெண் அல்ல. 127 நாடுகளை ஆண்டு வந்த மகாராஜாவின் மாண்புமிகு மனைவி. அவள் தலையில் ராஜகிரீடம் இருந்தது. அவளுக்கு முன்பாக ராஜமேன்மை இருந்தது.

சுகமான வாழ்க்கை, சுந்தரவனமான அரண்மனை சுற்றிலும் தாதியர் கூட்டம். இத்தனை பவஸ்துக்கு மேல் அவளின் அழகு மகா உன்னதமானது. எஸ்தர் 1:10 - இல் அவள் **மகாரூபவதியாக** இருந்தாள் என்று எழுதப்பட்டுள்ளது முக்கியப்படுத்தப்பட வேண்டிய ஒன்று.

எத்துணை வருடம் இல்லறம் நடத்தினாள் எனத் தெரியவில்லை. ஆனால் அகாஸ்வேருவின் ராஜ்ஜிய பாரத்தின் 3 1/2 ஆண்டு முடிவில் இவளது ராஜஸ்திரீக்குண்டான மேன்மைகள் எடுபட்டுப் போயிற்று.

ஐயகோ! என்ன பரிதாபம். மகாரூபவதி தான் ஆனால் கிரீடம் பறிபோனபின் அவள் அழகு அவளைத் தூக்கி நிறுத்த முடியவில்லை. ராஜகிரீடம், ராஜமேன்மை, அரண்மனையில் அகாஸ்வேருவோடு வாழும் ஆனந்தபாக்கியம் இவை எல்லாம் ஒரே நாளில் ஒரே சமயத்தில் அவள் இழக்க நேர்ந்தது எத்துணை வேதனைக்குரியது எண்ணிப்பாருங்கள்.

இது சபைக்கு நல்ல முன்மாதிரி. நம் எல்லோரும் அவர் இரத்தத்தால் கழுவப்பட்டு அவர் வார்த்தையினால் பரிசுத்தமாக்கப்பட்டு அவர் ஆவியினால் அவருக்கு மணவாட்டியாக முத்திரிக்கப்பட்டு முழுமையான வளர்ச்சி பெற முன்னேறிக் கொண்டு இருக்கிறோம்.

**கிரீடத்தை இழந்து விடாதே :-** இங்கே சில காரியங்களை வசனங்களை மேற்கோள் காட்டி உங்களை உற்சாகப்படுத்த, உஷாா்படுத்த விரும்புகிறேன்.

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடு கூட எழுப்பி உன்னதங்களிலே அவரோடு கூட உட்காரவும் செய்தார். (எபேசியர் 2:7) இந்த வசனத்தின்படி என் அன்பு வாசகரே நீங்கள் பூமியில் அல்ல, இரட்சிக்கப்பட்ட நாள் முதல் உன்னதங்களில் ராஜமேன்மையில் உட்கார்ந்து இருக்கிறீர்கள்.

நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினால் நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை **இராஜாக்களும் ஆசாரியர் -களுமாக்கின** (கிரீடம் தரிப்பிக்கப்பட்டவர்கள்) அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. (வெளி 1:6)

இதோ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக் கொள்ளாதபடி உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு. (வெளி 3:11)

இந்த வசனக் கோர்வையை வாசித்துப் பார்த்தீர்களா? இராஜமேன்மை, இராஜகிரீடம் இவைகளை ஒருவனும் எடுத்துக் கொள்ளாதபடி எச்சரிக்கையாய் இரு என்று ஆவியானவர் திருச்சபைக்கு சரியான அறிவுரை வழங்கியிருக்கிறார்.

கிருபையைப் போக்கடித்து தேவனை விட்டு தூரம் போய் விட்ட யூதர்களை மாத்திரமல்ல ஒருமுறை பரமஈவை (இரட்சிப்பை) ருசிபார்த்து மறுதலித்து பின்மாறிப் போய் தங்கள் அழைப்பை அல்லத்தட்டிய விழுந்து போன பரிசுத்தவான் -களுக்கும் வஸ்தி நிழலாட்டமாய் இருக்கிறாள்.



இந்தக் கடைசிக் காலத்தில் தனக்குக் கொஞ்சக் காலம் மாத்திரம் உண்டு என்று அறிந்து சாத்தான் முழுமூச்சோடு, முழுவேகத்தோடு தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களை விழப்பண்ண தனக்குத் தெரிந்த வித்தைகள் எல்லாம் பயன்படுத்துகிறான்.

நீங்கள் நன்றாக ஆராய்ந்து பாருங்கள். கவனித்துப் பாருங்கள். எங்கு பார்த்தாலும் சபைகள் பிரிவினையில் உடைகிறது. பல பரிசுத்தவான்கள் வீழ்ந்து பின்மாறிப் போகிறார்கள். இவர்களுமா இப்படி ஆகிவிட்டார்கள் என்று ஆச்சரியப்படுமளவு பலரின் வாழ்க்கையில் பின்மாற்றம்; பல குழப்பங்கள் பிரச்சனையால் ஊழியம் பிளவுபடுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் சாத்தான் முழு வேகத்துடன் தனது அக்கினியாஸ்திரங்களைப் பயன்படுத்துகிறான் என்பதுதான்.

வெளி 12:4 இல் வலுசர்ப்பத்தின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொரு பங்கை இழுத்து அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று என்று எழுதப்பட்டுள்ளது. இங்கே சொல்லப்பட்ட நட்சத்திரம் என்பது விண்மீன்களை குறிக்கவில்லை. நட்சத்திரம் என்ற உருவகத்திற்கு வேதம் கூறும் உண்மைப் பொருள் எதுவென்று கண்டு கொள்ளுதல் அவசியம்.

ஞானவான்கள் ஆகாயமண்டலத்தில் ஒளியைப் போலவும், **அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும்** என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள் (தானி 12:3) இந்த வசனத்தின் மூலம் வலுசர்ப்பம் விழத்தள்ளின நட்சத்திரங்கள் என்பது முன்னனியிலுள்ள பரிசுத்தவான்கள் என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன்.

பரிசுத்தவான்களை **இழுத்து** விழத்தள்ளிற்று என்ற வார்த்தையை கவனியுங்கள். பரிசுத்தவான்களைப் பிசாசு இழுக்கிறான். அப்படி இழுக்க எதைப் பயன்படுத்துகிறான் என்று சரியாகச் சொல்ல முடியாது - எதினால் எப்படி அடித்தால் எவர் வீழ்ந்து போவார் என்பதை சரியாகக் கணித்து தன்பக்கம் இழுத்துக் கொள்வதில் அவன் பலே கெட்டிக்காரன்.

இஸ்ரவேலின் வழக்கத்தின்படி முதற்குமாரன் இரண்டு வித ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரவானாய் இருக்கிறான். முதலாவது வம்சாவழித்தலைமை (ராஜாதிபத்தியம்) அடுத்தது தலைமகன் பங்கு (சேஷ்டபுத்திரபாகம்) என்கிற இரட்டைச் சுதந்திர சொத்து உரிமை.

ஆனால் இஸ்ரவேல் வம்சத்தின் யாக்கோபுவின் குமாரனாகிய ரூபன் இந்த இரண்டு ஆசீர்வாதத்தையும் இழந்து போனான் என்று வேதம் சொல்கிறது. கீழே வசனத்தைத் தருகிறேன். வாசித்துப் பாருங்கள்.

ரூபன் இஸ்ரவேலுக்கு முதற்பிறந்த சேஷ்டபுத்திரன் ஆனாலும் அவன் தன் தகப்பன் மஞ்சத்தை தீட்டுப்படுத்தின படியால், கோத்திரத்து அட்டவணையிலே அவன் முதற் பிறந்தவனாகக்கருதப்படாமல், அவனுடைய சேஷ்டபுத்திர சுதந்திரம் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது.

யூதா சகோதரரில் பலத்தினால் ராஜாதிபத்தியம் அவன் சந்ததியில் உண்டானது. ஆனாலும் சேஷ்டபுத்திரபாகம் யோசேப்புடையதாயிற்று. (I நாளா 5:1.2)

இதைப் போல மற்றொரு சம்பவம் ஆதியாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. ஏசா தலைமகன் ஆனால் யாக்கோபு



காய்ச்சின சிவப்பான கூழ் மேல் (கலரில் மயக்கம்) ஆசை வைத்து தனது சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப் போட்டான்.

பழைய ஏற்பாட்டில் கேயாசி, புதிய ஏற்பாட்டில் யூதாஸ், பணத்திற்காகத் தங்களை விற்று கிருபையை இழந்தார்கள். சீஷத்துவ அந்தஸ்திற்கு அருகதையற்றவர்களானார்கள்.

உசியா என்கிறவனை 16 வயதில் இராஜாவாகும்படி செய்தார். அவன் பலப்பட்ட போதோ மனம் மேட்டிமையாகி தூபம் காட்ட ஆலயத்திற்குள் பிரவேசித்தான் (II நாளா 26:16) கர்த்தர் அடித்ததினால் குஷ்டரோகியாகி அரண்மனையை இழந்து சாகும் வரை தனித்த வீட்டில் தங்க வைக்கப்பட்டான்.

ரூபனை சாத்தான் மாம்ச இச்சையில் வீழ்த்தினான். ஏசாவைப் போஜனப் பிரியத்தால் வீழ்த்தினான். கேயாசி, யூதாசை பண ஆசையால் வீழ்த்தினான். உசியாவைப் பெருமையில் வீழ்த்தினான், ஆதலால் அவர்கள் கிரீடத்தையும் அரண்மனையையும், அழைப்பையும் இழந்து ஆகாதவர்களாய் ஆனார்கள்.

மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இவைகள் தேவனால் உண்டாகாமல் உலகத்தால் உண்டானதாய் இருக்கிறது. எனவே இப்பிரபஞ்சத்திற்குரிய காரியங்களில் ஜாக்கிரதையும் தெளிவும் உள்ளவர்களுமாய் நடந்து உங்களையும் அழைப்பையும் காத்துக் கொள்ளுங்கள்.

தேமா என்பவனைக் குறித்து வேதத்தில் சொல்லப் பட்டதை நினைவுகூர்ந்து பாருங்கள்.

முன்பு அவன் அப்போஸ்தலனாகிய பவுலின் முதலாம் சிறையிருப்பின் போது உடன் இருந்து கொலோ 4:14 உத்தமமாய்

நடந்தான். ஆனால் பிற்காலத்தில் இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து (அது என்ன ஆசை) பவுலை விட்டுப் பிரிந்து போய் விட்டான் (I தீமோ 1:19)

இப்படி தத்தம் விலையேறப்பெற்ற சிலாக்கியங்களை, விபரீதங்களினாலும், விபத்துகளினாலும் வீணடித்தவர்களின் பட்டியல் மிக நீளமானது. ஆரம்பத்தில் அற்புதமாக இருந்தவர்கள் அற்பமான காரியங்களால் தங்களை கெடுத்துக் கொண்டு விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்திக் கொண்டார்கள் என்று கூறுகிறார். (I தீமோ 1:20)

அருமையான வாசகரே உங்களை அன்புடன் எச்சரிக்க விரும்புகிறேன். தேவன் உங்களுக்குக் கொடுத்த மேலான சிலாக்கியங்களை உலக-சரீர ஆசைகளுக்காக இழந்து விடாதீர்கள். அவர் வரும் வரை உங்களுக்கு உள்ளதை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருங்கள். முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். வஸ்தியின் பெருமை வாய்ப்பை இழக்கச் செய்தது.

## சுயசித்தம் செய்யாதே :

வஸ்தியின் ராஜரீக அந்தஸ்தினை அடியோடு வெட்டிச் சாய்த்த முக்கியமான காரியத்தை இங்கே கவனியுங்கள் ராஜஸ்திரீயாகிய வஸ்தியும் ராஜாவாகிய அகாஸ்வேருவின் அரண்மனையில் ஸ்திரீகளுக்கு விருந்து செய்தாள். (எஸ்தர் 1:9)

இந்த வசனத்தை நன்றாக சிந்தித்துப் பாருங்கள். இராஜா தனது பிரஸ்தாபத்தை காண்பிக்க விருந்து செய்தான். அதே நாட்களில் ராணியும் அரண்மனையில் தனியாக ஸ்திரீகளுக்கு விருந்து (மகளிர் மாநாடு) வைத்தது சரியான காரியம் அல்ல.



இராஜாவிற்கு ஒரு சித்தம் ராணிக்கு ஒரு சித்தம் விருந்தின் போது ஒரே இடத்தில் ஒரே மனமாய் இருக்க வேண்டிய இவர்கள், இரண்டு விருந்து நடத்தி இரண்டாய் பிரிந்து கிடந்தது பரிதாபமான காரியம் தான்.

ராஜா அழைத்த போது உடன் செல்ல முடியாமல் போனதிற்கு வஸ்திக்குப் பல காரணங்கள் உண்டு. அதில் முக்கயமான ஒன்று அவளின் விருந்து. தான் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் இந்த விருந்து உபசரிப்பை பாதியில் நிறுத்திவிட்டு எப்படிப் போவது என்பதே அவளின் பெரிய கௌரவப் பிரச்சனையாக இருந்திருக்க வேண்டும்.

யோசித்துப்பாருங்கள். இவள்சித்தத்தை (விருப்பத்தை) ஒதுக்கி விட்டு இராஜ சித்தத்தோடு ஒன்றித்து இருந்திருப் பாளாகில் கடைசி வரை இராணியாக வாழ்ந்திருப்பாள், மாறாக ராஜாவின் எண்ணத்தை விட்டு விலகி சொந்த விருப்பத்தின்படி விருந்து செய்ததினாலே தான் விபரீதத்தை அவள் சந்திக்க நேரிட்டது.

இங்கு தான் சபைக்கு ஒரு முக்கிய செய்தி இருக்கிறது. என்றைக்கு நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவரோடு உடன்படிக்கை செய்து கொண்டோமோ அன்றுமுதல் நமது சொந்த சித்தத்தை (விருப்பத்தை) சிலுவையில் அறைந்து விட்டு தேவனின் சித்தத்தை நிறைவேற்ற சிலுவையைத் தோளின் மேல் எடுத்துக் கொள்ள வேண்டும்.

உலக வேலையில் – தேவ ஊழியத்தில் – குடும்பத்தில் – சபையில் – உணவில் – உடையில் எல்லாவற்றிலும் தேவனுடைய சித்தத்தை அறிந்து செயலாற்றுவதே மணவாட்டி சபையின் கடமை. அதுவே வெற்றியுள்ள வாழ்க்கை.

எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் பரலோகத்தில் கண்ட காட்சியை திவ்ய வாசகனாகிய யோவான், வெளிப்படுத்தல் 14 – ஆம் அதிகாரத்தில் அழகாக எழுதியிருக்கிறார். அவர்களைக் குறித்து சொல்லும் போது (வசனம் 4) ஆட்டுக் குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே என்று கூறுகிறார். அதாவது, தங்கள் வாழ்நாள் முழுவதும் தேவசித்தம் செய்தவர்கள் என்று அதற்கு அர்த்தம். அருமையானவர்களே நீங்கள் உங்களுக்குத் திருப்தியாகவும், மகிழ்ச்சியாகவும் தோன்றுகிற பல காரியங்களைக் கர்த்தர் நாமம் மகிமைப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யலாம். ஒரு வேளை கர்த்தரின் நாமம் கூட மகிமைப்பட்டிருக்கலாம். எச்சரிக்கை. அது தேவ சித்தமா? அதில் தேவன் மகிழ்ந்தாரா என்பது தான் முக்கியம்.

அதற்கு நல்ல அறிவுரையை இயேசுவே சொல்லியுள்ளார். அக்காலத்தில் உமது நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைத்தோமே, பிசாசுகளைத் துரத்தினோமே என்பார்கள். நான் அவர்களைப் பார்த்து அக்கிரம செய்கைக்காரர்களே என்னை விட்டு அகன்று போங்கள் (மத் 7:21:23) என்பேன் என்றார்.

தீர்க்கதரிசனம் சொல்லுதலும், பிசாசு துரத்துதலும் அக்கிரம செய்கை அல்ல. ஆனால் தேவசித்தம் செய்யாமல் இவைகளைச் செய்கிறவன் அக்கிரம செய்கைக்காரன்.

ராஜாவோடு இசைந்து இல்லாமல் தனியாக விருந்து நடத்திய வஸ்தியைப் போல் இன்று ஒரு பெரிய கூட்டம் சபையில் ஊழியங்களில் எழும்பி விட்டது உடனடியாக கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.



என் அன்பு வாசகரே இப்படி யார் இருக்கக்கூடும் என்று மற்றவர்களை இப்போது ஆராயாதே, அது நீங்களாக இருக்கக்கூடாது என்று நான் விரும்புகிறேன். ஆகவே உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள்.

வஸ்தியின் விருந்து சுயசித்தத்தின் வெளிப்பாடு – தேவ சித்தத்தை விட்டு விலகியதற்கு நல்ல நிழலாட்டம். நீங்கள் செய்வது தேவசித்தந்தானா சீர் தூக்கிப் பாருங்கள். நீங்கள் ஊழியம் கூட செய்யலாம். ஆனால் அது தேவ சித்தந்தானா என்று பார்த்து செய்யுங்கள்.

எல்லோரும் ஊழியம் செய்யலாம். செய்ய வேண்டும். ஆனால் இன்று ஆபத்து என்ன தெரியுமா? ஆத்தும ஆதாயம் செய்வதை விட, சுவிசேஷப்பணி செய்வதை விட சிலர் பாஸ்டர் என்ற பட்டம் பெற்று சபை நடத்த வேண்டும் என்று துள்ளிக் குதிப்பதே.

அன்புடன் எச்சரிக்கிறேன் – அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து போதகராகாமல் இருங்கள். உங்களுக்கும் நல்லது, ஊருக்கும் நல்லது.

எனக்கு எவரையும் குற்றம் சுமத்த வேண்டுமென்றோ, குட்டவேண்டுமென்றோ எண்ணம் கிடையாது. ஆனால் என் தேவனிடத்தில் பெற்ற சத்தியத்தை முகஸ்துதி பாராமல் எழுதுவதில் உண்மையுள்ளவனாக இருக்க விரும்புகிறேன்.

கர்த்தர் உங்களை அழைத்தால் ஊழியத்திற்கு வாருங்கள். அல்லாத பட்சத்தில் இருக்கும் நிலையில் கர்த்தர் கொடுத்த தாலந்துகளை சபைக்கு அடங்கிப் பயன்படுத்துங்கள்.

சிலர் அரசு வேலையில் கடைசி வரைக்கும் நன்றாக

உழைத்துவிட்டு அரசே இவர்களை ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொல்லி வீட்டுக்கு அனுப்பி விட்ட பிறகு இவர்கள் திடீர் தரிசனம் பெற்று (FULL TIME) பாஸ்டராக மாறி விடுவது கடைந்தெடுத்த சுயசித்தம்.

பாஸ்டர் ஊழியம் என்பது ஓய்வுகாலப் பென்சன் திட்டம் அல்ல. அப்படிப்பட்ட செயல்களில் இறங்காதீர்கள். இறங்குகிறவர்களை உற்சாகப்படுத்தாதீர்கள் இப்படிப்பட்டவர்கள் மார்க்கந்தப்பி அலையும் நட்சத்திரங்கள் கவனமாயிருங்கள்.

உன் சகோதரனாகிய ஆரோன் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு நீ ஆரோனையும் அவனோடு அவன் குமாரனாகிய நாதாப், அபியூ, எலெயாசார், இத்தாமார் என்னும் ஆரோனின் குமாரரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருந்து பிரித்து உன்னிடத்தில் சேர்த்துக் கொள்வாயாக (யாத் 28:1) என்று கர்த்தர் மோசேயோடு சொல்லியிருந்தார். ஆனால் ஆரோனின் குமாரராகிய நாதாப் அபியூ என்னவானார்கள் என்பதைத் தொடர்ந்து கவனியுங்கள்.

அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களைப் பட்சித்தது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள் (லேவி 10:1) ஆம் நாதாபும் அபியூவும் மாண்டு போனார்கள்.

அழைக்கப்பட்ட, ஆசாரிய ஊழியம் செய்ய அந்தஸ்து பெற்ற, வேறுபிரிக்கப்பட்ட இவர்கள் ஏன் தேவ அக்கினியால் பட்சிக்கப்பட்டார்கள் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள்.

நாதாபும், அபியூவும் தன் தன் தூபகலசத்தை எடுத்து அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய



அக்கினியை அவருடைய சந்நிதியில் கொண்டு வந்தார்கள் (லேவி 10:1) ஆம் நாதாபும் அபியூவும் மாண்டு போனார்கள்.

புரிகிறதா காரணம், தூபம் காட்டினார்கள் ஆனால் கர்த்தர் கட்டளையிடாத அந்நிய அக்கினியைக் கொண்டு வந்தார்கள். அதனால் தான் ஆபத்து.

ஆம் தேவன் சொல்லாத ஊழியம் அந்நிய அக்கினி, தேவன், சொல்லாத இடத்தில் ஊழியம் அதுவும் அந்நிய அக்கினியே. அவைகள் ஆசீர்வாதத்திற்கு பதிலாய் ஆக்கினையையே உங்களுக்குக் கொண்டு வரும் கவனமாயிருங்கள்.

சொந்த ஆசையே சுயசித்தம், சுயசித்தம் தேவனுக்கு எதிரான மல்யுத்தம் மறவாதீர்கள். முன்னமே சொன்னபடி உங்கள் செய்கையால் கர்த்தரின் நாமம் மகிமைப்படலாம் மக்கள் மகிழலாம். ஆனால் கர்த்தர் மகிழ்கிறாரா என்பதை யோசியுங்கள்.

வஸ்திக்கு மகிழ்ச்சி, ஸ்திரீகளுக்கு மகிழ்ச்சி. அது நிலைத்ததா என்றால் இல்லையே - இதற்கு நல்ல வேறோரு எடுத்துக்காட்டு மோசேயின் ஊழியம் கன்மலையைப் பார்த்துப் பேச வேண்டும் என்பது தேவ சித்தம். ஆனால் அதை அடித்தது சுயசித்தம் - அற்புதம் நடந்தது, மக்கள் மகிழ்ந்தார்கள் கர்த்தரோ மகிழவில்லை. மோசேயின் கண நேர சுயசித்தம் கானானை இழக்கச் செய்யவிட்டது.

சவுல் என்கிற மனிதனைக் கர்த்தர் சந்தித்த போது சடிதியாய் அவன் கீழே விழுந்தான் - விழுந்தது அவன் மாத்திரமல்ல அவனுக்குள் இருந்த சுயசித்தமும் சேர்ந்தே

விழுந்தது. உடனே அவன் தேவனைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வியைப் பாருங்கள் ஆண்டவரே! நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? (அப்போ 9:6) இந்தக் கேள்வி அவன் வாழ்க்கைத் தடத்தையே மாற்றி விட்டது.

இரட்சிப்பை சுதந்தரித்த அன்றே தேவ சித்தத்தை நிறைவேற்றத் தீவிரப்பட்ட பவுல் என்னும் சவுல் ஓட்டத்தை முடித்து விசுவாசத்தைக் காத்துக் கொண்டது சபைக்கு நல்ல முன் மாதிரி.

தெய்வ மக்களே நூறு சதம் தேவ சித்தம் செய்யத் தீர்மானியுங்கள் – மனுஷ சத்தம் – மாம்சீக சத்தம் உங்களை சுயசித்தம் செய்ய இசைய வைத்து விடாமல் ஆவியின் சத்தம் கேட்டு வாழுங்கள். ஆண்டவரோடு இசைந்து வாழுங்கள் வஸ்தியின் சுயசித்தம் வாய்ப்பை வீழ்த்தியது.

## ஊழியரை உதாசினப்படுத்தாதே :

வஸ்தியை வாய்ப்பிழக்கச் செய்த முதலாவது காரியத்தை இதுவரை கவனித்தோம். இதோ இரண்டாவது காரியம் – வசனத்தை வாசித்துப் பாருங்கள்.

**பிரதானிகள் மூலமாய்** ராஜா சொல்லியனுப்பின கட்டளைக்கு ராஜஸ்திரீயாகிய வஸ்தி வரமாட்டேன் என்றாள். (எஸ்தர் 1:12)

வஸ்திக்கு எல்லாமே கௌரவப் பிரச்சனை என்று நினைக்கிறேன். ராஜாவுக்கும், வஸ்திக்கும் குணாதிசயங்கள் நேர் எதிராக இருந்திருக்கிறது. ராஜாவோ எதற்கெடுத்தாலும் பிரதானிகளை அழைத்தான், ஆலோசித்தான் – அனுப்பித்தான். ஆனால் வஸ்தியின் நிலையோ வேறு.



அகாஸ்வேருவின் அழைப்பை ஏற்று வஸ்தி வராமல் போனதற்கு சில காரணங்கள் உண்டு. அவள் மௌனமாக வராமல் போயிருந்தால் தவிர்த்து விட்டாள் என்று இருக்கலாம். ஆனால் வரமாட்டேன் என்று அழுத்தி ஆணவமாகப் பதில் சொல்லியிருப்பதைப் பாருங்கள்.

இது இராஜாவை அவமதிப்பதற்காக சொல்லப்பட்ட பதில் அல்ல. அவனது ஆணையைத் தூக்கி கொண்டு வந்தவர்களை முகத்தில் அறைவதற்கு ஒப்பாக சொல்லப்பட்ட சொல்லடிகள்.

வசனத்தை கவனியுங்கள் **பிரதானிகள் மூலமாய் ராஜா சொல்லியனுப்பின** வார்த்தைகளுக்கு **வரமாட்டேன்** என்றாள். பிரதானிகள் தன்னை வந்து அழைப்பதா? அது தான் அங்கு பிரச்சனை.

அரசனாகிய அகாஸ்வேரு அவையில் அமர்ந்து கொண்டு அவன் அளக்கும் படியினால் தன் வயிறு வளர்க்கும் இந்த ஜீவிகள் 127 நாடுகளுக்கு ராஜாத்தியாகிய என்மேல் ஆதிக்கம் செலுத்துவதா? என்கிற இனம்புரியாத கொதிப்பு – தவிப்பு.

பிரதானிகளின் வார்த்தைக்கு என்று வஸ்தி செவி கொடுக்காமல் போனாளோ அன்றே அவள் வாழ்க்கை கீழ் நோக்கிப் பயணிக்க ஆரம்பித்து விட்டது. மீண்டும் ஒரு குறிப்பிட்ட வார்த்தை வேதத்தில் திரும்ப எழுதப்பட்டு இருப்பதைக் கவனியுங்கள். (வசனம் 1:15) **பிரதானிகள் மூலமாய் சொல்லியனுப்பின கட்டளைப்படி** ராஜஸ்திரீயாகிய வஸ்தி செய்யாததினிமித்தம் அவளுக்குதேச சட்டத்தின்படி என்ன செய்ய வேண்டும் என்று ராஜா கேட்டான்.

பிரதானிகளோ இதை சாதாரணமாக விட்டு விடவில்லை கிரீடத்திற்கே பங்கம் வர வைத்து விட்டார்கள்.

இதில் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவதைக் கவனியுங்கள். கர்த்தரின் ஊழியக்காரர்கள் ராஜாவின் பிரதானிகளுக்கு ஒப்பானவர்கள். உங்கள் ஊழியரை விட நீங்கள் படித்திருக்கலாம். கிருபை வரங்கள் பெற்றிருக்கலாம். ஆனாலும் வஸ்தியிடத்தில் பேச அகாஸ்வேரு பிரதானிகளைப் பயன்படுத்தியது போல உங்களிடம் பேச தமது ஊழியர்களைப் பயன்படுத்துகிறார். எனவே உங்கள் ஊழியருக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படியுங்கள்.

நீங்கள் முந்தின அதிகாரத்தில் வாசித்தபடியே கர்த்தர் தமது ஊழியக்காரர்களின் ஆலோசனையை நிறைவேற்று-கிறார். தமது ஸ்தானாதிபதிகளின் ஆலோசனையை நிலைப்-படுத்துகிறார்.

எந்த சூழ்நிலையிலும் ஊழியர்களை அற்பமாய் எண்ணாதீர்கள். உன்னைக் கொண்டு மட்டும் தான் பேசுவாரா என்று ஆரோனும், மிரியாமும் பேசினது போல் துணிகரங்கொண்டு (எண் 12:2) பேசாதீர்கள். உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்று கோராகைப் போல் கேட்காதீர்கள் (எண் 16:3), எங்கள் மேல் துரைத்தனம் பண்ணப் பார்க்கிறாயோ என்று (எண் 16 : 13) தாத்தான், அபிராமைப் போல் கேட்காதீர்கள் - இப்படிக் கேட்டவர்கள் கெட்டுப் போனார்களே சற்று சிந்தியுங்கள்.

பலர் ஊழியர்களை மிக சாதாரணமாக எண்ணி அல்லத்தட்டி அல்லல் அடைகின்றனர். அவர்களில்



பெரும்பாலும் ஆரோன், மிரியாம் இனத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

உங்கள் அண்ணன் அல்லது தம்பி அல்லது உங்கள் சகோதரியின் கணவர் ஊழியராக இருக்கலாம். இதற்காக நீங்கள் கூடுதல் உரிமையை எடுத்துக் கொள்ளக் கூடாது. மாறாக அவரது அழைப்பிற்கும் அபிஷேகத்திற்கும் இரட்டத்தனையான கனத்தை நீங்கள் கொடுக்க வேண்டும்.

அதை விடுத்து அவர் மேல் ஆதிக்கம் செலுத்தி அலட்சியப்படுத்துவீர்களாகில், உங்கள் கிரீடத்தை நீங்கள் இழந்து போவீர்கள்.

வஸ்தி மாபெரும் சிலாக்கியத்தை - மிக உயர்வான தகுதியை எத்துணை சடிதியாய் இழந்து போனாள் என்பதை சிந்தியுங்கள்.

- வீணான பெருமை
- சுயமான சித்தம்
- பிரதானிகள் மேல் அலட்சியம்

இந்த மூன்று காரியங்களால் வீழ்ந்து போனாள். நிற்கிற நீங்கள் விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்.

# 4. அழிவு பெற்ற ஆமான்

வேத புஸ்தகத்தில் மிகமுக்கியமான சாட்சிகளை இந்த எஸ்தர் புத்தகத்தில் உங்களால் காணமுடியும். முதலாவது நபர் ஆணவத்தினாலும், அகங்காரத்தினாலும், அந்தஸ்தையும் ஆயுளையும் இழந்து போன ஆமான். மற்றவர் மென்மையான அணுகுமுறையாலும், உண்மையான தாழ்மையினாலும் உயர்வையும், மேன்மையையும் பெற்றுக் கொண்ட மொர்தெகாய்.

இவனைக் குறித்த அறிமுகத்தை சற்றுக் கவனியுங்கள் **அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன்** என்று எஸ்தர் 3:1 இல் சொல்லப்பட்டுள்ளது.

ஆமான் என்பவன் ஆகாகியன். ஆகாகியன் என்றால் ஆகாக் ராஜாவின் வம்சத்தில் வந்தவன் என்று அர்த்தம். யார் இந்த ஆகாக் தெரியுமா? I சாமுவேல் 15:8 மற்றும் 33 ஆம் வசனம் சொல்கிறபடி அவன் ஒரு அமலேக்கியன் என்பதை அறியுங்கள்.

இந்த அமலேக்கைக் குறித்தும் அவன் பூர்வீகத்தைக்குறித்தும் நீங்கள் இன்னும் கூடுதலாய் அறிந்து கொள்வது நலம்.

ஆதியாகமம் 36:15,16 வசனங்களை வாசித்தால் அமலேக்கு என்பவன் ஏசாவின் பேரன் என்பது தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்.

ஆக நீங்கள் நல்ல தெளிவான விபரங்களைப் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன். ஏசாவின் பேரனாகிய அமலேக்கின் வழியில் வந்த ஆகாகு என்னும் ராஜ வம்சத்தைச் சார்ந்தவன் இந்த ஆமான் என்பதே இப்போதைக்கு நீங்கள்



அறிந்து கொள்ள வேண்டியது.

இதில் ஒரு குறிப்பிட்ட காரியத்தைக் கவனியுங்கள். ஏசா வாக்குத்தத்தம் பெற்ற யாக்கோபுக்கு எதிராக எழும்பியதும், அமலேக்கு இஸ்ரவேலருக்கு விரோதமாக எழும்பியதும் (யாத் 17:8), ஆகாகுக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தம் நடந்ததும் (I சாமு 15:7), அந்த வரிசையிலேயே ஆமான் யூதர்களுக்கு விரோதமாக எழும்பியதும் எத்துணை ஒற்றுமை பார்த்தீர்களா?

இன்று நமக்கு விரோதமாக சத்துரு எழுந்திருக்கும் போது நாம் ஒரு போதும் சோர்ந்து போய் விடக் கூடாது. ஆதிமுதலாய் இந்த யுத்தம் பரிசுத்தவான்களுக்கு எதிராக நடந்துதான் வருகிறது. எப்படி ஈசாக்கு இஸ்மவேலுக்கு முன்பாக, இஸ்ரவேலர் அமலேக்கியருக்கு முன்பாக, மொர்தெகாய் ஆமானுக்கு முன்பாக தாழ்ந்து சிறுமைப்பட்டுப் போகாமல் காக்கப்பட்டார்களோ! அப்படியே தேவன் உங்களுக்கு ஜெயக்கொடியைக் கட்டளையிடுவார்.

ஆமானை இராஜா தனக்கு அடுத்த நிலையில் இருக்கும்படி உயர்த்தினான். ஆனால் அதை அவனால் காத்துக் கொள்ள முடியவில்லை. எந்த ராஜா அவனை உயர்த்தினானோ அதே ராஜா அவனை மரத்தில் தூக்கிப்போட கட்டளையிட்டான். இதற்கு முழுக்காரணம் ஆமானின், அளவுக்கு மிஞ்சிய பெருமையே.

அழிவுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை என்று வேதம் சொல்கிறது. ஆம் அகந்தையும் மனமேட்டிமையும் ஆமானுக்கு இரண்டு கால்களாக இருந்தது. அவைகளால் நாள்தோறும் ஆபத்தை நோக்கி அவன் பயணம் செய்தான்.

தெய்வபிள்ளையே உங்கள் வாழ்வில் உயர்வு வரும் போது சற்று நிதானியுங்கள், தாழ்மைப்படுங்கள், இது என்னாலோ என் திறமையினாலோ வந்தது அல்ல, இது எனது தாழ்வில் என்னை நினைத்த தேவனின் தயவு என்று தாழ்மையின் சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள்.

அப்படி செய்வதை விட்டு உங்களைப் பற்றியும் உங்களுக்கு உண்டானவைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுவீர்களாகில், உங்களுக்குள்ளே ஆமானின் ஆவி கிரியை செய்கிறது என்று அர்த்தம். விபரீதம் வருவதற்கு முன்பு நீங்கள் உங்களை திருத்திக் கொள்வது நல்லது.

எஸ்தர் 5:11 ஐ வாசித்துப் பாருங்கள். நான்கு விதமான காரியங்களைக் குறித்து அவன் பெருமைப்பட்டதாக வேதம் கூறுகிறது. 1. தனது ஐசுவரியத்தின் மகிமையைக் குறித்து 2. தன் பிள்ளைகளின் திரட்சியைக் குறித்து 3. தனது பதவி உயர்வைக் குறித்து 4. ராணியிடம் தனக்கு உண்டாயிருக்கும் செல்வாக்கைக் குறித்து, இந்த நான்கிலும் உங்களுக்கு உலகப் பிரகாரமாகவோ ஆவிக்குரிய பிரகாரமாகவோ பெருமை வராமல், தேவ கிருபையில் பலப்படுங்கள்.

அதிகாரமும், ஐசுவரியமும் இருப்பதினால் எதையும் எப்படியும் சாதித்து விடலாம் என்பது ஆமானின் எண்ணம். அதன் உச்சக்கட்ட நிலைதான் காரணமில்லாமல் ஜனத்தில் எளியவர்கள் மேல் பகை உணர்ச்சி அவனுக்குள் வளர்ந்தது.

இங்கே இரண்டு காரியத்தை நாம் கவனிக்க வேண்டும். முதலாவது, காரணமின்றி எளிமையான மக்களை பகைக்கக் கூடாது. இரண்டாவது எந்தக் காலத்திலும் தேவன் தெரிந்து கொண்ட ஜனத்திற்கு விரோதமாக எழும்பக்கூடாது. இவை



இரண்டும் ஆமானுக்கு விரோதமா, தேவன் எழும்ப வழி வகுத்து விட்டது.

தான் வெட்டின குழியில் தானே விழுந்தது போல் தான் நாட்டின மரத்தில் தானே தொங்க வேண்டிய நிலை ஆமானுக்கு வந்தது மிகப்பெரிய பரிதாபமான காரியம். மனிதன் எதை விதைக்கிறானோ அதை அறுத்தே தீர வேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளே! எவரைக் குறித்தும் தீதான எண்ணங்கள் உங்களை ஆட்கொள்ளாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். பாவம்! ஆமான். அவன் எவைகளைக் குறித்துத் தேவையில்லாமல் கற்பனை செய்தானோ அவைகள் ஒவ்வொன்றும் அவனுக்கு எதிராகவே வாய்த்து விட்டது.

தன்னைத்தான் ராஜா கனம்பண்ணப் போகிறான் என்று கற்பனையில் மிதந்தான், மாறாக வாய்ப்பு மொர்தெகாய்க்குக் கிட்டியது. மொர்தெகாய் தூக்கில் தொங்குவதைக் கற்பனை செய்தான். மாறாக அந்த வாய்ப்பு அவனுக்கே வந்துவிட்டது.

எதிலும் அடக்கம் வேண்டும், விவேகம் வேண்டும், தேவ பயம் வேண்டும் என்பதற்கு ஆமான் நல்ல எடுத்துக்காட்டு.

அகாஸ்வேருவினிடத்தில் யூதர்களைக் குறித்து சொல்லும் போது, ஆமான் பயன்படுத்திய வார்த்தையைப் பாருங்கள். உம்முடைய ராஜ்யத்தின் சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒரு வித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள்; **அவர்களுடைய வழக்கங்கள் சகல ஜனங்களுடைய வழக்கங்களுக்கும் விகற்பமாய் இருக்கிறது...** என்றான். (எஸ்தர் 3:8)

ஆம் இது எவ்வளவு பெரிய சாட்சி பாருங்கள்.

யூதர்களின் வழக்கம் / பழக்கம் மற்ற எல்லா ஜனங்களிலும் வித்தியாசப்பட்டு இருந்தது. அதனால் இவர்களது நடவடிக்கை மற்றவர்களுக்கு விகற்பமாகத் தோன்றியது. ஆம் உண்மையான கிறிஸ்தவர்களின் உடை, போஜனம், சமுதாயத்தில் உள்ள ஈடுபாடு குறிப்பிடத்தக்க விதத்தில் மாறுபட்டு இருக்க வேண்டும்.

**உங்களின் நடை, உடை, உணவு இவைகளில் உலகத்தார்க்கு நீங்கள் விகற்பமாக இருந்தால், நீங்கள் முதல்தரமான விசுவாசி. இவைகளில் உலகத்தாரை விட சற்று வித்தியாசம் காண்பித்தால் நீங்கள் ஒரு சராசரி விசுவாசி. உங்களுக்கும் உலகத்திற்கும் இதில் வித்தியாசம் இல்லையென்றால், நீங்கள் விசுவாசி என்று சொல்லிக் கொள்வதற்குத் தகுதியிழந்தவர் என்பதை மறந்து விடக்கூடாது.**

நாம் உலகத்திற்கு உரியவர்கள் அல்ல, உலகத்திலும், உலகத்தில் உள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் என்ற வசனத்தை இங்கு நினைவுகூருவது நல்லது. மாறுபாடான இந்த சந்ததியின் காரியங்களை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்வது மிக சாலச் சிறந்தது.

ஆமான் மிகக் குறுகிய காலத்தில் உயர்ந்த இடத்திற்கும் அதிகாரத்திற்கும் வந்து விட்டான். துன்மார்க்கன் புல்லைப்போல் செழிப்பான் என்ற வசனத்திற்கு அவன் நல்ல எடுத்துக்காட்டு. என்ன உயர்ந்து என்ன பிரயோஜனம்? புல் சடிதியில் வாடிப்போவது போலவே அவனும் அவன் சந்ததியும் வாடிப்போனார்கள். அடுத்தவர்களின் இரத்தத்தின் மேல் தனது அதிகாரக் கோட்டையைக் கட்ட நினைக்கிற எவரும் ஆமானைப் போலவே அழிந்து ஒழிந்து போவார்கள்.



தேவ ஜனத்தை எதிர்த்த ஆமான் பிசாசுக்கு சாயலாக இருக்கிறான். அவனது எண்ணம், எப்போதும் குற்றம் சொல்வது, குருதி குடிப்பது இவைகளைத் தவிர வேறெதுவும் அவனிடத்தில் இல்லை. அதே வேளையில் எஸ்தர் எழும்பி அவனை நிர்மூலம் பண்ணினது போல், இயேசுவும் சாத்தானின் தலையைக் கல்வாரி சிலுவையில் நசுக்கி வெற்றி சிறந்தார்.

இங்கே ஒரு முக்கியக் காரியத்தை நீங்கள் கவனிக்க வேண்டும். ஆமான் மரித்துப் போனான் என்பது உண்மை தான். ஆனால் அவன் மரித்தவுடன் யூதர்கள் உடனே விடுதலை பெற்றுவிடவில்லை. ஆமான் மரித்துப் போன பின்பும் அவன் போட்ட சட்டம்திட்டம் அமுலில் இருந்தது. அது பிழைத்துக் கொண்டு யூதர்களைக் கலங்கவும் வைத்தது.

அதைப் போலவே பிசாசின் தலையை நமது அருள்நாதர் கல்வாரி சிலுவையில் நசுக்கிப் போட்டாலும், அந்தத் தலையிழந்த முண்டத்தின் வல்லமை இன்றும் கிரியை செய்து கொண்டுதான் இருக்கிறது.

எஸ்தர், ஆமானை மரணத்திற்குள்ளாக்கினது மாத்திரமல்ல, அவன் சட்டத்தினையும் மாற்றினாள். இதைப் போலவே நசுக்கப்பட்ட சாத்தானின் வல்லமைகளை அழிக்க – அகற்ற நமது ஆண்டவரின் வல்ல நாமம் நமக்குப் போதுமானதாக உள்ளது.

உங்களுக்கு விரோதமாக எழும்பும் இவ்வுலகத்தின் வல்லமைகளை குறித்து கிஞ்சிற்றும் கவலைப்பட வேண்டாம். இயேசுவின் நாமத்தில் பூரண விசுவாசம் உள்ளவர்களாய் அவர் மேல் சார்ந்து கொள்ளுங்கள். தோற்றுப் போனவனின் மிரட்டும் அதிகாரங்களை முறியடிக்கும் புதிய வல்லமைகளைக் கர்த்தர் உங்களுக்கு அருள்வார்.

என் அன்பு வாசகரே, இன்றைக்கு நீங்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து, இனி என்ன ஆகுமோ என்று தியங்கலாம். உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கு எதிராக எழும்புகிறவர்களின் சந்ததியில் பேர் சொல்ல ஒரு நபர் கூட இல்லாதபடி முற்றிலும் அழிக்க ஆண்டவர் உங்கள் பட்சத்தில் இருக்கிறார்.

ஆமான் மாத்திரமல்ல, அவனின் பிள்ளைகளும் அழிந்து போனார்களே, ஆமானின் குமாரர் பட்டயத்தால் கொல்லப்பட்டது மாத்திரமல்ல செத்துப் போன அவர்கள் உடல்கள் கூட சும்மா விடப்படவில்லை. தூக்கிக் கொண்டு வந்து (எஸ்தர் 9:14) தூக்கிலே தொங்க வைத்தார்கள்.

பார்த்தீர்களா! நியாயதீர்ப்பை. மொர்தெகாய்க்கு ஒரு மரத்தை ஆமான் நாட்டினான். தேவனோ அவன் பிள்ளைகளுக்கும் அப்படியே அழிவு நிகழ நியாயத் தீர்ப்புக்கு ஒப்புக் கொடுத்தார்.

பிரியமானவர்களே! ஆமான் உங்களை ஒன்றும் செய்துவிட முடியாது. அதே சமயத்தில் ஆமானின் ஆவி உங்களில் கிரியை செய்யாதபடி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

தாழ்மை, அடக்கம், தேவ ஜனத்தின் மேல் அன்பு, தெய்வ பயம், உங்களில் எந்த நாளும் தங்கியிருக்கக் கடவது.

# 5. மேன்மை பெற்ற மொர்தெகாய்

அந்நிய தேசத்திற்கு அடிமையாகக் கொண்டு போகப்பட்ட சரித்திரத்தின் அறிமுகத்தோடு ஆரம்பமாகி, அந்த தேசத்தின் அதிபதியான அற்புதமான வரலாற்றுக் குறிப்போடு முடிவடையும் மொர்தெகாயின் வாழ்க்கை எத்துணை மகிமையானது பாருங்கள்.

ஆளப்பிறந்தவன் எந்த இடத்திலும் அடிமைப்படுவது இல்லை. அடைக்கப்பட்டுக் கிடப்பதுமில்லை என்பதற்கு யோசேப்பு – தானியேல் வரிசையில் மொர்தெகாயின் வாழ்வு மணிமகுடமாக விளங்குகிறது.

உண்மையிலே மொர்தெகாயின் பெயருக்கு சிறியவன் என்று அர்த்தம். ஆனால் எஸ்தர் ஆகமம் கடைசி அதிகாரம் கடைசி வசனத்தில் அவன் யூதருக்குள் பெரியவனாக இருந்தான் என்று, ஆவியானவர் எழுதி வைத்திருப்பது எத்துணை ஆச்சரியமானது என்பதை எண்ணிப் பாருங்கள்.

அவர் சிறியவனைக் குப்பையிலிருந்து எடுத்து அவனை – மகிமையுள்ள சிங்காசனத்தை சுதந்தரிக்கவும் பண்ணுகிறார் ( I சாமு 2:8) என்ற வசனத்திற்கு மொர்தெகாய் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு.

மொர்தெகாயினைக் குறித்து மற்ற காரியங்களை கவனிப்பதற்கு முன்பு அவரது மனிதாபிமான குணாதிசயத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். தாயும் தகப்பனுமற்ற எஸ்தரைத் தனது குமாரத்தியாக எடுத்துக் கொண்டு, தன் ஜனத்தின் மேல் அக்கறையும், பொறுப்புமுள்ள மனிதனாகத் திகழ்ந்துமிருக்கிறார்.

அதனால் தான் தேவன் தனது ஜனத்தை விடுவிக்கும் ஊழியத்தில் முக்கிய பங்கைக் கொடுத்தாரோ? என்று யோசிக்கிறேன்.

தெய்வ மக்களிடத்தில் குறிப்பாக தேவனுடைய சபை இந்நாட்களில் இந்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதில் தனி கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ஆதி சபையில் இப்படிப்பட்ட காரியங்களில் மிகக் கருத்தாய் விசாரிப்புகள் நடத்தப்பட்டன. இன்று சபை ஒருபக்க (One Side) ஆவிக்குரிய வாழ்வு வாழ்வது வேதனைக்குரிய ஒன்றே.

பரிசுத்த ஆவி வருகிறபோது அந்நிய பாஷை வருகிறது. ஆவியின் வரங்கள் கிரியை செய்கிறது. ஆனால் அன்பு எங்கே போனது என்று தெரியவில்லை. பரிசுத்த ஆவியின் மூலம் தேவனுடைய அன்பு நம் உள்ளங்களில் ஊற்றப்பட்டது உண்மையானால் அதனால் வரும் கிரியை எது? எங்கே? என்று கேட்க விரும்புகிறேன்.

மொர்தெகாய் எஸ்தர் மேல் பாரப்பட்டு, கரிசனை கொண்டான். இந்த கொஞ்சத்தில் உண்மையாய் இருந்த இவரை தேவன் அநேகத்திற்கு அதிகாரியாக வைத்தார்.

தன் குடும்பத்தைக் குறித்த பாரம் இல்லாத மனிதனிடத்தில் அந்த ஊரைக் குறித்த பாரத்தை தேவன் வைக்க மாட்டார். மனதுருக்கம் உள்ள மக்களையே தமது மகிமையின் பாத்திரமாகக் கர்த்தர் பயன்படுத்துகிறார்.

மொர்தெகாய் பென்யமீன் கோத்திரத்தைச் சார்ந்தவனாக இருந்த போதிலும், இவனை யூதன் என்று வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளதை எஸ்தர் 2:5 இல் உங்களால் காண முடியும்.

எஸ்தர் புத்தகத்தில் 53 முறை யூதர் என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவைகளில் ஒரு காரியத்தை நாம்



கண்டு கொள்ள முடிகிறது. அதாவது யூதாவின் வம்சத்தில் பிறந்தவர்களை மாத்திரமல்ல இஸ்ரவேலில் உள்ள எல்லாக் கோத்திரமும், பின்னாளில் யூதர்கள் என்றே அழைக்கப்பட்டார்கள்.

மாத்திரமல்ல யெகோவா தெய்வத்தை ஆராதிக்கிற அனைவரும் யூதமார்க்கத்தார் என்று அழைக்கப்பட்டனர். எஸ்தர் புத்தகம் 8:17 - ஐ வாசித்துப் பாருங்கள்.

...யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால், அவர்களில் அநேகர் யூதமார்க்கத்தில் அமைந்தார்கள். இந்த வசனத்தின்படி யூத மார்க்கத்தைத் தழுவிக் கொண்டவர்களும் யூதர்கள் என்றே அழைக்கப்பட்டார்கள்.

சரி, இருக்கட்டும், மொர்தெகாய் யூதன் என்று அழைக்கப்பட்டான். யூதன் என்றால் அந்தப் பெயருக்குப் பின்னால் மிகச் சிறந்த தகுதிகள் அமைந்திருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

யூதர்கள் = பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் (SANTIFIED)
= விசேஷமானவர்கள் (SPECIALISED)
= வேறு பிரிக்கப்பட்டவர்கள் (SEPARATED)

அந்நிய தேசத்தில் மொர்தெகாய் தன்னையும் தனது அழைப்பையும் அடகு வைத்துவிடவில்லை. மாறாக எல்லா நிலையிலும் தனது மார்க்க ரீதியான பக்தியில் தேவனுக்கு முன்பாக உத்தமனாக இருந்தான்.

எஸ்தர் 10:3 - ஐ வாசித்துப் பாருங்கள் இந்த அடிமை ஒருநாள் ராஜாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவது இடத்திற்கு இராஜாவால் உயர்த்தப்பட்டான். இந்த உயர்வு எப்படி வந்தது யோசித்துப் பாருங்கள்.

ஆமானைப் போல் அரசு கஜானாவுக்கு ஏதாகிலும் பணம் கட்டி வாங்கினானா அல்லது அரண்மனையில் அறிமுகமானவர்களின் அரியமுயற்சியால் அரியணையைப் பிடித்தானா? இல்லை, இல்லவே இல்லை.

இவனை ராஜாவே உயர்த்தும்படி தேவன் கிரியை செய்தார் என்பது தான் தனிச்சிறப்பு, மொர்தெகாய் ஒரு யூதன் அவர்கள் உடன்படிக்கையின் ஜனங்கள், பரிசுத்தமாக்கப் பட்டவர்கள். இந்த மொர்தெகாய் அந்நிய தேசத்திலும், தேவனுடைய உடன்படிக்கையை - பிரமாணத்தை உடைக்கவுமில்லை மாற்றிக்கொள்ளவுமில்லை.

ஆமானைப் பார்க்கும் போது ஒரு கும்பிடு என்ன நாலு கும்பிடு கூட போடலாம். அப்படிப் போட்டு இருந்தால் சில சலுகையும், உயர்வும் கூடக் கிடைத்திருக்கும். பகையை சம்பாதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

நியாயப் பிரமாணத்தில் எந்த விக்கிரகத்தையும் எந்த சொருபத்தையும் வணங்க வேண்டாம் என்று சொல்லப்பட்டு இருப்பதை நினைத்துப் பாருங்கள். தானியேலின் நண்பர்கள் ராஜா நிறுத்தின சிலையைப் பணிந்து கொள்ளாமல் உடன்படிக்கையில் உண்மையாய் இருந்தது போலவே, ராஜா கட்டளை கொடுத்தும் ஆமானை மொர்தெகாய் வணங்கவில்லை.

இதைக் கர்த்தர் பார்த்தார், உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான் என்றபடி, அவனது உண்மையைக் கர்த்தர் கனம்பண்ணினார். கர்த்தருக்குக் கனம் கொடுத்த அவனைக் கர்த்தர் கனம்பண்ணினார்.

தெய்வப்பிள்ளையே விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் உறுதிப்படுங்கள், தற்காலிக உயர்வுக்காக எந்த மனுஷனையோ,



எந்த விக்கிரகத்தையோ கனம்பண்ணாதிருங்கள். லஞ்சத் தினாலோ - பெயர் மாற்றத்தினாலோ உங்களுக்கு உயர்வு கிடைக்க வழிதேடாதீர்கள். தேவனை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ மறுதலிக்கும் செயலில் ஈடுபடாதீர்கள்.

உபத்திரவங்கள் - நிந்தைகள் கூடின போதும் மொர்தெகாய் தன் உண்மையில் சற்றும் தொய்வு பெறவில்லை. ஆமான் உயர்த்தியிருந்தால் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருக்காது. மாறாக கர்த்தர் மேல் உள்ள வைராக்கியத்தினிமித்தம் எதையும் பணிந்து கொள்ளாததினால் தேவன் தேசத்தில் முதல் மனிதனாய் உயர்த்தினார்.

மிக நெருக்கமான காலக் கட்டத்தில் உள்ள நாம் விழிப்பாயிருத்தல் அவசியம். பாடுகள் வந்தாலும் பயப்படாதீர்கள் - ஆமான்களைப் பணிந்து கொள்ளாதீர்கள். தேவன் கரத்தில் இருந்து வரும் உயர்வு மிகப் பெரியது. அதைப் பெற்றுக் கொள்ள தேவ சமுகத்தில் உண்மையாயிருங்கள்.

தேசத்தில் உயர்ந்தவன் மாத்திரமல்ல எஸ்தர் 10:3 இன்படி அவன் **யூதருக்குள்ளே பெரியவனாகவும் இருந்தான்** என்று அறிந்து கொள்ள முடிகிறது.

127 நாடுகளில் பரவிக் கிடக்கும் யூதர்கள் யாவர்க்கும் கர்த்தர் இவனைப் பெரியவனாக்கினார். இதற்கு என்ன காரணம் என்பதை நேரடியாகக் கண்டு கொள்ள முடியாவிட்டாலும், அதற்கான காரணம் என்னவாய் இருக்கும் என்பதை வேத வசனத்தின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

இரண்டு வசனங்களை உங்கள் முன்பு வைக்கிறேன். சங் 18:35 - ஐ கவனியுங்கள். உமது காருண்யம் என்னைப் பெரியவனாக்கும். ஆம் கர்த்தரின் காருண்யம் மொர்தெகாயின் மேல் பெரியதாக இருந்தது. அடுத்த வசனத்தைக் கவனித்துப்

பாருங்கள் மத் 20:26 உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால் அவன் உங்களுக்குள்ளே பணிவிடைக்காரனாய் இருக்கக்கடவன்.

மெய்யாகவே மொர்தெகாய் உயர்த்தப்பட்டதற்குக் காரணம், தன்னைத்தானே பெரியவன் ஆக்கிக் கொள்ளாமல் முழுவதும் தனது ஜனத்திற்குத் தன்னையே அர்ப்பணித்து பணிவிடைக்காரனாகத் திகழ்ந்தான். எஸ்தர் ராணியாக மாறினபின் அதைப் பயன்படுத்தி நல்ல வேலைக்குச் சென்று இருக்கலாம். வேதத்தைப் பாருங்கள் (எஸ்தர் 5:13) அதன் பின்னும் அவன் வாசலில் உட்கார்ந்து காவல்காத்துக் கொண்டிருந்தான்.

பிரியமானவர்களே! நீங்கள் மொர்தெகாயைப்போல் தாழ்மையும் தேவ ஜனத்திற்கான அர்ப்பணிப்பும் உள்ள நபராக இருந்தால், நீங்கள் எங்கே உங்களைத் தாழ்த்தினீர்களோ அங்கேயே கர்த்தர் உங்களை உயர்த்துவார்.

மொர்தெகாய் உடன்படிக்கையில் உண்மை, உள்ளத்தில் தாழ்மை கொண்டு இருந்தது மாத்திரமல்ல, எஸ்தர் 10:3 – ஐ மீண்டும் வாசித்துப் பாருங்கள். தன் சகோதரருக்குள்ளே பிரியமானவனும், தன் குலத்தாருக்கெல்லாம் நன்மை உண்டாகப் பேசுகிறவனுமாயிருந்தான் என்று எழுதப்பட்டுள்ளது.

ஆவிக்குரியவர்களின் செய்கையும், பேச்சும் மொர்தெகாயைப் போல் இருத்தல் வேண்டும். எல்லா சகோதரர்களுக்கு அன்பும், பிரியமுமாய் இருந்தது எத்தனை ஆச்சர்யம் பாருங்கள். செய்கையில் எல்லா மக்களுக்கும் பிரியமாய் நடப்பதே மேன்மை, எல்லாருக்கும் எல்லா வேளையிலும் சமாதானம் உண்டாகப் பேசுவதே உத்தமம்.



நீதிமானுடைய நாவு சுத்தவெள்ளி என்று வேதம் கூறுகிறபடி, நமது வார்த்தைகள் இரட்சிப்பிற்கேதுவாய் இருத்தல் வேண்டும்.

நீதிமொழிகள் 13:5 இல் சொல்லியுள்ளபடி பொய்பேச்சு, தானியேல் 7:8,11 சொல்கிறபடி பெருமையான பேச்சு, I தீமோ 1:6 சொல்கிறபடி வீணான பேச்சை நமது நாவை விட்டு விலக்க வேண்டும்.

சமாதானமுண்டாகப் பேச உங்களுக்கு எளிய வழியை சொல்லித்தர விரும்புகிறேன். முதலாவது, யோவான் 7:24 சொல்கிறபடி நடக்க முயற்சி செய்யுங்கள். தோற்றத்தின்படி தீர்ப்பளித்து எந்தக் காரியத்தையும் எவரிடமும் தம்பட்டம் அடிக்காமல் இருங்கள். இரண்டாவதாக, யோவான் 12:3 இன்படி இயேசுவை உங்கள் வாழ்க்கையில் உயர்த்திப் பேசுங்கள். அப்போது எல்லோரும் உங்களிடம் ஓடி வருவார்கள்.

மூன்றாவதாக, யோவான் 15:12 ன்படி குறையும் தப்பிதமும் நம்மில் இருந்தபோதும் இயேசு நம்மில் எப்படி அன்பு கூறுகிறாரோ, அப்படியே மற்றவர்களிடம் அன்பு கூருங்கள்.

நான்காவதாக, யோவான் 18:36 இன்படி இயேசு தனது ராஜ்யத்தை ஸ்தாபிக்க தர்க்கரீதியாக இறங்காமல், பிரச்சனையான நேரங்களில் தேவ ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளும்படி அமைதலாக இருந்தது போல் சாந்தமாக பதில் சொல்லுங்கள்.

மொர்தெகாய் உடன்படிக்கையில் உண்மையாக, தாழ்மையாக, எல்லாருக்கும் பிரியமாக, சமாதான முண்டாகப் பேசுகிறவனாக இருந்ததினால் தேவன் அவனைத் தாழ்மையிலிருந்து உயர்த்தி, அரியணையில் அமரப்பண்ணி நமக்கு நல்ல மாதிரியாக அவரை வைத்துள்ளார்.

# 6. குணவதியான எஸ்தர்

இந்த புத்தகத்தின் முக்கிய பாத்திரமாகிய எஸ்தரின் ஆரம்பமே மிக சுவாரசியமானது. உலகம் தழுவிய ஒரு மாபெரும் அழகிப்போட்டி 127 நாடுகளில் இருந்து ரூபவதிகளாய் இருக்கிற பெண்கள் பங்கேற்கிறார்கள். இவர்கள் யாவரிலும் எஸ்தர் தேர்ந்தெடுக்கப்படுவது எத்துணை சிறப்பானது பாருங்கள்.

என்னிடம் ஒருவர் கேட்டார். வஸ்தி அதிக அழகா? எஸ்தர் அதிக அழகா? நான் உடனே சொல்லி விட்டேன். வஸ்திதான் அழகு என்று. அவர் விடவில்லை வசனத்தின்படி சொல்லுங்கள் என்றார்.

வசனம் 1:10 ஐயும் 2:7 ஐயும் வாசித்துப் பாருங்கள். வஸ்தி மகா ரூபவதியாக இருந்தாள். எஸ்தர் ரூபவதியாக இருந்தாள். ஆனால் வஸ்தி புறம்பே மகாரூபவதி. எஸ்தரோ, உள்ளான பூரண அழகுள்ளவள் என்பதே அவளின் சிறப்பு.

அதனால் தான் அனாதையான நிலையில் மொர்தெகாயின் கண்களில் தயவு, கன்னிமாடத்தில் யேகாயின் தயவு, ராஜசமூகத்தில் அகாஸ்வேருவின் தயவு, அதுமாத்திரமா வசனம் 2:15 ன்படி தன்னைக் காண்கிற எல்லோர் கண்களிலும் அவளுக்கு தயவு கிடைத்தது.

இவளுடைய சொந்தத் தகப்பனின் பெயர் அபியாயேல் (எஸ்தர் 2:15) அவளது பெற்றோர் மரித்த படியால், சகோதர உறவில் உள்ள மொர்தெகாய் இவளை வளர்ப்பு மகளாக தத்து எடுத்து உடன் வளர்த்தான். இந்த எபிரேயப் பெண்ணின் சொந்த பெயர் அத்சாள், பெர்சியப் பெயர் எஸ்தர், எபிரேயப் பெயருக்கு மிருதுக்கொடி என்றும், பெர்சியப் பெயருக்கு நட்சத்திரம் என்றும் பொருள்படும்.

இந்த அத்தியாயங்களில் எஸ்தர் என்கிற பாத்திரத்தைப் பல்வேறு கோணங்களில் தியானம் செய்யப்போகிறோம்.



எஸ்தர் என்றால் நட்சத்திரம் இவள் யூதர்கள் மரணப்பிடியிலிருந்து விடுதலையாக்கின காரியத்தில், விடிவெள்ளி நட்சத்திரமாகிய கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாய் இருக்கிறாள்.

அகாஸ்வேரு ஆண்டவருக்கு ஒப்புமைபடுத்தப்படுகிற போது, எஸ்தர் மணவாட்டியாகி சபைக்கு ஒப்பாகிறாள்.

பொதுவான சுபாவப்படி அவள் குணாதிசயங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, நல்ல மாதிரியான தனிப்பட்ட விசுவாச ஆவிக்குரிய ஜீவியத்திற்கு முன் மாதிரியாகத் திகழ்கிறாள்.

**குணவதியான எஸ்தர்**

எஸ்தர் புத்தகம் முழுவதும் மிகப் பொறுமையாக வாசித்துப் பாருங்கள். (இதை எழுதுகிற ஆசிரியர் சுமார் 75 முறை எஸ்தர் புத்தகத்தை வாசித்து இருக்கிறார்) அதில் எஸ்தரின் முதிர்ச்சியான நல்சுபாவங்களை உங்களால் கண்டு கொள்ள முடியும்.

நாளுக்கு நாள் உயர்வின் மேல் உயர்வையும் அதைப் பெற நாளுக்கு நாள் மனிதர் கண்களில் தயையின் மேல் தயையையும் எஸ்தர் பெற்றுக் கொண்டதற்குக் காரணம், அவளுக்குள் பொதிந்திருந்த திவ்ய சுபாவங்களே.

கிறிஸ்தவர்களுக்குப் பக்தி இருக்கிற அளவிற்கு, சில சமயங்களில் புத்தி இல்லாமல் போய்விடுகிறது என ஒரு பிரசங்கியார் தனது செய்தியின் போது சொல்லக் கேட்டு இருக்கிறேன். இந்தக் கூற்று ஒத்துக் கொள்ள வேண்டிய ஒன்றுதான் என்று நானும் கருதுகிறேன்.

ஆனால் எஸ்தரிடத்தில் பக்தி இருந்தது, அத்தோடு புத்தியும் அதனைப் பயன்படுத்தும் யுக்தியும் இருந்தது.

குணவதியான எஸ்தர் என்ற தலைப்பில் ஐந்து விதமான நற்குணங்களை உங்களுக்கு இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

## I எஸ்தரின் தாழ்மை :

அனாதைப் பெண்ணாக இருந்த காலத்திலும் சரி அரசியான பிறகும் சரி, எஸ்தருக்கு இருந்த தாழ்மை மிகப் பாராட்டப்பட வேண்டியதும் குறிப்பிடப் பட வேண்டியதுமான ஒன்றாகும்.

இங்கே ஒரு வசனத்தைத் தருகிறேன். கவனியுங்கள், எஸ்தர் மொர்தெகாய் இடத்திலே வளர்ந்த போது, அவன் சொற்கேட்டு நடந்தது போல இப்பொழுதும் அவன் சொற்கேட்டு நடந்து வந்தாள்.

இது ஒரு அசாதாரணமான காரியம். தாழ்வில், ஏழ்மையில் அடங்கி இருப்பது என்பது எளிது. உயர்வில், வசதியில் முன்போல் அடங்கி இருப்பது என்பது பெரிய கிருபையே.

இப்பேர்ப்பட்ட உயர்வில் பணிவு எவருக்கு இருக்கிறதோ, அவரில் கர்த்தர் பிரியப்படுகிறார். மகிமைப்படுகிறார்.

ஏறிவந்த ஏணியை எட்டி உதைக்கும் ஈனச்செயல் ஆவிக்குரிய மக்களிடத்தில் காணப்படக் கூடாது. நன்றியறிதல் உள்ளவர்களாக எப்போதும் இருத்தல் அவசியம்.

சாராள் ஆகாருக்கு ஆபிரகாமைச் சேரும் வாய்ப்பைப் கொடுத்தாள். அவளோ தான் கர்ப்பவதியான போதோ தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். முடிவு வனாந்திரம் – பிரிவு – தனிமை.

தெய்வப் பிள்ளையே கவனம் தேவை. நீ நல்ல நிலைக்கு வர உனக்கு எவர் உதவி செய்து இருந்தாலும், அதை



மறந்து விடாதே – அவர்கள் மனம் வருந்தும்படி புண்படும்படி பேசாதே, நடந்து கொள்ளாதே. அது உனக்கு நன்மையாக லபியாது.

அப்படி நீ மேட்டிமை அடையும் பட்சத்தில், எல்லாவற்றையும் ஆள்கிற கர்த்தர் சகலத்தையும் திருப்பி விடுவார். மறந்து விடாதே. யாரை ஆகார் அற்பமாக எண்ணினாளோ, அந்த சாராளிடமே ஏறக்குறைய 16 ஆண்டுகள் அடங்கிப் போக வைத்து விட்டார்.

விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை, இதற்கு சரியான எடுத்துக்காட்டு வஸ்தி. மேன்மைக்கு முன்னானது தாழ்மை. இதற்கு நல்ல முன்மாதிரி எஸ்தர்.

வேத புத்தகம் முழுவதிலும் நல்ல கருத்துக்கோர்வை யைக் காண முடியும். யார் யார் தங்களைத் தாழ்த்தினார்களோ, அவர்கள் உயர்த்தப்பட்டார்கள். மோசே, தாவீது, எரேமியா, பவுல் போன்றோர் இதில் அடங்குவர்.

எவர்கள் தாங்கள் உயர்த்தப்பட்ட நிலையில் தாழ்மைப்படுவதற்குப் பதிலாக மேட்டிமை கொண்டார்களோ, அவர்கள் தாழ்த்தப்பட்டார்கள். நிம்ரோத், நேபுகாத் நேச்சார், உசியா, லூசிபர் இப்படிப் பலர் இதில் அடங்குவர். நீங்கள் உயர்த்தப்படும்படிக்குத் தாழ்மையைத் தரித்துக் கொள்ளுங்கள். உங்கள் நடத்திப்புக்காரர்களுக்குக் கீழ்ப்படிந்து இருங்கள்.

## II எஸ்தரின் தியாகம் :-

எஸ்தருக்குக் கிடைத்த சுகமான, சுகிர்தமான வாழ்க்கையைப் பாருங்கள். இப்படிப்பட்ட உயர்வாழ்வு வந்த பிறகும், அவளது உயர்ந்த சிந்தனைக்குப் பங்கம் வராதது பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

தனக்கு சொகுசான வாழ்வும் தன் ஜீவனுக்குப் பாதுகாப்பு வளையமும் கிடைத்த பிறகும், சுயநல வாழ்வு

மேற்கொள்ளாமல் அவள் எடுத்த துணிகரமான தியாக முடிவை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம், இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; **நான் செத்தாலும் சாகிறேன்** என்று சொல்லச் சொன்னாள் (எஸ்தர் 4:16).

தனது ஜனத்திற்காக மரணத்தையும் சந்திக்க, தன் வாழ்வை பணையம் வைத்த எஸ்தர் உண்மையிலே ஆசீர்வதிக்கப்பட்டவள்.

இன்றைய திருச்சபையின் தேவை, இதுவன்றோ! தேசத்திற்காய், அழியும் மனுக்குலத்திற்காய் ''நான் செத்தாலும் சாகிறேன்'' என்று ஜீவனை தியாகமாய் ஈந்து ஜீவிக்க முன்வரும் சிலரை தேவன் தேடுகிறார்.

எஸ்தர், ராணி என்பதை விட, ஜெபத்தில் - உபவாசத்தில், திறப்பில் நிற்பதில் தலைசிறந்த தலைவி என்பது சாலச் சிறந்த உண்மை. ஜெபிக்கிறவர்களை, உபவாசிக்கிறவர்களின் வார்த்தைகளை, கர்த்தர் எப்படி கனப்படுத்துகிறார் என்பதற்கு, எஸ்தரின் வாழ்வு நல்லதொரு பாடப்புத்தகம்.

ஜெபிக்கும் மனிதர்களின் வார்த்தைகளுக்கு தேவன் முக்கியத்துவம் கொடுப்பது மாத்திரமல்ல. மனிதர்களும் முக்கியத்துவம் கொடுக்கும்படி தேவனே செய்து விடுகிறார்.

இதோ! இந்த வசனக் குறிப்பை வாசித்துப் பாருங்கள். எஸ்தர் **தனக்குக் கற்பித்தபடியெல்லாம்** (மொர்தெகாய்) செய்தான். (எஸ்தர் 4:17)

கவனியுங்கள் முன்பு மொர்தெகாய் சொன்னதை எஸ்தர் செய்தாள், இப்போது எஸ்தர் சொன்னபடி எல்லாம் மொர்தெகாய் செய்தான். காரணம் இது கர்த்தரின் கிரியை.



எந்த மனிதன் ஜெபிக்கிறானோ, உபவாசிக்கிறானோ, சாகிறேன் என்று தியாக வாழ்வு வாழ ஒப்புக் கொடுக்கிறானோ, அவனது வாழ்வில் தேவன் ஏற்றத்தையும், மாற்றத்தையும் கொண்டு வருவார்.

பிரியமானவர்களே! நீங்கள் சபைக்காய், சமுதாயத்திற்காய் ஜெபிக்கிற, உபவாசிக்கிற நபராய் மாறும் போது உங்களை ஆவிக்குரிய வாழ்வில் நடத்தினவர்கள், நடத்துகிறவர்கள் உட்பட, போதகர் முதலாய் உங்களின் ஆலோசனையைக் கேட்கத் துவங்கி விடுவார்கள்.

நீங்கள் ஊழியத்தில் முன்னேற, வளர போஸ்டர் அடித்து விளம்பரப்படுத்த வேண்டியதில்லை. உபவாசித்து ஜனங்களுக்காக சாகவும், தியாக வாழ்க்கை ஏற்கும் போது, கர்த்தரே உங்களை உயர்த்துகிறார். இதற்கு எஸ்தர் சரியான சாட்சி.

## III எஸ்தரின் பொறுமை :-

பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன் என்ற (பிரசங்கி 7:8) வசனத்திற்கு மீண்டும் ஒரு எடுத்துக்காட்டாக வஸ்தியும், எஸ்தரும் திகழ்கிறார்கள்.

பெருமையுள்ள வஸ்தியைப் பார்க்கிலும், பொறுமையுள்ள எஸ்தர் சாதித்தவை ஏராளம். மிகப் பெரிய அழிவிலிருந்து தன்னையும் தன் ஜனத்தையும் விடுவித்துக் கொண்டது மாத்திரமல்ல, எதிராளியானவனைக் கூண்டோடு அழிப்பதற்கு எஸ்தர் மிகப் பொறுமையாக செயல்பட்டது, விசுவாசிகள் கவனிக்க வேண்டிய ஒன்று.

அநேக காரியங்களை நாமே கெடுத்து விடுகிறோம். ஒன்றுமில்லாத காரியத்தைக் கூடப் பெரியதாக எடுத்துக்

கொண்டு, மனதைக் குழப்பிக் கொண்டு படபடத்து, வெடவெடத்து அல்லாடிப் போகிறோம்.

சிலர் இன்னும் இதில் தீவிரமானவர்கள். எவரைப் பார்த்தாலும் புலம்பியே தீர்த்துவிடுவார்கள். பச்சை முட் செடியை நெருப்பில் போட்டது போல, படபட எனப் பொரிந்து கொண்டே இருப்பார்கள்.

விசுவாசிக்கிறவன் பதறான் என்றல்லவா வேதம் சொல்கிறது. எனவே, என்று உபவாசித்து ஜெபித்து காரியத்தில் இறங்குகிறோமோ, அப்போதே விசுவாசத்தில் இறங்கி விட வேண்டும். பதறாமல் அவசரப்படாமல் கிரியை செய்ய வேண்டும். அதிலும், முழுவதும் தேவ நடத்துதலைச் சார்ந்து கர்த்தர் கிரியை செய்யப் பூரணமான கால அவகாசத்தை விட்டுக் கொடுக்க வேண்டும்.

எஸ்தர், ராஜாவை விருந்திற்கு அழைத்தாள் திராட்சை ரசம் பரிமாறப்படுகையில், இராஜா உன் விண்ணப்பம் என்னவென்று கேட்டான். (எஸ்தர் 5:6) நாமாக இருந்தால் மவராசா! என்று மங்களகரமாக ஆரம்பித்து, ஆதியோடு அந்தமாக எல்லாவற்றையும் சொல்லிக் கதறி முகாரியில் முடித்து இருப்போம்.

ஆனால் எஸ்தரின் வித்தியாசமான அணுகுமுறையைப் பாருங்கள். ஒன்றைக் குறித்தும் அலட்டிக் கொள்ளவில்லை. புறாக்களைப் போல கபடற்றவர்களாயும், சர்ப்பங்களைப் போல வினா (ஞானம்) உள்ளவர்களாயும் இருங்கள் என்று இயேசு சொன்ன வார்த்தைக்கு இலக்கணமாய் நடந்து கொண்டாள்.

ராஜாவே, நாளைய விருந்திற்கு நீரும், ஆமானும் வரவேண்டும் என்பதே எனது இன்றைய விண்ணப்பம். நாளைக்கு எனது காரியத்தை உமக்குத் தெரிவிப்பேன் (வசனம் 5:8) என்றாள்.



அவசரப்படாமல் தனது காரியத்தை ஒரு நாள் தள்ளிப் போட்டதின் நிமித்தம், எவ்வளவு பெரிய இலகுவான வெற்றியை எஸ்தர் பெற்றாள் என்பதைக் கவனித்துப் பாருங்கள்.

ஆமானுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. வீட்டுக்குத் துள்ளிக் குதித்து ஓடுகிறான். தனக்கு அருளப்பட்ட விருந்தின் கனத்தைக் குறித்துப் புன்னகை பூக்க யாவர்க்கும் மொழிகிறான்.

அதே வேளையில் வாசலில் உட்கார்ந்திருந்த மொர்தெகாய் தனக்கு வணக்கம் செலுத்தாதபடியால், தனது நண்பர்கள், மனைவி சொன்ன வார்த்தையின்படி ஒரே நாளில் (சில மணிநேரத்தில்) 50 முழ தூக்குமரத்தை செய்வித்தான்.

இப்படி வெளியரங்கமாய் தூக்குமரம் ஒரு புறம் நின்று கொண்டு இருக்க, மற்றொரு புறம் தூக்கமில்லாமல் ராஜா படுக்கையில் புரண்டு கொண்டு இருக்கிறான். இவனுக்கு ஏன் தூக்கம் வரவில்லை – இது நல்ல கேள்வி.

சில மனைவிகள் கணவனிடத்தில், நாளைக்கு ஒரு காரியத்தை உங்களுக்குச் சொல்கிறேன் என்று படுக்கைக்குப் போகுமுன் சொல்லிவிட்டால் போதும். ஆண்களுக்குத் தூக்கமே வராது. என்ன கேட்பாளோ? எப்படிக் கேட்பாளோ? இந்தத் திகிலே தூக்கத்தை விரட்டி விடும். அது போலவே எஸ்தர் எதைக் கேட்கப் போகிறாளோ! என்ற சிந்தையில் தூக்கம் வராமல் போயிருக்குமா? என்று என் நினைவில் ஒரு மின்னல்.

ஆனால், அவனுக்கு நித்திரையை நிறுத்தி வைத்தது, தேவனாகிய கர்த்தரே. ஆமான் தூக்குமரத்தை நிறுத்தியது சாத்தானின் செயல். அகாஸ்வேருவின் தூக்கம் நின்றது கர்த்தரின் செயல், என்பது எண்ணிப் பார்த்து துதிக்க வேண்டிய ஒன்று.

தூக்கம் வராத இராஜா புத்தகம் வாசிக்கப்பட்டத்தைக் கேட்டு முடிக்கிறான். சரியாக ஆமானும் வந்து நிற்கிறான்.

அவனைப் பார்த்துக் கேள்வி கேட்டு, அவனையே பதில் சொல்ல வைத்து, அவனையே நிறைவேற்றி வைக்க ஆணை பிறப்பிக்கிறான் அகாஸ்வேரு.

உங்களுக்குத் தான் சம்பவம் தெரியுமே, மொர்தெகாயை ஊர்வலம் அழைத்துச் சென்ற பிறகு, தானே **முக்காடிட்டுக் கொண்டு** (எஸ்தர் 6:13) சஞ்சலத்தோடு வீட்டிற்குப் போனான்.

விருந்து நடக்கிறது. விபரீதம் பிறக்கிறது. விஷயம் வெளிவருகிறது. அங்கே அவன் **முகத்தை மூடிப்போட்டார்கள்.** (எஸ்தர் 7:8) அத்தோடு முடிந்ததா? தான் வெட்டின குழியில் தானே விழுந்தான் என்பது போல் அவன் நாட்டின தூக்குமரத்தில் **அவனையே தூக்கிப் போட்டார்கள்** (எஸ்தர் 7:9)

அருமையானவர்களே! எஸ்தரின் ஒருநாள் பொறுமை யினால் காரியம் எத்துணை இலகுவாய் முடிந்தது என்று பாருங்கள். நீங்கள் இவ்வளவு நேரம் வாசித்த அத்தனை சம்பவமும் முதல்நாள் விருந்துக்கும், இரண்டாம் நாள் விருந்துக்கும் இடையில் நடைபெற்றவைகள் என்பது எத்துணை ஆச்சர்யம் பார்த்தீர்களா.

பொறுமையாய் இல்லாமல் முதல்நாளே சொல்லியிருந்தால், மொர்தெகாய்க்கு, ஆமானின் கரத்தால் கனம் செய்யப்பட்டு இருக்குமா? ஆமானைத் தூக்கிப் போட 75அடி தூக்குமரம் யார் செய்வது, அரசன் தூக்கு தண்டனை விதித்து இருப்பானா? அல்லது சிறைத்தண்டனைக் கொடுத்து இருப்பானா? யாருக்குத் தெரியும்?

கர்த்தரின் பிள்ளைகள் எதிலும் பொறுமையாகச் செல்வது காரியங்களுக்கு வலுவைச் சேர்க்கும். ஏவாளிடத்தில் அவசரப்பட்டு, கர்த்தர் சொன்னதை ஆதாம் சொன்னான். அவள் அவசரப்பட்டு சர்ப்பத்திடம் சொன்னாள். முடிவு சாத்தான் வெற்றி பெற்றான்.



ஆகார் காரியத்தில் சாராள் அவசரப்பட்டாள், ஆபிரகாமும் அவசரப்பட்டான் முடிவு காலமெல்லாம் சகோதரச் சண்டை. பொறுமையாயிருங்கள் எஸ்தரைப் போல். வேகத்தை விட, விவேகம் மிகச் சிறந்தது.

## IV) எஸ்தரின் ஆத்மபாரம் :-

தாழ்மை – தியாகம் – பொறுமை இவைகளுக்குத் திவ்ய சாட்சியாக விளங்கிய எஸ்தர், தன் ஜனத்தின் அழிவைக் காண சகியாதவளாய், பாரத்துடன், ராஜாவிடம் பரிந்து பேசுகிறவளாய்த் திகழ்ந்தது தனிச்சிறப்பு.

சற்று யோசித்துப் பாருங்கள். எஸ்தருக்கு இத்தனை சிறப்பு வேத புஸ்தகத்தில் கொடுக்கப்பட்டதற்கும், வேதாகமத்தில் எஸ்தர் புஸ்தகம் இடம் பெற்றதிற்கும் முக்கிய காரணமே, யூதர்களின் மீட்பை நமக்குத் தெரியப்படுத்தவே. எவ்வளவுதான் அழகியாக இருந்திருந்தாலும், யூதரின் விடுதலைக்கு எஸ்தர் கிரியை செய்யாமல் போய் இருந்தால், எஸ்தர் என்ற பெயரே சரித்திரப் புத்தகம் உட்பட எங்குமே வெளி வந்திருக்காது.

அப்படித்தான் நமக்கும், தேவ ஜனத்தினைக் குறித்த பாரம் நமக்கு இல்லாவிட்டால் நாம் கர்த்தருக்கும் பாரம், சபைக்கும் பாரம், குடும்பத்திற்கும் பாரம் என்பதை மறந்து விடாதீர்கள்.

நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே? நீ மவுனமாய் இருந்தால் இரட்சிப்பு வேறொரு இடத்திலிருந்து வரும் என்று மொர்தெகாய் சொன்ன வார்த்தை, எஸ்தரின் ஆவிக்குரிய தரிசனத்தை மெருகேற்றியிருக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

நீங்கள் இன்று கர்த்தரால் உயர்த்தப்பட்டதற்கும், அபிஷேகம் பண்ணப்பட்டதற்கும், அதிகாரம் மற்றும்

செல்வத்தின் மத்தியில் வாழ்வதற்கும், ஒரே காரணம் உண்டு. உங்களைக் கொண்டு தமது இரட்சிப்பின் கிரியை நடத்த வேண்டும் என்பதேயன்றி வேறில்லை.

இதைப் புரியாமலோ, அல்லது புரிந்தும் கீழ்ப்படியாமலோ, நீங்கள் சுகபோகத்தில் மூழ்கி ராஜபோக வாழ்க்கை வாழ்ந்தால், தேவனுக்கு ஒன்றும் நட்டமில்லை. தனது காரியத்தை வேறு நபர் மூலம் அதே தேதியில் முடித்து விடுவார். உங்கள் பேர் பூமியில் மறக்கப்பட்டுப்போம் மாத்திரமல்ல, கர்த்தரும் மறந்து விடுவார் என்பதை நீங்கள் மறந்து விடாதீர்கள்.

இங்கே **எஸ்தர் சொல்வதைக் கவனியுங்கள். என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக் கூடும், என் குலத்திற்கு வரும் அழிவை நான் எப்படி சகிக்கக்கூடும்?** (எஸ்தர் 8:6)

திறப்பின் வாசலில் நிற்கும் ஆத்துமபாரம் உள்ள ஓர் ஆத்துமாவின் அலறலைப் பாருங்கள். தன் ஜனத்திற்காக – இனத்திற்காக வேதனைப்படும் வேட்கையுள்ள ஆத்துமாவின் இந்தக் கரிசனை உங்களுக்கு ஏற்பட்டது உண்டா?

பாவம் பெருகுதே பாரும் பரன் இயேசுவே! என்று பாரம் இருப்பது போல பாட்டுப் பாடுவது என்பது ஆத்துமபாரம் அல்ல, தனது ஜனத்தின் அழிவைக் காணக் கூடாமல் கண்ணீர் சொரிந்து, கர்த்தரின் சமூகத்தில் கையேந்தி நிற்பதே ஆத்தும பாரம்.

நான் கேட்கிறேன், இப்போது நீங்கள் உங்கள் மனசாட்சியின்படி பதில் சொல்லுங்கள்.

உங்களைச் சார்ந்த இரட்சிக்கப்படாத, இரத்த சம்மந்தமான உறவினர்களோடு இனிக்க, இனிக்க நேரம் போவது தெரியாமல் பேசுகிறீர்கள். அவர்களுக்குள் இருக்கும்



ஆத்துமா அழிகிறதே, அதைக் குறித்து என்றைக்காகிலும் கவலைப்பட்டது உண்டா?

ஐயகோ! இந்த என் ஜனத்தின் அழிவை நான் எப்படி காணக்கூடும் – சகிக்கக்கூடும் என்று என்றாகிலும், அழுதது உண்டா? உபவாசித்தது உண்டா?

கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களில் இருக்கக்கடவது, என்று பவுல் எழுதுகிறார். அவர் திரளான மக்களைப் பார்த்து மனதுருகினார். எருசலேமைப் பார்த்து மனதுருகினார்.

அழியும் மாந்தரைக் கண்டு மனதுருகுவதே – இயேசுவின் சிந்தை என்பதை மறந்து விடாதீர்கள். இந்த சிந்தை – பாரம் எஸ்தருக்குள் இருந்தது – ஜனத்தை விடுவித்தாள்.

இங்கே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இவன் – இவள் இரட்சிக்கப்படுவது கூடாத காரியம் என்று நீங்களே முத்திரை குத்தி விடாதீர்கள்.

**நீங்கள் ஜெபிக்காத ஊமைகளாய் இருக்கிறவரை, எவரும் விடுதலையடையப் போவதில்லை. – நீங்கள் ஜெபிக்கும் உத்தமர்களாய் இருக்கிற வரை, எவரும் விடுதலை அடையாமல் போவதில்லை** என்று உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

எஸ்தரைப் பாருங்கள். அகாஸ்வேருவிடம் இதைச் சொல்ல தயக்கமோ – தாமதமோ காட்டியிருப்பாளேயாகில் அத்தனை யூதர்களும் அழிந்து போயிருப்பார்கள். ஆனால் ஆத்துமாக்கள் மேல் கனிவு – அகாஸ்வேரு இடத்தில் சொல்லத் துணிவு – சொல்லும் விதத்தில் பணிவு, இந்த முக்கூறு ஆயுதத்தால், தன் ஜனத்தை ஒரே நாளில் மீட்டுக் கொண்டாள்.

எவர்கள் பாரப்படுகிறார்களோ, எவர்கள் ஜெபிக்கிறார்களோ,

அவர்களையே ஆத்தும ஆதாயகர்களாய், விடுதலைத் தலைவர்களாய் பயன்படுத்துவதில் கர்த்தர் தனிக்கவனம் செலுத்துகிறார் என்பது வேதம் சொல்லும் பாடம்.

## V. எஸ்தரின் ஐக்கியம் :-

எந்த ஒரு காரியத்தையும் தன்னிச்சையாக - தனிமையாக செய்வதைப் பார்க்கிலும் மற்றவர்களோடு இசைந்து செய்கிற மனப்பக்குவம், எஸ்தருக்குள் நிறைந்திருந்தது குறிப்பிட வேண்டிய அம்சம்.

தற்போது எங்கு பார்த்தாலும் புதுப்புது சபைகள் தோன்றுகிறது. இவைகளைப் பார்த்து சந்தோஷம் அடைய முடியவில்லை. மாறாக சங்கடம்தான் தோன்றுகிறது. காரணம், இவைகள் புதிதாய் கட்டப்பட்ட சபைகள் அல்ல, புதிய பெயர் பலகையோடு பிரித்துக் கொண்டு வரப்பட்ட புரட்டு சிசபைகள்.

மதுரையில் ஒரு குறிப்பிட்ட வீதியில் ஓட்டல்கள் பெயரைப் பார்த்தால் குழம்பிப் போய் விடுவீர்கள் - முனியாண்டி விலாஸ், ஒரிஜினல் முனியாண்டி விலாஸ், நியூ முனியாண்டி விலாஸ், நியூ ஒரிஜினல் முனியாண்டி விலாஸ் இப்படித்தான் இன்றைய சபைகளின் கதியும் இருக்கிறது. ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து, பேரையும் சேர்த்து வைத்து வேடிக்கை காட்டிக் கொண்டு இருக்கிறது.

வேதனைப்படுகிறேன். தேவனுக்குள் கட்டப்படுகிற, அடங்கி நடக்கிற, இசைந்து போகிற, விட்டுக் கொடுக்கிற, தன்னை மறைக்கிற ஆவி விசுவாசிகளுக்கும், ஊழியர்களுக்கும் இன்று அதிகம் அவசியம் தேவைப்படுகிறது.

எஸ்தர் ராஜாத்தியாக இருக்கிறாள். எஸ்தர் 9 - ஆம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். எந்தக் காரியத்தையும் தன் விருப்பப்படியோ, தன் பெயரிலோ தனித்து எழுதாமல் மொர்தெகாயுடன் சேர்ந்தே எழுதினாள்.



இவர்களிடம் இருந்த, இந்த ஒருமனம் - ஒற்றுமையே ஜனங்களை ஒன்று சேர்த்தது. சத்துருவை வெட்டி வீழ்த்தியது - கர்த்தரைத் தீவிரமாகக் கிரியை செய்ய வைத்தது.

பிரியமானவர்களே, உங்கள் ஊழியர் ஒரு மொர்தெகாய், பிரியமான ஊழியரே, உங்கள் தலைமைப் போதகர் ஒரு மொர்தெகாய், நீங்கள் திறமையில், ஆத்துமாவில் பணத்தில் செழித்து - கொழுத்து இருக்கலாம். அதற்காகத் தன்னிச்சையாகச் செயல்பட நினைக்காதீர்கள்.

உங்களுக்கு மொர்தெகாயின் ஆலோசனை அவசியம். அவருடன் இசைந்து செயல்படுங்கள். நீங்கள் சிறுக மாட்டீர்கள் - ஊழியத்திலும், உளத்திலும் புது பெலன் பெறுவீர்கள்.

**இணைந்த கரங்கள் எதையும் சாதிக்கும்** என்று ஒரு ஆட்டோவின் பின்பக்கத்தில் எழுதப்பட்டதைப் படித்த போது ஆச்சரியப்பட்டேன். ஆட்டோ ஓட்டுநர்க்கு உள்ள வெளிப்பாடு ஆவிக்குரியவர்களுக்கு வந்தால் எத்துணை சிறப்பாக இருக்கும்.

மோசே - ஆரோனின் இணைந்த கரங்கள் பார்வோனைக் கலக்கியது. பாராக் - தெபோராளின் இணைந்த கரங்கள் சிசெராவைக் கலக்கியது, பவுல்-சீலாவின் இணைந்த கரங்கள் பிலிப்புப் பட்டணத்தைக் கலக்கியது. அந்த வரிசையில் எஸ்தர் - மொர்தெகாய் இவர்களின் இணைந்த கரங்கள் பெர்சிய சாம்ராஜ்ஜியத்தையே கலக்கியது. நீங்கள் ஐக்கியமாய் செயல்படும் போது உலகத்தைக் கலக்குகிறவர்களாய் மாறுவீர்கள்.

**எஸ்தர் ஒரு பட்டை தீட்டப்பட்ட வைரம் அதில் தாழ்மை, தியாகம், பொறுமை, பாரம், ஐக்கியம்** என்னும் ஐந்து பட்டைகளை உங்களுக்குக் காண்பித்து உள்ளேன். மற்ற காரியங்களை ஆவியானவர் கூடுதலாய் உங்களுக்குக் காண்பிப்பாராக.

# 7. மணவாட்டியாகிய எஸ்தர்

வேத புஸ்தகத்தில், ஆதியாகமம் துவங்கி வெளிப்படுத்தின விசேஷம் வரை வாசித்துப் பாருங்கள். அதில் ஒரு மிகச்சிறப்பான காரியத்தை உங்களால் காண முடியும். முதல் புத்தகம் ஆதாமின் திருமணத்தோடு ஆரம்பிக்கிறது. வேதத்தின் கடைசிப் புத்தகம் ஆட்டுக்குடியானவரின் கலியாணத்தோடு முடிவடைகிறது.

அது மாத்திரமா, திருமறை முழுவதும் எத்தனையோ திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அவைகளின் வரலாற்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு மாத்திரம் அருளப்படாமல், நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்குத் திருஷ்டாந்தங்களாக ஆவியானவராலே அருளப்பட்டுள்ளது.

பிரியமானவர்களே! உங்கள் அழைப்பு எப்படிப்பட்டது என்று சற்று யோசித்துப் பாருங்கள். பத்தோடு பதினொன்று அத்தோடு இது ஒன்று என்று சொல்வார்களே. அப்படிப்பட்ட சாரமற்ற அழைப்பினால் நீங்கள் அழைக்கப்படாமல் வீரியமுள்ள அழைப்பினால், தேவனால் அழைக்கப்பட்டுள்ளீர் -கள் என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அவர் வரும்போது, அவர் இருக்கிற வண்ணமாகவே மாறும்படியும், அவரோடு ஆளும்படியும் நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டுள்ளோம். இதைத் தான் வேதம் மணவாட்டியின் அனுபவம் என்று சொல்கிறது. இயேசுகிறிஸ்து மணவாளன், அவரது திருச்சபை மணவாட்டி என்பது வேதம் கூறும் சத்தியம்.

வேத புத்தகத்தில் உள்ள அனைத்துத் திருமணங்களும், கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள உறவை வெளிப்படுத்துகிற, ஞான அர்த்தம் கொண்ட நிழல்களாய் இருக்கிறது. இந்த அடிப்படையில் எஸ்தர் இங்கு மணவாட்டி சபைக்கு முன்மாதிரியாக இருக்கிறாள்.



இராஜாவுக்கு மணவாட்டியை ஆயத்தப்படுத்த 127 நாடுகளிலும் நற்செய்தி அறிவிக்கப்படுகிறது. அந்த அழைப்பை - அறிவிப்பை ஏற்றுக் கொண்டவர்கள் (ரூபவதிகளாய் இருக்கிற கன்னிப் பெண்கள்) கீழ்ப்படிந்து, வீட்டை விட்டு, நாட்டை விட்டுப் புறப்பட்டு வருகிறார்கள்.

இங்கே கவனியுங்கள் ரூபவதிகள், கன்னியர், அழைப்பை ஏற்றுக் கொண்டவர்கள் என்றாலும், உடனடியாக இவர்கள் அகாஸ்வேருவைக் காண முடியாது. மணவாட்டியாக முடியாது. எனவே, அந்த நிலையை அடைய சில நிலைகளை எஸ்தர் கடந்துவர வேண்டியதாயிற்று.

இதைப் போன்றே இரட்சிக்கப்பட்டு, ஞானஸ்நானம் பெற்று, அபிஷேகம் பெற்று ஆவியில் இருந்தாலும், அது மணவாட்டி அனுபவத்திற்கு நம்மை நடத்தாது. எஸ்தரைப் போல் நாம் சில நிலைகளைக் கடந்தே வந்து தீர வேண்டும்.

இங்கே எஸ்தர் தன் இருப்பிடத்தை விட்டது முதல் இராஜகிரீடத்தைப் பெறும் வரை கடந்து வந்த 5 அனுபவங்களை வரிசைக் கிரமமாக ஆவிக்குரிய விதத்தில் வகைப்படுத்திக் காண்பிக்க விரும்புகிறேன்.

## I. கன்னிமாடம்:-

ரூபவதியான எஸ்தர் நேரடியாக அரண்மனையில் இருக்கிற, ராஜ மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படவில்லை. இது இராஜாவின் ஒழுங்கு அவள் எவளாக இருந்தாலும், எவ்வளவு அழகாக இருந்தாலும் ராஜமாடத்திற்கு உடனே வர முடியாது.

**கன்னிமாடத்தில் சிறந்த ஒரு இடத்திலே... அவளை வைத்தான்.** (எஸ்தர் 2:9)

கன்னிமாடம் எதற்குத் தெரியுமா? இந்த கன்னிப்

பெண்களை பக்குவப்படுத்த, பரிசுத்தப்படுத்த - அழகுப்படுத்த - ஆயத்தப்படுத்த ராஜாவால் வைக்கப்பட்ட பணிமனை.

இது என்ன இவர்கள் சுத்தமில்லையா? அழகு இல்லையா? என்று கேட்கக்கூடாது. அரண்மனை வர வேறு சுத்தம், அரசனைப் பார்க்க வேறு சுத்தம் என்பது நியதி.

இது ஒரு புதிய ஏற்பாட்டின் மிகப்பெரிய ஒழுங்கை நமக்குக் காட்டுகிறது. அவருக்கு மணவாட்டியாக அழைப்பு யாவர்க்கும் பொதுவாக இருந்தாலும், அவர்கள் திருமுழுக்குப் பெற்றதினால் - ஆவியைப் பெற்றதினால் நேரடியாகப் பூரணர் ஆகிவிட முடியாது.

அப்போஸ்தலர் நடபடிகள் 2:47 - ஐ வாசித்துப் பாருங்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் **சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்.** இது தான் முக்கியம் - பெண்கள் கன்னிமாடத்தில் சேர்க்கப்பட்டார்கள். ஆதிசபையில் ஆத்துமாக்கள் சபையில் சேர்க்கப்பட்டார்கள்.

எனவே, நீங்கள் கிறிஸ்துவுக்கு மணவாட்டியாக மாற ஒரு நல்ல சபையில் அங்கமாக இருத்தல் அவசியம். பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு அவர் ஊழியங்களை, ஊழியர்களை சபையில் வைத்துள்ளார்.

இதை வாசிக்கும் அன்பு வாசகரே! உங்களுக்கு ஆயிரம் கிருபை இருக்கலாம். ஆனால் நீங்கள் ஒரு சபையில் அங்கமில்லை என்றால், நீங்கள் ஆவிக்குரிய அநாதை என்பதை மறந்து விடாதீர்கள்.

இரண்டு கப்பல்களில் ஒரே சமயத்தில் பயணம் செய்ய முடியுமா? அப்படி இதில் ஒரு கால், அதில் ஒரு கால் என்று வைத்துக் கொண்டு பயணம் செய்தால், ஊர் போய் சேர முடியுமா?



இந்த பலப்பரீட்சையில் அநேகக் கிறிஸ்தவர்கள் இறங்கி விட்டது மிகவும் வேதனை. அநேகர் இரண்டு Ship- இல் பயணம் செய்கிறார்கள். என்ன புரியவில்லையா FELLOW SHIP ஓரிடம் MEMBERSHIP ஓரிடம், பாரம்பரிய பழக்கத்திற்கு ஓர் இடம், பரிசுத்த ஆவியின் நிறைவுக்கு ஒரு இடம்.

ஐயா, இப்படிப்பட்டவர்கள் நிலை மிக பரிதாபம். கல்லறைக்கும் ஒழுங்காய்ப் போய் சேருவதில்லை. கர்த்தருடைய வருகையிலும் வரப்போவதில்லை. தாவீது அரசர் சொல்கிறபடி தேவனுடைய சபையில் நாட்டப்பட்ட ஒலிவமரக் கன்றுகளாய் அவரது தோட்டத்தில் நிலைத்திருங்கள். தொட்டிச் செடிகளாய் அங்கும் இங்கும் அழகு செய்ய அலையாதீர்கள்.

தென் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த பாஸ்டர். J.F. ரோலன்ஸ் தனது பத்திரிக்கையில் ஒரு முறை Some believers are like pillar. Some are like caterpillar என்று எழுதினார் (சில விசுவாசிகள் கற்றூண்கள், சிலர் கம்பளிப்பூச்சிகள்) இது ஒத்துக் கொள்ள வேண்டிய விஷயம் தான். சிலர் என்ன வந்தாலும் சபையில் நிலைநிற்கிறார்கள். சிலர் எதற்கெடுத்தாலும் சபையை விட்டு ஓடுகிறார்கள்.

நீங்கள் ஒரு சபையில் நிலைத்திருக்கும், அடங்கி இருக்கும் விசுவாசியாக, எஸ்தர் கன்னிமாடத்தில் இருந்தது போல் அடங்கி இருங்கள், மணவாட்டியாக மாறுவீர்கள்.

## II. யேகாயின் வசம் :

கன்னிமாடத்தில் எஸ்தர் இருந்த நிலையைப் பாருங்கள். அநேகம் பெண்கள் கூட்டப்பட்ட அந்த மாடத்திற்கு ஒரு தலைவன் உண்டு - அவனுக்கு இந்த ஸ்திரீகளைக் காவல் பண்ணுகிற வேலை, அடுத்து இவர்களைத் தகுதிப்படுத்துகிற வேலை.

இந்த யேகாயைக் குறித்து இங்கு சிலவற்றை எழுத விரும்புகிறேன். கன்னிமாடத்திற்குள் வந்திருக்கும் அத்தனை

பெண்களுக்கும், அவன் தான் அதிகாரி அனைத்துப் பெண்களும் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

இது புதிய ஏற்பாட்டு சபை நடத்துகின்ற ஊழியர்களுக்கு நிழலாய் இருக்கிறது. ராஜாவினால் கட்டளை பெற்று ராஜாவின் விருப்பத்தைப் பூர்த்தியாக்க, ராஜாவின் சித்தத்தை நிறைவேற்ற உத்தரவாதத்துடன் செயல்படும் யேகாயின் கரத்திற்குள் பெண்கள் அடங்கியிருந்தது போல, விசுவாசிகள் சபையின் ஊழியருக்கு அடங்கி இருக்க வேண்டும்.

மேய்ப்பன் ஆடுகளை மேய்க்க வேண்டுமே தவிர, ஆடுகள் மேய்ப்பனை மேய்க்க முயற்சிக்கக் கூடாது. நாங்கள் யார் தெரியுமா? அகாஸ்வேருவுக்கு மணவாட்டியாக மாற அழைக்கப்பட்டவர்கள் என்று சுயப்பெருமை பேசி யேகாயை எப்படியாவது வழிக்குக் கொண்டுவர யோசிக்கக் கூடாது.

உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களான படியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச்செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால், அது உங்களுக்குப் பிரயோஜனமாய் இருக்கமாட்டாதே (எபி 13:17).

யேகாயின் வசத்தில், யேகாயின் நடத்திப்புக்கு எஸ்தர் கீழ்ப்படிந்து இருந்தது போல, நாமும் நமது திருச்சபையின் போதகருக்குக் கீழ்ப்படிந்து இருந்தால், கிறிஸ்தேசுவுக்கு நாம் மணவாட்டியாக மாறுவது அதிக நிச்சயம்.

## III. சுத்திகரிக்கப்பட்டாள் :-

கன்னிமாடத்தில் பெண்களுக்கு ஒரு சிறப்பான காரியம் செய்யப்பட்டது. அது மிக நீண்ட காலத்திட்டம். ஆறுமாதம் வெள்ளைப் போளம் + சுகந்தவர்க்கம் + மற்ற சுத்திகரிப்புகளால் சுத்திகரிக்கப்பட்டார்கள்.



கன்னிமாடத்தில் இவர்களில் யாவர்க்கும் பொதுவான விதி, இதில் எவரும் விதிவிலக்குப் பெற்றவர்கள் அல்ல, என் அழகுக்கு என்ன குறைச்சல், இனி எனக்கு எந்த ஒப்பனையும் அவசியம் இல்லை என்று சொல்ல முடியாது.

நான் ஏற்கனவே சொன்னபடி ராஜாவைப் பார்க்கத் தேவையான தூய்மையின் அளவு மிக அதிகமானது. சற்று சிந்தியுங்கள், கிறிஸ்துவுக்குள்ளாக, சபைக்குள்ளாக வர மனந்திரும்புதல், ஞானஸ்நானம் போன்ற அனுபவங்கள் போதும், ஆனால் கிறிஸ்துவை சந்திக்க, அவரோடு எடுத்துக் கொள்ளப்பட நமக்குத் தேவையான பரிசுத்தம், மிக உன்னதமான அளவு என்பதை மறந்து விடாதீர்கள்.

கிறிஸ்துவின் வளர்ச்சிக்குத் தக்க நிறைவான வளர்ச்சியைப் பெற்று, மனம் புதிதாவதால் மறுரூபப்பட்டு அவரைப் போல் மாறவேண்டியது அவசியம்.

பூவுலக ராஜாவை சந்திக்கவே எஸ்தர் போன்றோருக்கு மூன்று வித சுத்திகரிப்புகள் தேவைப்பட்டதென்றால், நமது ராஜாதி ராஜாவை சந்திக்க நமக்குப் பரிசுத்தம் எத்தனை அதிகமாய்த் தேவை என்பதை யோசித்துப் பாருங்கள். இதைக் குறித்து அதிகம் எழுத முடியும். எனினும் மூன்றே குறிப்புகளை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன்.

**அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம், சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்** (I யோவான் 1:7) இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் சுத்திகரிக்கப்படுகிறோம்.

இந்த வசனம் ஏதோ தெருப் பிரசங்கத்திற்குப் பயன்படுத்த எழுதப்படவில்லை. மாறாக, விசுவாசிகள் பயன்பெற்று பரிசுத்தம் பெற வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டுள்ளது.

ஆம் இது நமக்காகத்தான். இரட்சிக்கப்பட்ட உடன் நாம் மிகச்சரியான வெற்றிப்பாதையில் நடைபோடுகிறோம் என்று ஏமாந்து போய்விடக்கூடாது. நாம் நம்மில் பாவம் இல்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம். சத்தியம் நமக்குள் இராது.

தேவன் செய் என்று சொன்னவைகளை நமது வாழ்வில் செய்யாமல் இருப்பது பாவம். (SIN OF OMISSION) தேவன் செய்யாதே என்று சொன்னவைகளை நமது வாழ்வில் செய்து கொண்டு இருப்பதும் பாவம் தானே. (SIN OF COMMISSION)

எனவே, நமது மனசாட்சியைக் கூர்மைப்படுத்தி, தினம் தினம் நமது வாழ்வை தேவசமூகத்தில் சீர்தூக்கிப் பார்த்து பாவங்களை அறிக்கை செய்து இயேசுவின் இரத்தத்தால் மன்னிப்பையும், இரக்கத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இயேசுவின் இரத்தம் உங்களை சுத்திகரிப்பது மாத்திரமல்ல. நீங்கள் ஜெயிக்கத் தேவையான சகல சத்துவத்தை உங்களுக்கு அருளும்.

**உம்முடைய சத்தியத்தினால் அவர்களைப் பரிசுத்தமாக்கும்** உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17 வேத வசனத்தைக் கொண்டு நாம் சுத்திகரிப்படுகிறோம். நாமே நமது குறைவுகளை நிதானித்து அறிக்கை செய்யும் போது, இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படுகிறோம். ஆனால், வேதவசனம் அப்படி அல்ல அது ஒவ்வொரு நாளும் நம்மைப் போதித்து, உணர்த்தி, கடிந்து கொண்டு, பலப்படுத்தி, நம்மை சீர்படுத்தி கிரமமான முறையில் பரிசுத்தத்திற்கு நேராய் நடத்திச் செல்கிறது.

எனவே வசனத்தால் நாம் பரிசுத்தமாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். இதற்கு முதற்கண் வேதத்தைக் கிரமமாக வாசிக்க வேண்டும். அடுத்து வேதவசனத்தை (சபையில்) ஒழுங்காய்க் கேட்க வேண்டும்.



இந்த வசனத்தை வாசிக்கிறவனும் கேட்கிறவனும், அதின்படி செய்கிறவனும் பாக்கியவான்கள் என்றல்லவா வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. வேத வசனம் நாம் தூங்கும் போது நம்மைக் காப்பாற்றுகிறது. விழிக்கும் போது நம்மோடு கூட சம்பாஷிக்கிறது. (நீதி 6:22) பாதைக்கு தீபமாய், வழிக்கு வெளிச்சமாய் இருக்கிறது.

எந்த மனிதன் ஒழுங்காய் வேத புத்தகத்தை வாசிக்கிறானோ, தேவ சபையில் கொடுக்கப்படும் ஆவிக்குரிய போதகத்தைச் செவிகொடுத்துக் கேட்கிறானோ, அவன் சுத்திகரிக்கப்படுகிறான் மறுரூபப்படுத்தப்படுகிறான்.

### IV. ஜோடிக்கப்பட்டாள் :- (எஸ்தர் 2:13)

சுத்திகரிக்கப்பட்ட ஒவ்வொரு பெண்ணும் அகாஸ்வேருவை சந்திப்பதற்கு முன்பு ஜோடிக்கப்பட்டார்கள் என்று எழுதப்பட்டுள்ளதை சிந்தியுங்கள்.

மணவாளனை சந்திக்கப் போகிற பெண், முதற்கண் முக்கியப்படுத்துவது அலங்காரம் என்பது நாம் அறிந்த உலக வழக்கமல்லவா? அப்படியானால் நமது ஆத்தும மணவாளனை சந்திக்க எத்துணை உயர்வான அலங்கரிப்பு நமக்குத் தேவைப்படுகிறது என்பதை நாம் சிந்திப்பது நல்லது.

மனிதன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ இருதயத்தை பார்க்கிறார். எனவே புறம்பான அலங்கரிப்பை விட உள்ளான மனிதனைக் குறித்து, அதிக அக்கறை உள்ளவர்களாக நாம் வாழ வேண்டியது அவசியம்.

ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள் என்று சங்கீதம் 45:13 -இல் எழுதப்பட்டுள்ளபடி, நாம் உள்ளான மனிதனில் மகிமையின்மேல் மகிமையைத் தரித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இரட்சிப்பின் வஸ்திரத்தையும், துதியின் உடையையும் நீதியின் சால்வையையும் நமக்கு அலங்காரமாக உடுத்திக் கொள்வதோடு அல்லாமல், பரிபூரண பரிசுத்தம் நம்மில் ஜொலிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் என்றும், பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் அவரைத் தரிசிப்பது இல்லை என்றும், ஆவியானவர் சொல்லிருப்பதை நினைவில் வைத்து, ஆவி ஆத்துமா சரீரத்தில் தேவன் விரும்புகிற பரிசுத்தத்தை அலங்காரமாக தரித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

இப்போதெல்லாம் பெந்தெகொஸ்தே விசுவாசிகள் கூட அலங்காரம் செய்து கொள்ள அழகு நிலையங்கள் (பியூட்டி பார்லர்) சென்று வருகிறார்கள். ஏன் சில ஊழியக்காரர்களின் வீட்டார் கூடத்தான் போகிறார்கள் என்று நீங்கள் சொல்வது என் காதில் விழுகிறது; திருப்பிப் போடாத அப்பங்களைக் குறித்து எனக்கு கவலை இல்லை. நீங்கள் இன்னும் பரிசுத்தம் ஆகவேண்டும் என்பதே எனது வாஞ்சை.

பூர்வத்தில் இருந்த பெண்கள் பியூட்டி பார்லர் சென்று அலங்கரிக்கவில்லை, அதைவிட சிறப்பான அலங்கரிப்பை அவர்கள் கொண்டிருந்தார்கள். பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும், **தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்** ( I பேதுரு 3:5) என்று எழுதப்பட்டதுமல்லாமல் சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியே அழியாத அலங்காரம் (I பேதுரு 3:4) என்றும் வேதம் கூறுகிறது.

நம்முடைய அழைப்பு கிருபையாய் வந்தது. அபிஷேகம் கிருபையாய் வந்தது. அது போலவே நம்மை அலங்கரிக்கும் சகலத்தையும் நமது ஆண்டவரே கரிசனையோடு அருளுகிறார்.



அகாஸ்வேருவின் பண்டக சாலையில் இருந்து எவருக்கு எது தேவையோ? எவ்வளவு தேவையோ அவ்வளவும் வழங்கப்பட்டது போலவே, பரலோக பண்டக சாலையில் இருந்து, கிருபையையும், ஆவிக்குரிய வரங்களையும் ஆவியானவர் அபரிமிதமாக அருளுகிறார்.

இங்கே ஒரு காரியத்தைக் குறித்து எச்சரிக்கை உடையவர்களாய் இருக்க வேண்டும். தேவன் இலவசமாய் எதைக் கொடுக்கிறாரோ, அதை வாங்க மறுக்கிறவர்களுக்கும் வாங்கி மறுதலிப்பவர்களுக்கும் மிகக்கடுமையான நியாயத்தீர்ப்பு வைத்திருக்கிறார் என்பது நடுக்கத்திற்குரிய காரியம்.

இயேசு சொன்ன உவமையைக் கவனியுங்கள், திருமண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்கள் வராததினால், வழியில் இருந்த அனைவருக்கும் இலவச அழைப்புக் கொடுத்தான். அழைப்பு மாத்திரம் அல்ல அனைத்தும் இலவசமே. ஆனால் நடந்தது என்ன தெரியுமா? ராஜா விருந்தாளிகளைப் பார்க்க உள்ளே வந்து, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனிதனைப் பார்த்து, இவனைப் புறம்பான இருளில் போடுங்கள் (மத் 22:12,13) என்று கட்டளையிட்டார்.

விருந்தாளிக்கே இந்த கதி என்றால், மணவாட்டிக்கு என்ன நிலை என்று யோசித்துப் பாருங்கள். அவர் வரும் போது நீங்கள் நிர்வாணிகளாய் - நிர்கதியாய், நிலை குலைந்து நிற்காதபடி நிமிர்ந்து நில்லுங்கள். நீதியை நடப்பியுங்கள். நீதியின் வஸ்திரத்தைத் தரித்திருங்கள்.

சூலமித்தியாளைப் போல் (உன் 5:3) வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேனே! என்று கதைக்காதீர்கள். எங்கள் தீவட்டிகளுக்கு எண்ணெய் இல்லையே! என்று புத்தியில்லாத கன்னிகைப் போல் புலம்பாதீர்கள்.

பிரியமான தெய்வ பிள்ளையே, உங்கள் இரட்சிப்பின்

இன்றைய நிலை என்ன? உங்கள் ஆயத்தம் எப்படி? உங்கள் வஸ்திரம் எப்படி இருக்கிறது? வாசித்துக் கொண்டே யோசியுங்கள். யோசித்துக் கொண்டே நிற்க வேண்டிய இடத்திற்கு வந்து நில்லுங்கள்.

நீங்கள் வெற்றிப்பாதையில் நடந்து கொண்டு இருக்கிறீர்களா? அல்லது வெற்றுக் கோஷத்தில் நலிந்து கொண்டு இருக்கிறீர்களா? உங்கள் வஸ்திரம் நெருப்பில் வெந்து போயிற்றா? (நீதி 6:27) அல்லது அழுக்காய் போயிற்றா? (சகரியா 3:3) அல்லது விலகிக் கிடக்கிறதா? (ஆதி 9:21)

கவலையை விடுங்கள். கர்த்தரின் கண்களில் உங்களுக்கு இன்று கிருபை உண்டு. நீ உடுத்திக் கொள்வதற்கு வெண்வஸ்திரங்களை வாங்கிக் கெள்ள வேண்டுமென்று... உனக்கு ஆலோசனை சொல்கிறேன் என்று கர்த்தர் சொல்கிறார். (வெளி 3:18)

வஸ்திரத்தை உடுத்தி, வாசனை வீசி, அலங்கரிப்போடு அவருக்காய்க் காத்திருங்கள். அவர் வரும் போது அதில் அவர் பிரியப்பட்டு உங்களை அழைப்பார். கரங்களில் அணைப்பார்.

## V. நியமத்திற்குக் கட்டுப்பட்டவள் :-

நூற்று இருபத்தேழு நாடுகளில் இருந்து அநேகம் பெண்கள் கன்னிமாடத்திற்கு வந்தார்கள். இங்கே ஒரு குறிப்பிட்ட காரியத்தை நீங்கள் சரியாய் கவனிக்க வேண்டும். எல்லா பெண்களுமே அழைக்கப்பட்டவர்கள் - ரூபவதிகள்.

அதுமட்டுமா? ஒரே கன்னிமாடத் தலைவன் - ஒரே விதமான போஷாக்கு ஆனால் எல்லோரும் தெரிவு செய்யப்படவில்லை. இந்தக் கூட்டத்தில் எஸ்தர் தெரிவு செய்யப்பட்டது ஏன் என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

இங்கே ஒரு வசனம் உங்களுக்கு நினைவு வருகிறதா?



வயல்வெளியில் உள்ள இருவரில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார். - ஒருவர் கைவிடப்படுவார். திரிகை திரிக்கும் இருவரில் ஒருவர் எடுத்துக்கொள்ளப்படுவார் ஒருவர் கைவிடப்படுவார். ஒரே படுக்கையில் உள்ள இருவரில் ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார். ஒருவர் கைவிடப்படுவார். இந்த வசனம் இங்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய ஒன்று.

கன்னிமாடத்தில் ஆயத்தமான பெண்கள் கூட்டத்தில், கைவிடப்பட்டது ஒரு கூட்டம், ஏற்றுக் கொள்ளப்பட்டது ஒரு கூட்டம் என்று வைத்துக் கொள்வோம். இப்படித்தான் கர்த்தரின் வருகையின் போதும் நடக்கப் போகிறது என்பது தெளிவு.

ஒரு பெரும்பகுதி கைவிடப்படுவார்கள் ஒரு சிறிய கூட்டம் எடுத்துக் கொள்ளப்படும். நீங்கள் இந்த இரண்டு வகைக் கூட்டத்தில் எந்தக் கூட்டத்தில் இருக்கப் போகிறீர்கள்? விரும்புகிறீர்கள்?

ஒரே சபை, ஒரே போதகர், ஒரே கால அளவு இவைகளுக்கு அப்பால் எஸ்தருக்கு மட்டும் இந்த அந்தஸ்து கிடைக்க என்ன சிறப்பு தகுதி இருந்தது என்பதை யோசித்துப் பாருங்கள்.

யேகாய் நியமித்த காரியமேயல்லாமல் வேறொன்றும் கேட்கவில்லை (எஸ்தர் 2:15) இந்தத் தகுதியே எஸ்தரிடம் காணப்பட்ட கூடுதல் தகுதியானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இராஜாவை சந்திக்கப்போகும் பெண் எதை வேண்டுமானாலும் கேட்டுப் பெற்றுக் கொள்ள சுயாதீனம் கொடுக்கப்பட்டு இருந்தது உண்மை தான். ஆனால் எஸ்தரோ யேகாய் நியமித்த காரியங்களை மட்டும் கேட்டுப் பெற்றுக் கொண்டு சென்றாள்.

விசுவாசிகள் இங்குதான் ஒரு காரியத்தை கவனித்துத் தெளிவு பெற வேண்டும். நீங்கள் மணவாட்டியாக மாற உங்களுக்கு சபையில் உங்கள் போதகரால் அளிக்கப்படும் சத்தியம் – உபதேசம் ஆகியவற்றில் உண்மை உள்ளவர்களாய் இருங்கள். அதுவே போதும்.

அதை விடுத்து அங்கும் இங்கும் அலைந்து கண்ட உபதேசங்களைக் கேட்டு குழம்பி – குழப்பி அதிக நீதிமான்களாக உங்களைக் காட்டிக் கொள்ள விரும்பி, நூதன சீஷனாக மாறிவிடாதீர்கள். நீங்கள் கற்று நிச்சயித்துக் கொண்ட சத்தியத்தில் உண்மையாய் இருங்கள். அதுவே உங்களை மணவாட்டியாக மாற்றும்.

மாதா மாதம் புது சபைக்கு ஓடி புதுப்புது உபதேசங்களைப் படித்து கறைபடாதீர்கள் – அது உங்கள் அழைப்பை பலவீனப்படுத்தும்.

பிரியமானவர்களே! அநாதையான எஸ்தர் அரசியான விதத்தைப் பாருங்கள். அவள் அழைப்பைக் காத்துக் கொள்ள அடைந்திருந்த அனுபவங்களை நீங்களும் பெற்றுக் கொள்ளுங்கள்.

கன்னிமாடமாகிய சபை, யேகாய் என்னும் ஊழியர், சுத்திகரிப்பு என்னும் வேத உபதேசம், அலங்காரம் என்னும் பரிசுத்தம், நியமங்களாகிய சபை ஒழுங்கு இவைகளில் நீங்கள் நிலைத்து இருந்தால் நீங்களே மணவாட்டி.

# 8. நட்சத்திரமாகிய எஸ்தர்

அத்சாள் என்ற பெயர் என்ன காரணத்திற்காக எஸ்தர் என்று மாற்றப்பட்டது என்று தெரியவில்லை. ஆனால் எஸ்தரின் பூர்வீகம் எதுவென்று தெரியக்கூடாது என்று மொர்தெகாய் விரும்பியபடியால், அவளின் எபிரேயப் பெயரைக் கூட மொர்தெகாய் பெர்சியப் பெயராக மாற்றியிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

பெயர் மொழி மாற்றம் செய்யப்படவில்லை, மாறாக அர்த்தமே மாறும் பெயர் வைத்தது தேவச் செயலாகத்தான் இருக்கும். எஸ்தர் என்றால் நட்சத்திரம் என்று பொருள். உண்மையில் மிருதுக் கொடிக்கு ஒப்பான அத்சாள் நட்சத்திரத்திற்கு ஒப்பான வாழ்வு வாழ்ந்தபடியால் எஸ்தர் என்ற பெயர் அவளுக்கு சாலப் பொருத்தமே.

நட்சத்திரம் எனற வார்த்தை வேதபுஸ்தகத்தில் மூன்று விதத்தில் உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது முதலாவது, வெளி 22:16 – ஐ வாசித்துப் பாருங்கள. நான் .... பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன். என்று இயேசு தம்மை நட்சத்திரத்திற்கு ஒப்பிட்டுப் பேசியுள்ளார்.

இரண்டாவது, வெளிப்படுத்தல் 1:20 – ஐ வாசித்துப் பாருங்கள். அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம் என்று நட்சத்திரங்களை ஊழியர்களுக்கு அடையாளமாக இயேசு காண்பித்துள்ளார்.

மூன்றாவதாக, தானியேல் 12:3 – ஐ வாசித்துப் பாருங்கள். அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போல(வும்) ... பிரகாசிப்பார்கள் என்று ஆத்தும ஆதாயகர்களை நட்சத்திரத்தோடு ஒற்றுமைப்படுத்தி ஆவியானவர் குறித்துள்ளார்.

எனவே நட்சத்திரம் என்பது – ஒரு புறம் இயேசுவையும், மற்றொரு புறம் ஊழியர்களையும், இன்னொரு புறம் ஆத்தும ஆதாயம் செய்யும் விசுவாசிகளையும் குறிக்கும். இந்த மூன்று கூட்டத்தினருக்கும் நட்சத்திரமாகிய எஸ்தர் நல்ல முன் நிழலாட்டமாக இருக்கிறாள்.

எஸ்தர் என்ற பெயர் வைக்கப்பட்டதற்கு அவள் அழகு ஒரு காரணமாக இருக்கலாம். மிருதுக் கொடி எல்லாக் காலத்திலும் பச்சைபசேல் என்று இருக்கும். அது போலத்தான் அழகு வாய்ந்தவளாக அவள் இருந்திருப்பாள். அதை விட மிக முக்கியமான காரியம் ஒன்று உண்டு. மொர்தெகாயின் தூரப்பார்வையில் முழு யூதர்களுக்கும் எதிர்கால நம்பிக்கை இந்த அத்சாள் என்று அறிந்தபடியால், அவளுக்கு எஸ்தர் என்று பெயரிட்டு இருப்பார் என்று ஆவியில் உணர்கிறேன்.

சரீர அழகில் மற்றவர்கள் முன்பு நட்சத்திரமாக எஸ்தர் ஜொலித்தது மாத்திரமல்ல, சுபாவத்திலும் நட்சத்திரமாக எஸ்தர் பிரகாசித்தாள் – மட்டுமா? தன் ஜனத்திற்கே வழிகாட்டும் ஒப்பற்ற நட்சத்திரமாக விளங்கினாள்.

## எஸ்தரும் இயேசு கிறிஸ்துவும் :-

எஸ்தர் புத்தகத்தில் வெவ்வேறு அதிகாரத்தில் வரும் இரண்டு வசனப்பகுதிகளின் கோர்வையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நான் முதன் முதல் எஸ்தர் புத்தகத்தை வாசித்தபோது என்னைக் கவர்ந்த பகுதியும், சிந்திக்க வைத்தப் பகுதியும், பின்னர் பிரசங்கிக்க வைத்த பகுதியும் இது தான்.

சூசான் நகரம் கலங்கிற்று (எஸ்தர் 3:15)

சூசான் நகரம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது எஸ்தர் (8:15)

இந்த வசனத்தில் பொதிந்துள்ள பின் வரலாற்றைப்



பாருங்கள். சூசான் நகரத்தின் இரண்டு அனுபவம்; கலக்கம் முதல் அனுபவம், ஆர்ப்பரிப்பு இரண்டாவது அனுபவம். கலக்கத்திற்குக் காரணம் மரணத்தீர்ப்பு. களிப்பிற்குக் காரணம் மரண ஆக்கினையினின்று மாபெரும் விடுதலை.

இங்கே உலகத்தின் மேல் உள்ள மரண ஆக்கினையும் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தையும் நினைவுகூற முடிகிறதா?

சூசான் மக்களின் மேல் ஆமானின் செயலால் மரண ஆக்கினை வந்தது போல், பிசாசின் தந்திரத்தினால் முழு உலகின் மேலும் மரண ஆக்கினை வந்தது. எஸ்தர் தனது ஜீவனைப் பணையம் வைத்து அகாஸ்வேருவின் சமூகத்தில் பிரவேசித்து மரண தண்டனையை மாற்றியது போல் நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவும் மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்து மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரதான ஆசாரியர் பிரவேசிப்பது போல், பிதாவின் சமுகத்தில் பிரவேசித்தார்.

மரண ஆக்கினையினின்று முழு உலகத்தையும் மீட்டு இரட்சித்தார். மரண ஆக்கினையினின்று விடுதலையாக்கினது மாத்திரமல்ல. ஆமானை எஸ்தர் அழித்தது போலவே இயேசுவும் சாத்தானின் தலையைக் கல்வாரி சிலுவையில் நசுக்கிப் போட்டார்.

மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தால் அழித்து, ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலையாக்கினார் (எபி 2:14,15).

பிரியமானவர்களே இங்கு உங்களுக்குச் சில தனியான காரியங்களை சொல்ல விரும்புகிறேன். உங்களுக்கு விரோதமாக ஆமான் எழும்பிப் பல தடைகளை – சுமைகளை

உங்கள் முன்பு அல்லது மேல் வைக்கலாம். அதனால் நீங்கள் கலங்கி நம்பிக்கை இழந்து தவிப்போடு இருக்கலாம். சூசான் நகரம் கலங்கியது உண்மை. ஆனால் அது களிப்பாக மாற்றப்பட்டதை மறந்து விடாதீர்கள்.

உங்கள் கண்ணீர் களிப்பாக மாறும். யூதர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாய் எஸ்தர் இருந்தது போல் நமது விடிவெள்ளி நட்சத்திரமாகிய இயேசு நம்மோடு இருக்கிறார். உங்கள் சத்துரு உங்களை மேற்கொள்ள அவர் அனுமதிக்க மாட்டார்.

இந்த புத்தகத்தை வாசிக்கும் என் அருமை வாசகரே, நீங்கள் இதை வாசிக்கும் போதே பல கலக்கத்தின் மத்தியில் இருக்கலாம். இதோ உங்களின் துயர் துடைக்கும் ஆண்டவரின் வாக்குத்தத்தங்கள். அவைகள் உங்களுக்கென பிரத்தியேகமாக அருளப்பட்ட தீர்க்கதரிசனங்கள்.

விசுவாசித்தவளே பாக்கியவதி கர்த்தரால் சொல்லப்பட்டது அவளுக்கு நிறைவேறும் என்ற வசனத்தை மனதில் கெண்டு இப்போது நீங்கள் வாசிக்கப் போகும் அடுத்த வரிகள் உங்களில் – உங்களுக்காக கிரியை செய்யப் போகிறது என்று நம்பி பெலன் அடையுங்கள்.

இதோ அந்த வார்த்தை வாசித்துப் பாருங்கள் – காரியம் மாறுதலாய் முடிந்தது (எஸ்தர் 9:1) ஆம் தெய்வப்பிள்ளையே, வீணாகக் கலங்காதே! பதறாதே இப்படி ஆகிவிடுமோ என்று அஞ்சாதே. காரியம் மாறுதலாய் முடிந்தது இதை உனக்காகக் கர்த்தரே செய்வார்.

யூதர்களைப் பழிவாங்க எந்தத் தேதி குறிக்கப்பட்டதோ அதே தேதியில் யூதர்கள் தங்கள் பகைவர்களைக்



கொன்றார்கள். காரியம் மாறுதலாய் முடிந்தது.

இதோ! வேத வசனத்தை கவனித்துப் பாருங்கள், பாடையில் பயணித்தவன் பத்திரமாய் வீடு திரும்பினான். கழுதையைத் தேடிக் கொண்டு போனவன் ராஜாவாய்த் திரும்பி வந்தான் – காரியம் மாறுதலாய் முடிந்தது.

இன்று இதை வாசிக்கும்போதே உனது பிரச்சனையை நமது நம்பிக்கை நட்சத்திரமாகிய இயேசு மாறுதலாய் முடித்துத் தருவார்.

எஸ்தரின் பரிந்து பேசுதல் முடிந்து போன ஒன்று, முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட ஒன்று. ஆனால் இயேசு இன்றும் பிதாவின் வலதுபாரிசத்தில் நின்று நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டே இருக்கிறார். (I யோவான் 2:1)

## எஸ்தரும் ஊழியர்களும் :-

ஒரு ஊழியரிடம் காணப்பட வேண்டிய உயர்ந்த பண்புகளை நட்சத்திரமாகிய எஸ்தரின் வாழ்வில் காண முடிகிறது. ஊழியன் என்பவர் யார் தெரியுமா? அழிந்து போகும் ஜனத்திற்காகத் தன்னை அழிக்க ஒப்புக் கொடுத்து ஜனங்களை மீட்க திறப்பில் நிற்பவரே தேவன் விரும்பும் ஊழியர்.

அழிந்து போகும் இஸ்ரவேலர்க்காய்த் திறப்பில் நின்று என் பேரை கிறுக்கிப் போடும், இந்த ஜனங்களை விட்டு விடும் என்று பரிந்து பேசின மோசே ஒரு சூப்பர் ஸ்டார். நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம் என்று தன்னைத் தாழ்த்தி திறப்பில் நின்ற நெகேமியா ஒரு சூப்பர் ஸ்டார்.

உண்மையுள்ள ஊழியன் என்பது அவர் செய்யும் பிரசங்கத்தை வைத்துக் கொடுக்கப்படும் சாட்சியல்ல, தேவ

ஜனத்திற்காகத் தன்னைத் தாழ்த்தி உபவாசித்து ஜெபிக்கும் ஜெபத்தின் அடிப்படையில் வழங்கப்படுவதே அந்த சாட்சி.

ஆத்தும ஆதாயப்பணியில் நம்மால் இது கூடாது என்று எதை நினைக்கிறோமோ, அதை மிகச் சுலபமாக சாதிக்க மிகச்சிறந்த ஒரு வழி உண்டு. அது சாதுர்யப் பிரசங்கமோ, அதிநவீன அறிவியல் கருவிகள் கொண்டு செய்யப்படும் நவீனமுறை ஊழியமோ அல்ல, அது ஊக்கமான உபவாசமே.

உபவாசத்தின் வலிமை எத்தகையது என்பதை நமக்கு எடுத்துக்காட்டவே ஆவியானவர் எஸ்தர் புத்தகத்தை நமக்குச் சாட்சியாக வைத்திருக்கிறார் என்று நம்புகிறேன். 40 நாட்கள் மோசே உபவாசித்தார். இயேசுவும் உபவாசித்தார். தானியேல் 21 நாட்கள் உபவாசித்தார். ஆனால் **3 நாள் உபவாசத்தில் தேசத்தின் அதிபதியை, சாத்தானின் சதித்திட்டத்தை - தலை கீழாக மாற்றிய சாட்சி எஸ்தரின் உபவாசத்திற்கு மாத்திரமே உண்டு.**

அன்பு ஊழியரே! உங்கள் ஊழியத்தில் பல்வேறு அதிகாரக் குறுக்கீடுகள் இருக்கலாம், உங்கள் ஊழிய ஸ்தலத்தை எடுக்க - இடிக்க சில எதிர்த்திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கலாம். சில ஆமான்கள் உங்களையும் உங்கள் ஊழியத்தையும் முடித்துக் காட்டுகிறேன் என்று முஷ்டியை உயர்த்திக் காட்டியிருக்கலாம்.

இதற்காக எந்த வக்கீலிடம் போகலாம் என்று யோசிக்காதீர்கள். வக்கீல்கள் வாதம் பொய்த்துப் போகும், கால தாமதம் ஆகும். ஆனால் 3 நாள் உபவாசத்தை உங்கள் சபையில் வைத்துப் பாருங்கள். இதை விட சிறந்த ஆயுதமோ, யுத்த முறையோ ஊழியத்தில் கிடையாது.

சபையைக் கூட்டுங்கள். சங்கதியைச் சொல்லுங்கள்.



உடைந்த உள்ளத்தோடு உபவாசித்து ஜெபியுங்கள். தானியேல் ஜெபிக்கத் துவங்கிய உடனே (தானி 10:12) கர்த்தர் கேட்டு பதில் செய்தது போல உங்களுக்கும் பதில் செய்வார்.

என்னுடைய ஊழியத்தில் பலமுறை இப்படிப் பாதிப்புகளை சந்தித்திருக்கிறேன். ஆனால் பாதிப்பு அடைந்ததில்லை. அதற்கு ஒரு காரணம் பாதிப்பு வரும் போதே எஸ்தரின் மாதிரியைப் பின்பற்றி தேவனை இயங்க வைத்து விடுவோம். என் கரங்களின் கிரியையைக் குறித்து எனக்குக் கட்டளை கொடுங்கள் என்று அவர்தான் சொல்லியுள்ளாரே அப்புறம் என்ன கவலை.

உடனே சபையைக் கூட்டி விடுவேன். நானும் எனது மனைவியும் சபையாரும் சேர்ந்து உபவாசம் பண்ணுவோம். (எஸ்தர் 4:16) அப்போதே கோட்டைகள் இடியும். அக்கினியாஸ் திரங்கள் அணைந்து போகும். உங்கள் ஊழியம் சிறக்க நீங்கள் நட்சத்திரமாய் ஜொலிக்க உபவாசத்தில் ஜெபிக்கத் துவங்குங்கள், வளருங்கள்.

## எஸ்தரும் விசுவாசிகளும் :-

எஸ்தரைப் போல ஒரு நான்கு விசுவாசிகள் ஒரு சபையில் இருந்து விட்டால் அந்த சபையைப் போன்று ஆசீர்வதிக்கப்பட்ட சபை வேறு இருக்க முடியாது.

சபையின் இன்றைய தேவை வாய்கிழியப்பேசும் விசுவாசிகள் அல்ல, இருதயத்தைக் கிழித்து ஜெபிக்கும் விசுவாசிகள்.

ஒரு சில விசுவாசிகள் ஆரம்ப காலத்தில் மிக பாரத்துடன் சபைக்காய், ஊழியத்திற்காய் அதிகம் ஜெபிப்பார்கள். ஆனால் சற்று பணம் வந்து விட்டாலோ, அல்லது விரும்பிய ஆசீர்வாதம்

வந்துவிட்டாலோ போதும், ஜெபத்திற்கு ரேஷன் அட்டை வழங்கி விடுகிறார்கள்.

எனக்கன்பானவர்களே! நட்சத்திரமாய் ஜொலித்த எஸ்தரைப் பாருங்கள். தனது ஏழ்மையில் இருந்த காலங்களை விட உயர்வில் உபவாசித்து தனது ஜனத்தை விடுவித்ததில் எத்துணையாய் உயர்ந்து நிற்கிறாள்.

நான் உங்களைக் கேட்கிறேன். உண்மையாய்ப் பதில் சொல்லுங்கள் திருமணத்திற்கு முன்பு இருந்ததை விட இப்போது ஊழியத்தில் / ஜெபத்தில் உங்கள் ஈடுபாடு உயர்ந்திருக்கிறதா? குறைந்திருக்கிறதா?

உங்களுக்கு வேலை கிடைப்பதற்கு முன்பு இருந்த நிலையை விட உங்கள் ஈடுபாடு ஊழியத்தில் ஜெபத்தில் குறைந்துள்ளதா? கூடியுள்ளதா?

உங்கள் கடன் பிரச்சனை தீர்ந்த பிறகு முன்பு இருந்த நிலையை விட ஊழியமும் ஜெபமும் கூடியுள்ளதா? குறைந்துள்ளதா?

இப்படி ஆயிரம் கேள்விகள் கேட்க முடியும். நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

**குழந்தைப் பேறும், குடும்ப ஜீவியமும் ஏனோக்கின் ஜெபஜீவியத்தைக் குறைக்கவில்லை. ராஜபதவியும் யுத்தக்களமும் தாவீதின் ஜெப வாழ்விற்குக் குந்தகம் உண்டாக்கவில்லை. செல்வத்திரட்சியும் ஆடுமாடுகளின் பெருக்கமும் ஆபிரகாமின் ஜெப வாழ்க்கையைக் கட்டுப்படுத்தவில்லை, ஏன்? வியாதியும் வேதனையும் கூட யோபின் ஜெபத்தை சேதப்படுத்தவில்லை. சட்டங்களும் சதித்திட்டங்களும் தானியேலின் ஜெபத்தைத் தடை**



**செய்யவில்லை.**

விசாலத்தில், விடுதலையான சூழ்நிலையிலுள்ள உங்களின் உபவாசமும், ஜெபமும் எந்த நிலையில் உள்ளது என்பது நிச்சயம் நீங்கள் ஆராய்ந்து வகைப்படுத்த வேண்டிய ஒன்று.

சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடு செத்தவள். உபவாச ஜெபவாழ்க்கையோ, செத்த கிரியை நீங்க நம்மை சுத்திகரிக்கும் உன்னதமான மா மருந்து என்பதை மறந்துவிடக்கூடாது.

தனது இக்கட்டான அரண்மனை வாழ்வு ஒரு புறம் – பகட்டான ராஜ வாழ்வு ஒரு புறம் இவைகளுக்கிடையில் தன் இன ஜனத்திற்காக ஜெபித்தது எத்துணை சிறப்பு என்று யோசியுங்கள். அஃதினை மனதில் கொண்டு நமது தேசத்திற்காக பாரத்தோடு ஜெபியுங்கள்.

உபவாசித்து ஜெபித்தது மாத்திரமல்ல தேவன் தன்னை எதற்காக அழைத்தாரோ! உயர்த்தினாரோ அந்த நோக்கத்தை எஸ்தர் தனது வாழ்வில் நிறைவேற்றியது மிகச்சிறந்த செயலாகும். எஸ்தருக்கு செய்தி அனுப்பும் போது மொர்தெகாய் சொல்லியனுப்பியதைச் சற்று சிந்தியுங்கள், நீ இப்படிப்பட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே யாருக்குத் தெரியும் என்று சொல்லச் சொன்னான் (எஸ்தர் 4:14)

ஆம் கர்த்தர் நமக்குத் தரும் வேலை மற்றும் சமுதாய அந்தஸ்து இவைகளுக்கு ஒரு பெரிய காரணம் உண்டு. தேவனுடைய ஜனத்திற்கு நாம் உதவ வேண்டும் என்பதே அந்தப் பெரிய நோக்கம் என்பதை அறியுங்கள்.

யோசேப்பை எகிப்தின் அதிபதியாக தேவன் உயர்த்தியதற்குக் காரணம், தன் சகோதரர் முன்பு அவன் செல்வத்தோடு வாழ வேண்டும் என்பதற்காக அல்ல, அதைத் தெளிவாய் உணர்ந்த யோசேப்பு பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும் பெரிய இரட்சிப்பினால் உயிரோடு காப்பதற்காவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார் (ஆதி 45:7) என்று அழகாய் தன் சகோதரரிடத்தில் சொல்கிறார்.

உங்களை உயர்வான ஸ்தானத்தில் உத்தியோகத்தில் கர்த்தர் வைத்து இருப்பாராகில், உங்களால் முடிந்த அளவு தேவ ஜனத்திற்கு உதவியாக இருங்கள். அவர்கள் இக்கட்டில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள். நன்மை செய்யத் திராணியிருந்தும் அதை செய்யத்தக்கவர்களுக்கு செய்யாதிருப்பது பாவம் என்று வேதம் சொல்கிறது.

ஆகாப் ராஜாவின் காலத்தில் தீர்க்கதரிசிகளுக்கு மிகப்பெரிய ஆபத்து யேசபேலினால் உண்டாயிற்று. தேசத்திலோ கொடிய பஞ்சம். அந்நாட்களில் அரண்மனை விசாரிப்புக்காரனாக **ஒபதியா** என்ற மனிதன் இருந்தான். (I இராஜா 18:3) அவன் கர்த்தருக்குப் பயந்து நடக்கிற மனிதனாய் இருந்தான்.

இவனது செயலை சற்று வேதத்தில் வாசித்துப் பாருங்கள். கர்த்தரின் தீர்க்கதரிசிகள் நூறுபேரை சேர்த்து கெபிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்து வைத்து அவர்களுக்கு அப்பமும் - தண்ணீரும் கொடுத்து அவர்களைப் பராமரித்து வந்தான். (I இராஜா 18:4)

தான் உண்டு தன் வேலை உண்டு என்றோ, நமக்கேன் ஊர் வம்பு என்றோ, ஒபதியா பாராமுகமாய் இராமல் தனக்குள்ள



திராணிக்குத் தக்கதாய் அவன் தேவனுடைய தீர்க்கதரிசிகளைப் போஷித்தான்.

தெய்வப் பிள்ளையே! யோசேப்பைப் போல உன் உயர்வில் சகோதரர்களின் நலனை நாடு, ஒபதியாவைப் போல் தேவ ஊழியர்களின் நலத்தை நாடு, எஸ்தரைப் போல் தேவ ஜனத்தின் நன்மையை நாடு.

அதற்காகவே நீ அழைக்கப்பட்டுள்ளாய். அதற்காவே தேவன் உன்னை அபிஷேகித்துள்ளார். அதற்காகவே ஆசீர்வதித்து அரியணையில் அமரப்பண்ணியுள்ளார். தேவன் விரும்புவதை - எதிர்பார்ப்பதை நீ செய்து முடிப்பாயானால் எஸ்தரைப் போல் நட்சத்திரமாய் ஜொலித்திடுவாய்.

# விண்ணக அப்பம்

அன்பார்ந்தவர்களே,

போதகர். கிறிஸ்டோபர் அவர்களின் புத்தகங்கள் படிக்க இயலாதோருக்காகவும், பார்வையற்றவர்களுக்காகவும் ஆடியோ வடிவில் வெளியிடப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. போதகர், கிறிஸ்டோர் அவர்களின் புத்தகங்கள் ஆடியோ வடிவில் விரைவில் கிடைக்கப் பெற உங்கள் ஜெபத்தினாலும், கரத்தினாலும் தாங்குங்கள்.

அலுவலக தொடர்பு எண் : 94888 56323

இப்படிக்கு,

**Pr. அலெக்ஸ் தினகரன்**



## எமது வெளியீடுகள்

33. எக்ளீசியா
34. சமயத்திற்கேற்ற பிரசங்கக் குறிப்புகள்
35. சிங்கத்தை கிழித்த சிம்சோன்
36. அன்புக்குரிய அப்போஸ்தலர்
37. எலியா
38. தெளிவூட்டும் தேன் துளிகள்
39. முற்றிலும் ஜெயம் பெறுவோம்
40. பிரசங்கிப்போர்க்கு என் ஆலோசனைகள்
41. நீங்கள் தாழ்ச்சி அடைவதில்லை
42. தீர்க்கதரிசியாகிய எலிசா
43. பராக்கிரமசாலியாகிய கிதியோன்
44. தெய்வீக பிரசங்கக் குறிப்புகள்
45. அனல் மூட்டும் பிரசங்கக் குறிப்புகள்
46. ஆவியானவரும் அப்போஸ்தல நடபடிகளும்
47. ஆத்தும ஆதாயகருக்கு என் ஆலோசனைகள்
48. பொருத்தமான பொற்பழங்கள்
49. கர்த்தருடைய பரிசுத்தனாகிய ஆரோன்
50. பிரியமுள்ள பிலேமோன்
51. உத்தமனாகிய எஸ்றா
52. திருமறைக்கு ஓர் அறிமுகம்
53. போதகர் கையேடு
54. சிறுமைபட்டவளின் சிநேகிதி
55. உச்சிதமான பிரசங்கக் குறிப்புகள்
56. அப்போஸ்தலனாகிய அந்திரேயா
57. இயேசுவின் வருகையின் அடையாளங்கள்
58. யோனா தீர்க்கதரிசி
59. எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கு
60. ஆறுதலின் மகன் பர்னபா
61. கடந்து வந்த பாதை
62. பூர்வத்திலுள்ள ஸ்திரீகள்
63. பொற்குவியல்